# விந்தன் கட்டுரைகள்



தொகுப்பாசிரியர்:

மு. பரமசிவம்

# விந்தன் கட்டுரைகள்

தொகுப்பாசிரியர்:
மு. பரமசிவம்

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்
சென்னை-600 003

*Published by*
THE CHRISTIAN LITERATURE SOCIETY
Post Box 501, Park Town, Chennai-600 003.

**VINDAN KATTURAIGAL**

*Compiled by* M. Paramasivam

© CLS

*First Printed in March, 1998*

PRINTED AT THE CLS PRESS. VEPERY. CHENNAI-7 L6361

# காணிக்கை

'கல்கி' அச்சக முன்னாள் போர்மேன்

அமரர் **டி. எம். இராஜாபாதர்**

அவர்கட்கு

# பதிப்புரை

சிறந்த சிறுகதை எழுத்தாளராகவும் அங்கதச் சிந்தனையாளராகவும் திகழ்ந்து அரிய பல படைப்புகளை வழங்கிப் படைப்புலகில் தடம் பதித்து சென்றிருக்கும் எழுத்தாளர் திரு. விந்தன் அவர்கள் என்பதை அன்பர்கள் அறிவார்கள். நாற்பதுகளின் தொடக்கத்தில் 'கல்கி' இதழில் சிறுகதைகள் எழுத ஆரம்பித்து **கண்திறக்குமா?** மற்றும் **பாலும் பாவையும்** போன்ற நாவல்களையும் எழுதிப் புகழ் பெற்ற பெருமை அவருக்கு உண்டு. **முல்லைக் கொடியாள், ஒரே உரிமை, சமுதாய விரோதிகள், விந்தன் கதைகள், ஏமாந்து தான் கொடுப்பீர்களா?, இதோ ஒரு மக்கள் பிரதிநிதி** ஆகிய நூல்களில் அவர் ஏறத்தாழ முப்பது ஆண்டுக் காலத்தில் எழுதிய சிறுகதைகள் தொகுக்கப் பெற்றுள்ளன. அவை ஒவ்வொன்றின் மூலமாகவும் அவர் மக்கள் எழுத்தாளர் என்பதை நாம் புரிந்துகொள்ள முடிகின்றது. கதை சொல்லிச் செல்லும் பாங்கில் அங்கதமும், ஆரோக்கியமான நகைச்சுவையும் இணைந்து வெளிப்படுவதைக் காணலாம். கதைகளில் மட்டுமல்லாமல் உரைநடையில் அவர் எழுதிய கட்டுரைகளிலும் இதனைக் கண்டு மகிழலாம். எந்தப் பொருளைப் பற்றி எழுதினாலும் எத்தகு மனிதர்களைப் பற்றிய வரை படத்தைத் தர முயன்றாலும் அவர் தம்முடைய வாசகர்களை நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாகவே வைத்துக் கொண்டு எழுதினார். சுரண்டும் வர்க்கங்களின் மீது அவருக்கு இருந்த கோபமும் வெறுப்பும் அவருடைய எழுத்துக்களில் வெளிப்படவே செய்கின்றது.

இந்நூலில் அடங்கும் கட்டுரைகளில் பாரதி, பாரதிதாசன், கவிமணி, புதுமைப்பித்தன் ஆகியோரிடம் அவருக்கிருந்த பற்றினையும், பாம்பின் கால் பாம்பறியும் என்கிற முறையில்

அவர்கள் வாழ்க்கை நிகழ்ச்சிகள் சிலவற்றை அவர் எடுத்துச் சொல்லும் பற்றும், பாங்கும், நம் உள்ளத்தைத் தொடவே செய்கின்றன. தம் காலத்தவர்கள் எழுதிக் குவித்துக் கொண்டிருந்த சொத்தை சோடை படைப்புகளைப் பற்றி ஆங்காங்கே விமர்சனம் செய்வதோடு, தம்முடைய **கண் திறக்குமா** நாவல் அவர் ஒரு புனைபெயரில் எழுதியது பேராசிரியர் கல்கிக்குத் தெரிய வந்தபோது அவர்களுக்கிடையே இருந்த உரையாடலையும் உள்ளது உள்ளவாறே எடுத்துரைக்கின்றார் மக்கள் எழுத்தாளர் விந்தன். அவருடைய நூல்களுக்கு அவர் எழுதிய முன்னுரை — முடிவுரை போன்றவையும் சில வார இதழ்களில் வெளிவந்த கட்டுரைகளும் இந்நூலில் அடங்கியுள்ளன. 1953ஆம் ஆண்டு தொடங்கி சில காலம் அவர் நடத்திய மனிதன் இதழில் அவர் எழுதிய **இந்நாட்டு மன்னர்கள், இதோ ஒரு சுயமரியாதைக்காரர்** ஆகிய கட்டுரைத் தொடர்கள் இந்நூலைச் சிறப்பிக்கின்றன. பண்பு நல நோக்கு என்பது எத்தனை அழகாக அமைய முடியும் என்பதை இக்கட்டுரைகள் எடுத்துரைக்கின்றன. கதைகளில் அவர் படைத்துக் காட்டிய பாத்திரங்கள் உண்மையாய் நாடெங்கிலும் தோற்றம் அளிக்கும் இரத்தமும் சதையும் கொண்ட உண்மை மாந்தர்களே என்பதை அவர் இக்கட்டுரையின் வாயிலாகத் தெரிவிக்கின்றார். அவருடைய சமுதாயப் பார்வை மெய்மைகளைத் தேடுவதாகவும் அவற்றை உள்ளது உள்ளவாறே எழுத்தோவியங்களில் காட்டுவதாகவும் அமைந்திருந்தது. திரை உலகில் **வாழப் பிறந்தவன், அன்பு, கூண்டுக்கிளி** போன்ற தம்முடைய படைப்புகளின் மூலம் அவர் இவ்வாறே தம்முடைய பாத்திரங்களை உயிர்ப்புள்ளவர்களாகப் படைத்துள்ளார் என்பதையும் இங்குக் குறிப்பிட வேண்டும்.

இந்நூலில் அடங்கும் இக்கட்டுரைகளை அரும் பாடுபட்டுத் திரட்டி வரிசைப் படுத்தி வழங்கி இருக்கும் இலக்கிய நண்பர் திரு. மு. பரமசிவம், விந்தன் அவர்களோடு ஐம்பதுகளிலிருந்து

பல ஆண்டுகள் நெருங்கிப் பழகியவர். விந்தனைப் பற்றி அவர் அமுதசுரபி இதழில் எழுதிய ஒரு கட்டுரையை வாசித்த பிறகு எனக்கு அவருடைய நட்பு கிடைக்கலாயிற்று. என்னுடைய வேண்டுகோளுக்கிணங்கி **மக்கள் எழுத்தாளர் விந்தன்** என்ற நூலை எழுதினார். அவரைத் தொடர்ந்து விந்தனைப் பற்றியும், தமிழ் ஒளி, நாரணதுரைக்கண்ணன், வல்லிக்கண்ணன், கு. அழகிரிசாமி ஆகியோரைப் பற்றியும் அவருடைய நூல்கள் வெளிவந்துள்ளன.

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் நடத்தும் இலக்கிய நண்பர் வட்டக் கருத்தரங்குகளில் தொடர்ந்து ஆய்வுக் கட்டுரை எழுதி வரும் திரு. மு. பரமசிவம், விந்தன் ஒரு சிறந்த கட்டுரையாளர் என்கிற உண்மை மங்கி மறைந்து விடாமல் இந்நூலின் வாயிலாக அதனை பளிச்சிட்டுத் தோன்ற வைத்திருக்கின்றார். அவருக்கு எங்களின் உளமார்ந்த நன்றி உரியதாகுக.

எங்களின் சி.எல்.எஸ். அச்சகக் கண்காணிப்பாளர் திரு. தாமஸ் ஸ்டீபன் அவர்கள் எங்கள் நன்றிக்கு உரியவர்.

அன்புடன்

சென்னை
5-3-1998

**டாக்டர் தி. தயானந்தன் பிரான்சிஸ்**
பொதுச் செயலாளர்
கிறிஸ்தவ இலக்கியச சங்கம்

## படிப்பதற்கு முன்...

தற்காலத் தமிழ் இலக்கியத்தில் சிறப்பாக முற்போக்கு இலக்கியத்தில் பல சோதனை முயற்சிகளை மேற்கொண்டு வெற்றிகண்டவர் மக்கள் எழுத்தாளர் விந்தன்.

அந்தச் சோதனை முயற்சிகள் குழந்தைகளுக்கு அவர் எழுதிய 'பாப்பா மலர்' கதைகளில் தொடங்கி 'பசி கோவிந்தம்', 'பாட்டில் பாரதம்' ஆகிய படைப்புகள் வரை அடங்கும்.

''திறமையோடு மொழியின் துணையும் கொண்டு உலகப் புகழ்பெற்ற கீட்சாலும் ஷெல்லியாலும் கவிதைத் துறையில்தான் சிறந்தவர்களாக விளங்க முடிந்தது, ஷேக்ஸ்பியராலும் இப்சனாலும் நாடகத் துறையில்தான் சிறந்தவர்களாக விளங்க முடிந்தது, விக்டர் ஹியூகோவாலும் டிக்கன்சாலும் நாவல் துறையில்தான் சிறந்தவர்களாக விளங்க முடிந்தது, செகாவாலும் மாப்பசானாலும் சிறுகதைத் துறையில்தான் சிறந்தவர்களாக விளங்க முடிந்தது, வோட்ஹௌஸாலும் ஓ ஹென்றியாலும் கட்டுரைத் துறையில்தான் சிறந்தவர்களாக விளங்க முடிந்தது. ஆனால் ஆசிரியர் அவர்களோ எல்லாத் துறைகளிலுமே சிறந்து விளங்கினார், ஒப்பாரும் மிக்காரும் இல்லாத பெருமைக்கு ஆளாகி, அதே சமயத்தில் பலருடைய பொறாமைக்கும் உள்ளானார்கள் ''

பேராசிரியர் 'கல்கி' மறைந்தபோது 'உலகத்துக்கு ஒருவர்!' என்று 'மனிதன்' இதழில் மேற்கண்ட தலையங்கத்தை எழுதினார் விந்தன்

பேராசிரியர் 'கல்கி' குறித்து விந்தன் சொன்ன கருத்து அவருக்கும் பொருந்தும். அந்த அளவுக்கு தமது அறிவை ஆற்றலை தற்காலத் தமிழ் இலக்கியத்துறையில் பயன்படுத்தியிருக்கிறார் விந்தன்.

1947 வரையில் சிறந்த சிறுகதை எழுத்தாளராக அறியப்பட்டவர். அரசியல், பொருளாதாரப் பிரச்சினை களிலும் மிகுந்த ஈடுபாடுடையவர் என்பதை அடையாளப்படுத்தும் வகையில் தொழிலாளர் பிரச்சினைகளை, குறிப்பாக வேலை நிறுத்தங்களை முதன்மைப்படுத்தி ஒரே இரவில் பன்னிரெண்டு தலைப்புகளில் கட்டுரைகள் எழுதி 'வேலை நிறுத்தம் ஏன்?' என்ற பெயரில் சிறிய நூல் ஒன்றைப் படைத்தார்.

'வேலை நிறுத்தம் ஏன்?' என்ற சிறு நூல் தான் விந்தன் எழுதிய முதல் கட்டுரைத்தொகுப்பு.

தமது கருத்துக்களைக் கதைகள் மூலமாகவே சொல்லுவதில் மிகுந்த கவனத்தோடு இருந்த விந்தனை, சில நிகழ்வுகளும் சில நண்பர்களின் வற்புறுத்தலும் கட்டுரைகள் எழுத வைத்தன. அதன் பொருட்டே 'பொன்னி' இதழில், 'புகையிலையும் புதுமைப்பித்தனும்', 'கல்கி'யில் 'நாவல் பிறக்கிறது', ஆனந்த விகடனில் 'எனக்குப் பிடித்த புத்தகம்' ஆகிய கட்டுரைகள் எழுதப்பட்டன.

இந்த மூன்று கட்டுரைகளும் கனமானவை. தமது சமகால எழுத்தாளர் புதுமைப்பித்தன்மீது விந்தன் கொண்டிருந்த மதிப்பையும், அந்த இலட்சியவாதிக்கு தமிழர் சமுதாயம் இழைத்த கொடுமைகளையும் மனக் கொதிப்போடும் கோபத்தோடும் வெளிப்படுத்துபவர். அடுத்து, தமது நாவல்கள் பிறப்பதற்கு இடையூறாக இருந்துவரும்

வறுமையை வசதிகுறைவை எண்ணிப்பார்த்து 'பிறந்தும் வளரமுடியாத' என் நாவல்களை காசால்தான் காப்பாற்றமுடியுமா? கடவுளே உன்னால் காப்பாற்ற முடியாதா?' என்று கண்கலங்கி நிற்பதும், உலகப் புகழ்பெற்ற மாக்கிம் கார்க்கியின் தாய் நாவலில் உரத்த சிந்தனையோடு அமைந்துள்ள உரையாடல்களை அதிலும் காதலர்களிடையே நிகழும் உரையாடலில் வெளிப்படும் நாட்டுப்பற்றை, போர்க்களத்தை நோக்கி காதலர்கள் புறப்படும் எழுச்சியே தமக்குப் பிடித்தமானவை என்று எழுதும்போதும், விந்தனின் இலக்கிய நோக்கு எத்தகையது என்பதைத் தெரிந்துகொள்ள முடிகிறது.

மேலும், பாரதியார், பாரதிதாசன், கவிமணி, கல்கி போன்றவர்களைப் பற்றி எழுதியிருப்பதும் சிறப்பானவை

* * *

விந்தனின் படைப்புகளுக்கு கல்கி முதல் க.நா சு வரை முன்னுரை எழுதியிருக்கிறார்கள் அதில் கல்கியின் முன்னுரை விந்தனை எக்காலத்திலும் எவருக்கும் உண்மையாகவும் உயர்வாகவும் அறிமுகப்படுத்தும் இலக்கியத்தரம் வாய்ந்த முன்னுரை அத்தகைய சிறப்புடைய முன்னுரைகளைத் தனது படைப்புகளுக்கும் பிறரின் எழுத்துகளுக்கும் முன்னுரையாகவும், அணிந்துரையாகவும் எழுதியிருக்கிறார் விந்தன் அவற்றில் 'கண் திறக்குமா?', 'சுயம்வரம்' போன்ற தனது நாவல்களுக்கும், 'சரவிளக்கு' என்னும் இளம் எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுப்புக்கும் எழுதியுள்ள முன்னுரைகளை உதாரணமாகச் சொல்லலாம்

'கண் திறக்குமா?' என்ற நாவலுக்கு விந்தன் எழுதியுள்ள முன்னுரை, சுதந்திரச் சிந்தனையும் சுயமரியாதையும் மிக்க ஒரு எழுத்தாளனுக்கு, வறுமையிலும், வாழ்க்கைப் போராட்டத்திலும் வாழ்ந்துகொண்டிருக்கும் படைப்பாளிக்கு அதிலும் 'நக்கீர'னாக அவதாரம் எடுத்தவருக்கு தமது உரிமையை நிமிர்ந்து நின்று எடுத்துச்சொல்லமுடியாமல், புராணக்காலத்தில் சிவபெருமான் முன் கூனிக்குறுகி நின்ற நக்கீரன்போல், பேராசிரியர் கல்கி முன்னால் குற்றவாளிபோல் நவீனகாலத்து நக்கீரரான விந்தன் நின்ற காட்சியும் அதை விவரிக்கும் விந்தனின் மனநிலையும் மிகவும் வேதனையானது. எனினும், பேராசிரியர் கல்கி அந்த இடத்தில் காட்டிய அன்பும் ஆதரவும் மனிதநேயமிக்கது. அப்பொழுது அவர் கொடுத்த தூண்டுதலில் எழுதப்பட்டதே 'பாலும் பாவையும்' நாவல்

கடைசி காலத்தில் 'சுயம்வரம்' என்ற நாவலுக்கு எழுதியுள்ள முன்னுரையில் விந்தன் தமக்குப் பரிசும் பாராட்டும் கிடைக்கவில்லையே என்று ஆதங்கப்படுவதும், சினிமா மயக்கத்தில் இலக்கியப் பணிகளையும், இலக்கிய நண்பர்களையும் இழக்க நேர்ந்தது மிகப்பெரிய பேரிழப்பு என்று வருந்துவதும், எழுத்தில் காட்டிய கவர்ச்சியை நிசவாழ்க்கையில் காட்டமுடியாததற்காகக் கவலைப் படுவதும் ஒரு சுதந்திர எழுத்தாளனுக்கு வணிகமயமாய் போய்விட்ட இலக்கிய உலகம் உண்டாக்கிய பெரிய சோதனையாகும்.

'சரவிளக்கு' முன்னுரை இளம் எழுத்தாளர்களுக்கு நல்ல எச்சரிக்கை. அதிலும் எழுத்து ஒன்றை மட்டுமே நம்பி வாழநினைக்கும் இளைஞர்களுக்கு எழுத்துலகம் மாயமான் போன்றது வெளியே இருப்பவர்கள் உள்ளே போக

நினைப்பதும், உள்ளே இருப்பவர்கள் வெளியே வர நினைப்பதும் வேடிக்கையான வேதனைமிகுந்த நிகழ்ச்சி என்று அனுபவப்பூர்வமாக அறிவிப்பது.

இதற்கெல்லாம் வித்தியாசமாக அமைந்திருப்பவை 'இந் நாட்டு மன்னர்கள்' 'இதோ சில சுயமரியாதைக்காரர்கள்' போன்ற கட்டுரைகள்.

ஏழை எளியவர்களைப்பற்றி அடக்கி ஒடுக்கப் பட்டவர்களைப்பற்றி எழுதியவர்களில் முன்னோடியான விந்தன் ஆசிரியர், குமாஸ்தா போன்ற நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த 'இந்நாட்டு மன்னர்'களைப் பற்றியும், 'உழைத்தால் முன்னேறலாம்', 'உழையுங்கள், ஓயாமல் உழையுங்கள்!' என்று ஊருக்கு உபதேசம் செய்யாமல், உடலில் ஊனம் இருந்தாலும் உள்ளத்தில் உற்சாகம் பொங்க உழைத்து பிழைப்பவர்களே இச்சமூகத்தில் உண்மையான சுய மரியாதைக்காரர்கள் என்று சிலரை அடையாளம் காட்டு கிறார்.

கட்டுரைத் துறையில் விந்தனின் பங்குப்பணி சிறிதே எனினும் அவையும் சிறப்பாக அமைந்திருப்பதற்கு இந்தக் கட்டுரைத் தொகுப்பு சிறந்த உதாரணம்.

விந்தன் கட்டுரைகளைத் தொகுத்து நூலாக்கும் முயற்சியில் சில ஆண்டுகளாக ஈடுபட்டிருந்த நான், சில மாதங்களுக்கு முன் கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தின் செயலாளரும், கவிஞரும், எழுத்தாளருமான **டாக்டர் தீ. தயானந்தன் பிரான்சிஸ்** அவர்களிடம் என் முயற்சியை தெரிவித்தபோது, என் இலக்கியப் பணிக்குத் தொடர்ந்து வெளிச்சம் காட்டிவருவதற்கு அடையாளமாக என் முயற்சியை மகிழ்ச்சியுடன் வரவேற்று இக்கட்டுரைத்

தொகுப்பை சிறப்பான முறையில் வெளியிட்டிருக்கிறார். அவருக்கு என் மனப்பூர்வமான நன்றியை, பாராட்டை வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்

இக்கட்டுரைத் தொகுப்பு சிறப்பான முறையில் உருவாவதற்கு **டாக்டர் தயா** அவர்கட்கு துணைபுரிந்த பதிப்பாசிரியர் சகோதரி ஸ்வீட்லின் பிரபாகரன், எம்.ஏ. அவர்கட்கும், சி.எல்.எஸ். அச்சகத் தொழிலாளத் தோழர்கட்கும், கட்டுரைகளைத் திரட்டுவதில் எனக்குப் பெரிதும் உதவியவரும், தமது தந்தையாரின் படைப்புகள் அனைத்தையும் வெளியிடுவதில் நேரும் சிரமங்களைப் பாராமல் அக்கறையும் ஆர்வமும் காட்டிவரும் விந்தனின் புதல்வர் தம்பி சூர்யமூர்த்திக்கும் மற்றும், சில கட்டுரைகளைக் கொடுத்துதவிய பேராசிரியர் தி.வ. மெய்கண்டார் வெளியிட்ட பத்திரிகையாசிரியர்கள் அனைவருக்கும் என் மனப்பூர்வமான நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தோழமையுள்ள,
**மு. பரமசிவம்**
சென்னை - 78

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பாரதி வாழ்ந்த பாண்டி<br>(தினமணிக் கதிர்) | .. | 1 |
| 2. | பாரதிதாசனின் குடும்பவிளக்கு<br>(தினமணிக் கதிர்) | .. | 12 |
| 3. | ஒப்பற்ற கவி<br>(பொன்னி—1951) | .. | 14 |
| 4. | கவிமணியும் காலனும்<br>(மனிதன்—1954) | .. | 15 |
| 5. | உலகத்துக்கு ஒருவர்!<br>(மனிதன்—1954) | .. | 16 |
| 6. | புகையிலையும் புதுமைப்பித்தனும்<br>(பொன்னி—1951) | .. | 19 |
| 7. | எனக்குப் பிடித்த புத்தகம்<br>(ஆனந்தவிகடன்—1961) | .. | 30 |
| 8. | நாவல் பிறக்கிறது<br>(கல்கி—1961) | .. | 34 |
| 9. | முடிவுரை<br>(முல்லைக் கொடியாள்—1946) | .. | 42 |
| 10. | என்னுரை<br>(விந்தன் கதைகள்—1956) | .. | 47 |

11. வயிறும் வாழ்வும் .. 53
(கண் திறக்குமா?—1956)

12. வாழ்த்து .. 56
(பசி கோவிந்தம்—1956)

13. சுழலும் உலகிலே .. 59
(ஏமாந்துதான் கொடுப்பீர்களா?—1963)

14. சுயம்வரத்துக்கு முன்னால் கொஞ்சம் சுய விளம்பரம் .. 63
(சுயம்வரம்—1973)

15. முன்னுரை .. 68
(நினைவுச்சின்னம்—1951)

16. சுடச்சுட குளு குளு .. 71
(குமுதம்—1964)

17. படித்தேன்—சொல்கிறேன் .. 72
(சரவிளக்கு—1969)

18. இந்நாட்டு மன்னர்கள் .. 75
(மனிதன்—1954-55)

19. இதோ சில சுயமரியாதைக்காரர்கள்! .. 86
(மனிதன்—1954-55)

20. விந்தன் வாழ்க்கையில் சில துளிகள் .. 102

# பாரதி வாழ்ந்த பாண்டி

துரியோதனன், துச்சாதனன் ஆகியோரை எதிர்த்துப் பாரதப் போர் நடத்தினார்கள் அர்ச்சுனன், வீமன் ஆகியோர் அதே பாரதப் போரைப் பிரெஞ்சுக்காரனையும் பிரிட்டிஷ்காரனையும் எதிர்த்து நடத்தினான் பாரதி

எங்கே? தனக்குப் புகலிடம் தந்து உயர்ந்த புதுவையில்!

அந்தப் போரில் தன்னையே அர்ச்சுனனாகப் பாவித்துக் கொண்ட பாரதி, ரிக்‌ஷாக்காரனைப் பார்த்தனாக்கினான், அவன் இழுக்கும் ரிக்‌ஷாவை ரதமாக்கினான்

அந்த ரதத்தில் முறுக்கிவிட்ட மீசையுடன் ஏறி அமர்ந்த பாரதி, ''பார்த்தா, ஓட்டடா ரதத்தை!'' என்றான்

ரதம் அசல் ரதத்தைப் போலவே கடகடவென்று ஒலித்துக் கொண்டே ஓடிற்று காரணம் வேறொன்றுமில்லை, அப்போது ரிக்‌ஷா சக்கரங்களில் ரப்பர் டயர் பொருத்தப்படாமல் இருந்தது தான்!

ரதம் எங்கே ஓடிற்று?—குருட்சேத்திரத்தில் ஓடவில்லை, பாண்டி வீதிகளிலே ஓடிற்று அதனாலென்ன, அதையே போர்க்கள மாகக் கொண்டுவிட்டான் பாரதி

''வில்லினை எடடா, வில்லினை எடடா - அந்தப்
புல்லியர் கூட்டத்தைப் பூழ்தி செய்திடடா!''

பாடியவன் பார்த்தனான ரிக்‌ஷாக்காரன் அல்ல—அவன் எப்படிப் பாடுவான்? தன்னையே பார்த்தனாகவும் பாவித்துக்கொண்டு பாரதியே பாடினான் ஆனால் அவன் கையில் அப்போது வில்லும் இல்லை, அம்பும் இல்லை, இருந்தவை பேப்பரும் பேனாவுமே

அவற்றை வைத்துக் கொண்டு அவன் நடத்திய பாரதப்போர் ஜனப் பிரசித்தம், சரித்திரப் பிரசித்தம், ஜகத் பிரசித்தம்!

அத்தகைய மாவீரனுக்கு, மா கவிஞனுக்குப் படை திரட்டிக் கொடுத்த பாண்டியிலே நான் கால் எடுத்து வைக்கிறேன் என் உடம்பெல்லாம் புல்லரிக்கிறது, ஆறி அடங்கக்கூடிய நிலைக்கு வந்துவிட்ட என் ரத்தத்தில் சூடேறுகிறது, அங்கங்கே நரை தட்டிப் போன ரோமங்கள் கூடக் குத்திட்டு நிற்கின்றன தாழ்ந்த தலை நிமிர்கிறது, ஒடுங்கிப்போன கண்கள் ஒளி வீசுகின்றன, மீசை துடிப்பதற்குப் பதிலாக அதை எடுத்துவிட்ட மேலுதடுகள் துடிக் கின்றன, கூன் விழுந்துபோன முதுகு பின்னால் சரிந்து, மார்பை முன்னால் தள்ளி வைக்கிறது, கை வீச்சில் ஒரு கம்பீரம், நடையில் ஒரு மிடுக்கு—ஆகா, இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் பாரதி நினைவில் இப்படி ஒரு உத்வேகமா!

கடற்கரைச் சாலை வழியே ஏறுநடை போடுகிறேன் இந்திய விடுதலைக்காக வெளிநாட்டினரின் உதவி கோரிக் கடல் கடந்து சென்ற வங்க வீரன் சுபாஷ் சந்திரபோஸுக்கு முன்னால், அதே உதவிக்காகப் புதுவையிலிருந்து கடல் கடந்து சென்ற தமிழ் வீரன், பாரதியின் தோழன் மாடசாமியின் நினைவு வருகிறது 'போனவன் போனவன்தான், அங்கிருந்து திரும்பவேயில்லை' என்பதை நினைத்ததும் என் கண்கள் கலங்குகின்றன துடைத்துக்கொண்டு மேலே நடக்கிறேன்

மணக்குட விநாயகர் கோயில் கண்ணில் படுகிறது "வாழ்க புதுவை மணக்குடத்து வள்ளல் பாதமணி மலரே" என்ற பாரதி யின் பாடலாலேயே அவரை வழிபட்டுவிட்டு, ஈசுவரன் கோயில் வீதியின் பக்கம் திரும்புகிறேன்

*"அன்றொருநாள் புதுவை நகர்தனிலே*
*கீர்த்தி அடைக்கலஞ்சேர்*
*ஈசுவரன் தர்மராஜா என்றபெயர்*
*வீதியிலோர் சிறிய வீட்டில். . ."*

என்று தான் இருந்த வீட்டைப் பற்றிப் பாரதி பாடினானல்லவா?— அந்த வீட்டைப் பார்க்கிறேன் 'பாரதி இருந்தான் என்ற பெருமையைத் தவிர வேறொரு பெருமையும் எனக்கு இல்லை' என்பது போல் அது இப்போது பாழடைந்து கிடக்கிறது தற்போது பாண்டிச்சேரி முதலமைச்சராயிருக்கும் திரு பரூக் அரசாங்கச் செலவில் அந்த வீட்டை வாங்கி, அதில் பாரதியின் ஞாபகார்த்தமாக ஏதாவது செய்யவேண்டும் என்று முயன்று வருகிறார் அவருடைய முயற்சி வெற்றியடையவேண்டுமானால் மத்திய சர்க்கார் கண் திறக்க வேண்டும் கலைஞர் கருணாநிதி தற்போது எட்டயபுரத்திலுள்ள பாரதி பிறந்த வீட்டையும், கடையத்திலுள்ள 'காணி நிலம் வேண்டும் பராசக்தி, காணி நிலம் வேண்டும்' என்று பாரதி பாடிய இடத்தையும் வாங்கிக் 'கவினுறு மாளிகை' கட்டிக் கவிஞரின் கனவை நனவாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார் அவற்றுடன் அவர் இதையும் சேர்த்துக்கொண்டு பரூக்குடன் ஒத்துழைத்தால் வெற்றி நிச்சயம் அவசியம் ஒத்துழைப்பார் என்றும் நம்பலாம்

அங்கிருந்து வைசியர் வீதிக்கு வருகிறேன் இங்கேதான் பாரதியின் பாசறையாக விளங்கிய கல்வே சங்கரச் செட்டியாரின் வீடு இருக்கிறது திரு வ வே சு அய்யர், வழக்கறிஞர் துரைசாமி அய்யர், புரட்சி வீரர் மாடசாமி, திரு சுப்பிரமணிய சிவா, திரு வாஞ்சி, திரு நாகசாமி போன்றோர் இந்த வீட்டில்தான் அடிக்கடி கூடி, வெள்ளையனை இந்தியாவிலிருந்து விரட்டுவதற்கு வேண்டிய வழிவகைகளைப் பற்றி யோசிப்பார்களாம் அதன் விளைவுகளில் ஒன்றுதான் ஆங்கிலேயக் கலெக்டரான ஆஷ் துரையை மணியாச்சியில் வாஞ்சி சுட்டுக் கொன்றதாம்

இந்த நிகழ்ச்சியைப் பற்றி இப்போதும் ஜீவியவந்தராயிருக்கும் திரு. நாகசாமி அய்யர்தான் எவ்வளவு உற்சாகமாகப் பேசுகிறார்!

அவருடைய இருப்பிடத்தைக் கேட்டுத் தெரிந்துகொண்டு போய் அவரைச் சந்திக்கிறேன்.

அய்யருக்கு வயது இப்போது எண்பத்துமூன்று, எப்போதும் படுக்கையை விரித்து வைத்துக்கொண்டு படுத்த படுக்கையாயிருக்கிறார் நான் அருகில் சென்று உட்கார்ந்து அவரைத் தொட்டு உசுப்பி, ''ஐயா, ஐயா!'' என்கிறேன்

''யார் அது?'' என்று கேட்டுக்கொண்டே திரும்புகிறார்

''நான் ஒரு பத்திரிகையாளன், பாரதியைப் பற்றி உங்களுடன் சிறிது நேரம் பேசவேண்டும் ''

அவ்வளவுதான், இருபது வயது இளைஞனைப் போல அவர் துள்ளி எழுந்து உட்காருகிறார் ''பாரதியை ஆசிரியராகக் கொண்டு சென்னையில் நடந்து வந்த 'இந்தியா' பத்திரிகை அங்கே பிரிட்டிஷ் அடக்குமுறைக்கு ஆளாகிப் பாண்டிச்சேரிக்கு வந்தது அதற்கு முன்னாலேயே பாரதி இங்கே வந்து விட்டார் 'இந்தியா' பத்திரிகையிலே நான் அவருக்குத் துணையாசிரியராயிருந்தேன்'' என்று ஏக உற்சாகமாகப் பேச ஆரம்பிக்கிறார்

''அப்புறம்?'' என்கிறேன் நான்

''பகலில் பத்திரிகை வேலை, இரவில் வெள்ளைக்காரனை எப்படி ஒழிக்கிறது, அதற்கு மக்களை எப்படித் தயார் செய்கிறது என்கிறதைப் பற்றி யோசிக்கிற வேலை!''

''அந்த வேலையில் ஒன்றுதான் ஆஷ் துரையைச் சுட்டதாக்கும்?''

'ஆமாம் அவனைச் சுட்ட அந்த வாஞ்சிக்கு நான்தான் குறி பார்த்துச் சுடக் கற்றுக் கொடுத்தேன் ''

''உங்களுக்குத் துப்பாக்கி ஏது?''

''பாரிஸிலே எங்களை ஆதரிக்கிற சீமாட்டி ஒருத்தி இருந்தாள் அவளுக்கு எழுதி வரவழைத்தோம் ''

''நீங்கள் எதைக் குறி பார்த்துச் சுடக் கற்றுக் கொடுத்தீர்கள்? காக்கை, குருவிகளைப் பார்த்தா?''

''காக்கை குருவி எங்கள் ஜாதி, நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம் என்று பாடும் பாரதியின் தோழர்களாச்சே நாங்கள், அப்படிச் செய்வோமா? கீழே இருந்து தென்னை மரத்தில் இருக்கிற தேங்காய் குலையைக் குறி பார்த்துச் சுடக் கற்றுக் கொடுத்தேன் ''

''கடைசியில் என்ன ஆயிற்று?''

''போட்ட திட்டப்படி வாஞ்சி ஆஷைச் சுட்டுவிட்டுத் தன்னையும் சுட்டுக்கொண்டான் ஆனால் ''

''என்ன ஆனால்?''

''எவ்வளவோ சொல்லியும் அவன் ஒரு தவறு செய்துவிட்டான் ''

என்ன தவறு?''

''நம்முடைய கடிதப் போக்குவரத்து எதையும் பாக்கெட்டில் வைக்காதேடா, பாக்கெட்டில் வைக்காதேடா என்று நான் படித்துப் படித்துச் சொன்னேன் அதைக் கவனிக்காமல் அவற்றில் சிலவற்றைப் பாக்கெட்டில் வைத்துக்கொண்டு அவன் தன்னை சுட்டுக் கொண்டிருக்கிறான் அது போலீஸாரிடம் சிக்கிக்கொண்டு விட்டது அவர்கள் எங்களைக் கண்காணிக்க ஆரம்பித்துவிட்டார்கள் அந்தச் சமயம் பார்த்து அரவிந்தரும் வங்கத்தில் ஏதோ தப்புத் தண்டா செய்துவிட்டு வந்து எங்களுடன் சேர்ந்தார் போலீஸ் கெடுபிடி இன்னும் அதிகமாயிற்று அவர்கள் எங்களைக் கண்காணிப்பது போலவே நாங்களும் அவர்களைக் கண்காணிக்க ஆரம்பித்தோம் அதற்கு உதவியாகச் சங்கரச் செட்டியார் மாடியின் நடுவேயிருந்து பார்த்தால் கீழேயுள்ள தரை வரை தெரியும்படியாக ஒரு ஜன்னல் அமைத்துக் கொடுத்தார் எங்களில் ஒருவன் மாடிக்குப் போய், அங்குள்ள ஜன்னலுக்கும் கைப்பிடிச் சுவருக்குமாக நடை போட்டுக் கொண்டிருப்பான் ஒற்றர்கள் யாராவது வந்தால்

உடனே அவன் ஜன்னலுக்கு வந்து, அதன் வழியாகக் கீழே கூடியிருக்கும் எங்களை எச்சரிப்பான். நாங்கள் அங்கிருந்து தப்பிவிடுவோம்.''

''ஆச்சரியமாயிருக்கிறதே! செட்டியார் வணிகர் என்று கேள்விப்பட்டேன். பொதுவாக வணிகர்கள் பணம் பண்ணுவதைத் தவிர வேறு எந்தவிதமான லட்சியமும் இல்லாதவர்களாயிருப்பார்கள். அத்தகையவரை ஓர் அரும் பெரும் லட்சியவாதியாக மாற்றக் கூடிய சக்தி அந்த நாளிலேயே பாரதியின் பாடல்களுக்கு இருந்திருக்கிறது, இல்லையா?''

''அது மட்டுமா? பெண்கள் விடுதலை குறித்து அவர் பாடிய பாடல்களும் பெரும் புரட்சி செய்தன. எங்களுடைய போதாத காலம் பிரிட்டனும் பிரான்சும் செய்துகொண்ட ஓர் உடன்படிக்கையின்படி பிரெஞ்சுப் பகுதிகள் சில ஆங்கிலேயர் வசமாக இருந்தன. அதில் பாண்டிச்சேரியும் சேர்ந்துவிடும் போலிருந்தது. அப்படி ஆகியிருந்தால் எங்கள் கதி அதோகதியாகியிருக்கும். ஆகவே, அதை வேறு எதிர்த்துப் பாரதி கிளர்ச்சி செய்யவேண்டியதாயிற்று. அந்தக் கிளர்ச்சியை அப்போதிருந்த கவர்னரின் ஆலோசகர்கள் பொருட்படுத்தாமல் உடன்படிக்கையை அப்படியே நிறைவேற்ற இருந்தார்கள். அப்போதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது— அதாவது, அந்த ஆலோசகர்களின் மனைவிமார்கள் பாரதிக்காகத் தங்களுடைய கணவன்மார்களையே எதிர்த்து நின்று உடன்படிக்கையைத் தூக்கியெறிந்துவிட்டார்கள்!''

''தேவலையே, இந்தப் புரட்சிகளையெல்லாம் அங்கே பகத் சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோர் செய்வதற்கு முன்னாலேயே நீங்கள் இங்கே செய்து விட்டீர்கள் போலிருக்கிறதே!''

''ஆமாம், எதிலும் முதலாயிருக்கிற தமிழன் அதில் மட்டும் பின்வாங்கிவிடுவானா?''

உணர்ச்சிவேகத்தில் பெரியவருக்கு உள்ளுக்கும் வெளிக்குமாக மூச்சு வாங்குகிறது. முதிர்ந்த வயது காரணமாக ஞாபக

மறதி வேறு அடிக்கடி வந்து அவருடைய பேச்சுக்கு முட்டுக் கட்டை போடுகிறது அந்த நிலையில் அதற்குமேல் அவரைச் சிரமப் படுத்த விரும்பாமல் நான் அவரிடமிருந்து விடைபெறுகிறேன்

''இது என்ன உற்சாகம்? காலை நேரத்தில் வந்திருந்தால் இன்னும் உற்சாகமாகப் பேசியிருப்பார்!'' என்று சொல்லிக் கொண்டே அவருக்குத் தற்போது அடைக்கலம் தந்திருக்கும் வீட்டுக்காரர் என்னை நோக்கி வருகிறார்

அவரைப் பார்த்தால் எனக்குப் பிராமணராகத் தோன்றவில்லை ''உங்களுக்கு இவர் என்ன வேண்டும்?'' என்று என் சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்வதற்காகக் கேட்கிறேன்

''ஒன்றுமில்லை நானும் மனிதன் அவரும் மனிதன் அவ்வளவுதான் எங்களுக்குள்ள உறவு!'' என்கிறார் அவர்

''உங்கள் தொழில்?''

''கள்ளுக்கடையில் குமாஸ்தாவாக இருக்கிறே[illegible] குடும்பத்தில் பத்துப் பேர் இருக்கிறோம் இவ[illegible] ஆளாகச் சேர்த்துக் கொண்டிருக்கிறோம் ''

''ஏன் இவருக்குச் சொந்தக்காரர்கள் யாரும் இல்லையா?''

''இருக்கிறார்கள் இவருடைய பழக்க வழக்கங்கள் அவர்களுக்குப் பிடிப்பதில்லை. அவர்களுடைய பழக்க வழக்கங்கள் இவருக்குப் பிடிப்பதில்லை. அதனால் அவர்கள் இவரை ஒதுக்கி விட்டார்கள் இத்தனைக்கும் அரவிந்தாசிரமத்திலிருந்து இவருக்கு மாதம் ஐம்பது ரூபாய் உதவித் தொகையாக வந்து கொண்டிருக்கிறது ''

''உங்களுடைய பழக்க வழக்கங்களெல்லாம் இவருக்குப் பிடிக்கிறதா?''

''பிடிக்காமலென்ன, எந்த விதமான பேதமும் கிடையாது இவரிடம் ''

''ஒருவேளை பாரதி கண்ட 'அபேதானந்த சுவாமி'களில் இவரும் ஒருவராயிருப்பாரோ?'' என்று எண்ணிக் கொண்டே நான் வெளியே வருகிறேன்

எண்பது வயதைக் கடந்த ஏழெட்டுப் பெரியவர்கள், ''ஐயா, வணக்கமுங்க!'' என்று என்னைக் கைகூப்பி வரவேற்கிறார்கள்

அவர்கள் யாரென்று தெரியாமல் நான் விழிக்கிறேன் அதை என் விழிகளிலிருந்து தெரிந்து கொண்டு, ''நீங்கதானே மீசைக்கார அய்யரைப் பற்றித் தெரிஞ்சிக்கப் பட்டணத்திலேயிருந்து வந்திருக்கீங்க?'' என்று கேட்கிறார் அவர்களில் ஒருவர்

''எந்த மீசைக்கார அய்யரை?'' என்று நான் அப்போதும் ஒன்றும் புரியாமல் கேட்கிறேன்

''அதுதாங்க, பாரதியாரை நாங்க 'மீசைக்கார அய்யர்'னுதான் கூப்பிடுவோமுங்க ''

''அப்படியா, நீங்க யாரு?''

''பறையருங்க, குப்பத்திலேருந்து வாறோமுங்க ''

''பறையர்னு சொல்லாதீங்க, அரிஜன்னு சொல்லுங்க!''

நான் திருத்துகிறேன். ''அந்தப் பேரு எங்க மீசைக்கார அய்யருக்குப் பிடிக்காதுங்க, 'அது என்னப் புதுப் பேரு?'ம் பாருங்க!''

''சரிதான், அந்த விஷயத்திலே உங்க மீசைக்கார அய்யர் அம்பேத்கார் கட்சிபோல இருக்கு!''

''ஆமாங்க, காந்தி ஆலயப் பிரவேசம்கூட அவருக்குப் பிடிக்கலீங்க 'எங்களுக்கு முதல்லே வேண்டியது ஆலயப் பிரவேசம் இல்லே, இதயப் பிரவேசம்'தான்னு சொல்லி, அவர் எங்களுக்கெல்லாம் பூணூலை மாட்டிப் பிரமோபதேசம் செய்தாருங்க அப்புறம் எங்களிலே ஒருத்தனைச் சமைக்கச் சொல்லி, அவரும் எங்களோடு உட்கார்ந்து சாப்பிட்டாருங்க, அப்போ நாலைந்து அய்யமாருங்க சேர்ந்து வந்து, 'ஏண்டா, நீ பிராமணனாயிருந்தும் இப்படிச் செய்யலாமா?''ன்னு அவரைக் கேட்டாங்க அதுக்கு அவர் கடகடன்னு சிரிச்சுட்டு, 'நான் பிராமணன் என்கிறதை எப்பவோ மறந்துட்டேன் நீங்க ஏண்டா அதை இன்னும் ஞாபகத்திலே வெச்சிட்டு அவஸ்தைப்படறீங்க? போங்கடா'ன்னுட்டாருங்க!''

''அதனால் என்ன ஆயிற்று, தெரியுமா? உங்கள் 'மீசைக்கார அய்யர்' இறந்த பிறகுகூட அவரைச் சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்ல அவ்வளவு சுலபமாக ஆள் கிடைக்கவில்லை அதற்காக அவருடைய பிணம் ரொம்ப நேரம் காத்துக் கொண்டிருக்க வேண்டியிருந்தது!'' என்று சொல்லிவிட்டு, நான் மெல்ல அவர்களிடமிருந்து நழுவுகிறேன்

''கொஞ்சம் வெத்திலையாச்சும் வாங்கிப் போட்டுக்கிட்டுப் போங்க!'' என்று அவர்களில் ஒருவர் மடியை அவிழ்க்கிறார் 'மீசைக்கார அய்ய'ருக்காக ''சரி, கொடுங்கள்!'' என்று வாங்கிப் போட்டுக் கொண்டு மேலே நடக்கிறேன்

முத்தியால்பேட்டையிலுள்ள சித்தானந்த சுவாமிகளின் மடம் என் கவனத்தைக் கவருகிறது புதுவை நண்பர்களான பிரம்மராய அய்யர், எலிக்குஞ்சு செட்டியார், வேணு முதலி, குவளைக்கண்ணன், குள்ளச்சாமி ஆகியோரைப் பற்றித் தன் கட்டுரைகளிலும் கவிதைகளிலும் குறிப்பிட்டிருக்கும் பாரதி, இந்த மடத்தையும் மறக்காமல்,

''சித்தாந்தசுவாமி திருக்கோயில் வாயிலில்
தீபவொளியுண்டாம்—பெண்ணே,
தீபவொளியுண்டாம்!

முத்தாந்தவீதி முழுதையுங் காட்டிட
மூண்ட திருச்சுடராம்—பெண்ணே,
மூண்ட தீச்சுடராம்!''

என்று பாடியிருக்கிறார் அல்லவா? அதை நினைவுகூர்ந்து மேலே செல்கிறேன் கருவடிக் குப்பத்திலுள்ள ஆரோக்கியசாமி முதலியார் மாளிகையும், அதைச் சுற்றியுள்ள மாஞ்சோலைகளும் என் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவருகின்றன பாரதி அடிக்கடி வந்து உலாவிய அந்த இடத்திலே நானும் சிறிது நேரம் உலாவி மகிழ்கிறேன்

குக்கூ, குக்கூ!

பாரதியின் 'குயில் பாட்டு' பிறந்த இடமல்லவா?—குயில் கூவுகிறது!

அழகு கொஞ்சும் இந்த இடத்தை,

''வேகத் திரைகளினால் வேதப் பொருள் பாடி
வந்து தவழும் வளஞ்சார் கரையுடைய
செந்தமிழ்த் தென்புதுவை யென்னும் திருநகரின்
மேற்கே. சிறுதொலைவில் மேவுமொரு மாஞ்சோலை
நாற்கோணத்துள்ள பல நத்தத்து வேடர்களும்
வந்து பறவை சுட வாய்ந்த பெருஞ்சோலை!''

என்று எவ்வளவு அருமையாய்க் குறிப்பிடுகிறான் பாரதி!

இத்தனை இடங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு, கடைசியாக பாரதி சரண் புகுந்த முத்துமாரியம்மனைப் பார்க்காமல் வந்துவிடலாமா?—அவளையும் பார்க்கிறேன்

''உலகத்து நாயகியே!
எங்கள் முத்துமாரியம்மா, எங்கள் முத்துமாரி!
உன் பாதம் சரண் புகுந்தோம்
எங்கள் முத்துமாரியம்மா, எங்கள் முத்துமாரி!''

என்று அவன் பாட்டாலேயே அவளையும் வழிபட்டு விட்டுத் திரும்புகிறேன்

ஏறக்குறைய பன்னிரண்டு ஆண்டுகள் பாரதிக்குப் புகலிடம் தந்து உயர்ந்த பாண்டிச்சேரியை ஓரிரு நாட்களில் சுற்றிப் பார்த்து, அவனைப் பற்றிய தகவல்கள் அத்தனையையும் அறிவதென்பது முடிகிற காரியமா, என்ன?

— **தினமணி கதிர்**

# பாரதிதாசனின் குடும்ப விளக்கு

கடைசி காலத்தில் தமக்குப் 'புது நெறி காட்டிய புலவ'னான பாரதியின் வாழ்க்கை வரலாற்றைப் படமாக்க முயன்று, அதனால் கடன்பட்டு, கவலையின் எல்லைக்குச் சென்று மறைந்தவர் பாவேந்தர் பாரதிதாசன் 'குடும்ப விளக்கு' எழுதிய அந்தக் கவிஞரின் 'குடும்ப விளக்'கான திருமதி பழனியம்மாளைச் சந்திக்கிறேன்

''வாங்க ''

''உங்கள் கணவர் தாம் எழுதிய 'குடும்ப விளக்'கை உங்களுக்குப் படித்துக் காண்பித்தாரா? அதில் வரும் 'முதியோர் காத'லைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?''

''நினைக்கிறதென்ன, வாழ்க்கையில் உள்ளதைத்தானே எழுதியிருக்காரு? குடும்ப விளக்கை மட்டுமில்லே, சினிமாவுக்கு வசனம் எழுதினாக்கூட அதை எங்களுக்குப் படிச்சிக் காண்பிப்பாரு நாங்க ரசிக்கிறோமா, எங்களுக்குக் கதை விளங்குதான்னு கேப்பாரு ''

''ரொம்பக் கோபக்காரரான அவர் உங்களிடமும் எடுத்ததற்கெல்லாம் கோபித்துக் கொள்வாரா?''

''அப்படியொண்ணுமில்லே, கோபக்காரருன்னு பேரு. ஆனா குழந்தை மாதிரி பழகுவாரு அதனாலேதான் அவருக்கு இத்தனை புகழ் ஏற்பட்டதுன்னு நான் நினைக்கிறேன் ''

''இப்போதுள்ள தமிழ்நாட்டு அமைச்சர்களை உங்களுக்குத் தெரியுமா?''

''நல்லாத் தெரியும் அவங்களிலே சில பேரு எங்க வீட்டுக்கும் வந்திருக்காங்க வரவங்களை நல்லபடியா உபசரிக்கணும் அப்படிங்கிறதிலே அவரு ரொம்பக் கவனமாயிருப்பாரு இந்த விஷயத்திலே நாங்க ஒரு மாதிரியா நடந்துகிட்டா கோவிச்சுக்குவாரு ''

''நீங்க ஏன் ஒரு மாதிரியா நடந்துக்கனும்?''

''வீட்டிலே இருந்த வறுமைதான் அந்த வறுமையிலும் நாங்க வர்றவங்களை வரவேத்து உபசரிச்சி வளர்த்தோம் அதனாலே நானும் என் பிள்ளைகளும் அடைஞ்ச தொல்லை கொஞ்ச நஞ்ச மில்லே வந்தவங்களுக்கு இருந்த சாப்பாட்டைப் போட்டுட்டு நாங்க பட்டினியாப் படுத்துகிட்ட நாளும் உண்டு ''

''கவிஞரின் கடைசி காலத்தைப் பற்றி . ''

''அந்தக் கதையை ஏன் கேட்கறீங்க? மெட்ராசிலே பாரதியார் கதையையும், பாண்டியன் பரிசையும் படமாக்க அவரு கம்பெனி ஆரம்பிச்சாரு ஏறக்குறைய அறுபது நாளு ராவாப் பகலா உட் கார்ந்து எழுதி முடிச்சாரு அதனாலே மார்வலிகூட வந்துட்டுது. அந்த வலியிலேயும் எடுத்த காரியத்தை நிறைவேத்த படாத பாடு பட்டாரு யாரும் அவரைக் கவனிக்கவும் இல்லே, கை கொடுக்க வும் இல்லே அதுக்குள்ளே மார்வலியும் அதிகமாப் போச்சு ஆஸ்பத்திரியிலே சேர்த்தோம் அங்கேயே காலமாயிட்டாரு.''

காலமான பிறகாவது யாராவது கவனித்தார்களா?''

''ஊஹூம் அவர் எடுத்த காரியம் எதிலேயும் தோல்வி அடைஞ்சதில்லே அதுதான் அவரு அடைஞ்ச மொதல் தோல்வி அதாலே ரொம்ப வருத்தப்பட்டாரு அந்த முயற்சியிலே எங்க ளுக்கு ஏற்பட்ட கடனிலேயிருந்து மீள முடியாம இப்போதும் நாங்க தவிக்கிறோம் அதுக்காக அவரு சிங்கப்பூருக்கும் சிலோனுக் கும் போக இருந்தாரு அது நிறைவேறலே எங்களுடைய ஒரே மகன் மன்னர்மன்னன் மேலே அவருக்கு உயிரு அவன் இப்போ புதுச்சேரி ரேடியோ ஸ்டேஷன்லே எழுத்தாளனா வேலை செய்ய றான் அவனாவது அவங்க அப்பாவுடைய கடைசிக்காலத் திட்டங் களை நிறைவேத்தி வைப்பான்னு நம்பிகிட்டிருக்கேன் ''

— தினமணி கதிர்

# ஒப்பற்ற கவி

அசூயை, பொறாமை ஆகிய நீச்சத்தனமான உணர்ச்சி களுக்கு இடங்கொடாமல் மாசற்ற இதயத்துடன் நோக்கு பவர்க்குக் கவிஞர் பாரதிதாசன் ஓர் ஒப்பற்ற கவி என்பது புலப்படும் அவருக்கு உவமை சொல்ல இறந்த காலத்திலும் சரி, நிகழ் காலத்திலும் சரி—எந்தக் கவிஞனும் இல்லை கல்லைக் கனியவைக்கும் சிற்பி அவர் ஆகவே கொத்தனார் வேலையை அவருடைய கவிதைகளில் காணமுடியாது

தாம் வாழ்வதற்காகப் பரந்த மனம் என்று சொல்லிக்கொண்டு பக்கத்தில் இருப்பவனை மறந்துவிடும் பாதகத்தை அவர் செய்ய வேண்டுமா? மதத்தின்பேரால், கடவுளின்பேரால் மக்கள் வஞ்சிக் கப்படுவதை, வதைக்கப்படுவதை அவர் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமா? பணக்காரர்கள் தம்மைப் பாராட்டவேண்டும் என்ப தற்காகப் பாமரர்களை அவர்களுக்குப் பலிகொடுக்க வேண்டுமா? அப்படியானால் கவிஞர் பாரதிதாசனை நீங்கள் வாழவைக்க வேண்டாம்; அவரை வாழவைப்பதற்கு அவருடைய கவிதைகளே போதும் ...

தனித்து இயங்கமுடியாத கவிஞனுக்குத்தானே தாளம் போட ஆள் தேவை?

—பாரதிதாசனின் பொன்விழா மலர் 'பொன்னி' 1951

# கவிமணியும் காலனும்

கவிமணி அவர்கள் காலமானார்கள் எனும் செய்திகேட்டு நம் கண்கள் கலங்குகின்றன, இனிய கீதம் பொழிந்துகொண்டிருந்த புல்லாங்குழலை யாரோ தட்டிப் பிடுங்கிக் கொண்டதுபோல நம் நெஞ்சம் துடிக்கிறது தமது எழுபத்தொன்பதாவது வயதில் தான் கவிமணி இறந்திருக்கிறார்கள் எனினும், கவிஞர்க்கு, இளமையும் மூப்பும் ஏது?

படுத்த படுக்கையாய்க் கிடந்து மடிந்த படுகிழவராயினும், அவர்களுடைய மறைவு நம் இதயத்தைப் பற்றி உலுக்குவதற்குக் காரணம் வீட்டிற்குச் சுமையாய் நாட்டிற்குப் பாரமாய் வாழாமல் 'பாட்டிற்கு மணி'யாய் அவர்கள் வாழ்ந்ததுதான்

'தெளிந்த தமிழ், அழகிய சொல், மணங் கமழும் மரபு, உளங் கவரும் உருவ அமைதி' ஆகிய பண்புகளுடன், கல்லும் கனிந்துருகும் வண்ணம் கவி மீட்டும் கவிஞர் பெருமான் நூறாண்டென்ன, ஆயிரம் ஆண்டுகள் வாழினும், 'வாழ்க, வாழ்க!' என்று வாழ்த்திக்கொண்டே இருப்பர், மக்கள் ஆனால் 'காலன் எதற்காகவும் காத்திருப்பதில்லை' என்றும், 'காலத்தோடு வந்து கவர்ந்து செல்வது தான் அவன் கடமை' என்றும் சிலர் கூறுகிறார்கள்—இருக்கலாம், காலன் கவிமணியைக் கவர்ந்து சென்றுவிடலாம்—ஆனால் அவர்களுடைய குரலை மட்டும் அவனால் கவர்ந்து செல்ல முடியாது.

அது, கோடி கோடித் தமிழர்களின் இதயக் குரலாய்—என்றென்றும் மறக்க முடியா இன்னிசையாய் மாறி விட்டது!

இன்றும், நாளையும், இவற்றைத் தொடர்ந்துவரும் எண்ணற்ற நாட்களும், அந்தக் குரலிலே, அதன் நாத லயத்திலே மயங்கி நிற்கப் போவதைக் காலம் காணத்தான் போகிறது. கண்டு, காலனை நோக்கி நகைக்கத்தான் போகிறது. 'இதோ பார்—அந்தக் கவிஞர் இருக்கிறார், இருந்து கொண்டிருக்கிறார், இனியும் இருப்பார்!' என்று கூறத்தான் போகிறது. ஏனெனில், கவிஞன் பிறக்கிறான்; இறப்பதில்லை!

—மனிதன், 1954

# உலகத்துக்கு ஒருவர்!

ஆம்—ஆசிரியர் ''கல்கி'' அவர்கள் தமிழுக்கு ஒருவர் அல்ல, தமிழ் நாட்டுக்கும் ஒருவர் அல்ல, உலகத்துக்கே ஒருவர்— உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை!

திறமையோடு மொழியின் துணையும் கொண்டு உலகப் புகழ்பெற்ற கீட்ஸாலும் வோர்ட்ஸ் வொர்த்தாலும் கவிதைத் துறையில்தான் சிறந்தவர்களாக விளங்க முடிந்தது, ஷேக்ஸ்பியரா லும் இப்ஸனாலும் நாடகத் துறையில்தான் சிறந்தவர்களாக விளங்க முடிந்தது, விக்டர் ஹியூகோவாலும் டிக்கன்ஸாலும் நாவல் துறையில்தான் சிறந்தவர்களாக விளங்க முடிந்தது, செகா வாலும் மாப்பஸானாலும் சிறுகதைத் துறையில்தான் சிறந்தவர்க ளாக விளங்க முடிந்தது, ஆனால் ஆசிரியர் அவர்களோ எல்லாத் துறைகளிலுமே சிறந்து விளங்கினார்கள், ஒப்பாரும் மிக்காரும் இல்லாத பெருமைக்கு ஆளாகி, அதே சமயத்தில் பலருடைய பொறாமைக்கும் உள்ளானார்கள்

ஆசிரியர் அவர்களின் தகனக்கிரியையின் போது திரு ம பொ சி பேசும்போது, ''கல்கியின் மறைவு தமிழ்த்தாய் தன் கையிலிருந்த வீணையை வீசி எறிந்துவிட்டதுபோலிருக் கிறது'' என்று குறிப்பிட்டார் ஆனால் அவளுக்கு முந்தியே தமிழ்நாட்டு எழுத்தாளர்கள், பலர் தங்கள் கையிலிருந்த பேனா வைக் கண்ணை மூடிக்கொண்டு வீசி எறிந்து விட்டுக் கருத்துக் குருடர்களாக ஆகிவிட்டார்கள்!

அருமையும் பெருமையும் உயிரும் ஊக்கமும் மிக்க அந்த பேனாதான் ஆசிரியர் ''கல்கி'' அவர்கள்

எமனாவது ஒரே மூச்சில் அதை ஒடித்துப் போட்டுவிட்டான் சகோதர எழுத்தாளர்களோ அணுஅணுவாக அதைச் சிதைக்கப் பார்த்தார்கள், வதைக்கப் பார்த்தார்கள்

அவர்கள் சிதைக்கச் சிதைக்க அது வளர்ந்தது, வதைக்க வதைக்க அது வானளாவ உயர்ந்தது!

ஆனால் தனக்காக மட்டும் அதன் குரல் ஒலிக்கவில்லை; தன்னைச் சிதைப்பவர்களுக்காகவும் வதைப்பவர்களுக்காகவுங் கூட ஒலித்தது.

''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்''

என்பது வள்ளுவர் வாக்கு, அந்த வாக்கைப் பிரதிபலிக்கும் உருவம் ஏதாவது ஒன்று நம் காலத்தில் இருந்திருக்குமானால், நாம் அதைப் பார்த்திருப்போமானால், அது ஆசிரியர் ''கல்கி'' அவர்களின் உருவமாய்த்தான் இருந்திருக்க வேண்டும்.

இத்தகைய அபூர்வ மேதையைக் குறுகிய மனப்பான்மையின்றித் தக்க முறையில் பயன்படுத்திக் கொண்டிருந்தால், தமிழ் நாட்டு எழுத்தாளர்களில் பலர் இன்று தலைகுனிந்து நடக்கவேண்டிய நிலை இருந்திருக்காது; தலை நிமிர்ந்தே நடந்திருக்கலாம்—'சர்வ வல்லமையுள்ள பணம்' ஆசிரியர் அவர்களிடம் சரணாகதி அடைந்ததுபோல நம்மிடமும் சரணாகதி அடைந்திருக்கும்.

ஆனால் உயிருடன் இருந்தபோதுதான் அவர்களைப் பாராட்ட நமக்குத் தெரியவில்லையே! தெரிந்தாலும் மனம் இல்லையே!

'இரவல் புகழ்' பெறுவதிலேயே எப்பொழுதும் கண்ணுங் கருத்துமாயிருக்கும் கூட்டம் ஒன்று தமிழ்நாட்டில் உண்டு. அந்தக் கூட்டத்துக்கு யாரும் எதற்கும் அழைப்பு அனுப்ப வேண்டியதில்லை—தானாகவே வரும்; தானாகவே துதி பாடும்; தானாகவே ஓய்ந்து தன்னை யாராவது திரும்பிப் பார்க்கிறார்களா என்று கவனிக்கும்—யாரும் கவனிக்காவிட்டால் தன்னைத் தானே கவனித்துக்கொண்டு திருப்தி அடையும்.

அன்பர்களின் அனுதாபத்தோடு, 'அந்தத் திருக்கூட்டத்தின் அனுதாப'த்துக்கும் ஆசிரியர் ''கல்கி'' அவர்கள் இன்று உள்ளாகி

யிருப்பது குறித்து நாம் பெரிதும் வருந்துகிறோம். ஏனெனில் மறைந்தபிறகும் தம் புகழில் அவர்களுக்கு இரவல் கொடுக்கும் ஆசிரியர் அவர்களின் மாண்பைக் கண்டு நம்மால் இந்தச் சமயத் தில் மகிழ முடியவில்லை—கடந்த கால நினைவுகள் பல நெஞ்சை விட்டு இன்னும் நீங்காமல் இருப்பதால்!

மற்றபடி ஆசிரியர் அவர்களுக்கோ, ''கல்கி'' காரியாலயத்தா ருக்கோ நம் அனுதாபம் தேவையில்லை—ஏனெனில், அவர்களு டைய அனுதாபத்துக்கு உரியவர்கள் நாம்தான், சொல்லோடு செயலாற்றும் திறமையுங் கொண்ட தன் ஒரே புதல்வனை இழந்து விட்டுத் தவிக்கும் நம் தாய்த்திருநாடுதான்.

எனவே, நம்மைப் பொறுத்தவரை ஆசிரியர் அவர்களைப் பிரிந்த துயர் ஆறப்போவதுமில்லை; தீரப் போவதுமில்லை!

—மனிதன், 1954

* * * * *

# புகையிலையும் புதுமைப்பித்தனும்

**புதுமைப்பித்தன் நினைவு நாள்!**

எங்கும் ஒரே குதூகலம்; கொண்டாட்டம்!

ஏன்? — அவர் செத்துப் போனதற்காக!

ஆம்; அவர் அமரரானாரென்றோ, சிரஞ்சீவியானாரென்றோ, புதுமைப்பித்தன் பாஷையில் 'பம்மாத்து' செய்ய நான் விரும்பவில்லை; அவர் செத்துத்தான் போனார்; அதற்காகத்தான் இந்தக் கொண்டாட்டம்!

பிரசித்தி பெற்ற தமிழர்களின் பண்பாட்டில் இன்று ஏற்பட்டிருக்கும் ஒரு பெரிய மாறுதல் இது.

அதாவது, மறுமலர்ச்சி!

புதுமைப்பித்தன் இலக்கியத்தில் மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தாரென்றால், தமிழர்கள் தங்களுடைய பண்பாட்டிலே மறுமலர்ச்சியைத் தோற்றுவித்திருக்கிறார்கள்!

போகட்டும்; மனிதன் உயிரோடிருக்கும்போது சந்தோஷப்படாவிட்டாலும் செத்துப்போன பிறகாவது சந்தோஷப்படுகிறார்களே, அவர்கள் நீடூழி வாழட்டும்; அவர்களுடைய சந்தோஷம் என்றும் குன்றாமல் இருக்கட்டும்!

உலகத்தில் மனிதன் இறப்பதற்கு எத்தனையோ வழிகளைக் கையாளுகிறான். விஷம் குடிப்பது — வெந்தழலில் தீய்வது — குளத்தில் வீழ்வது — கோபுரத்தின் உச்சியிலிருந்து கீழே குதிப்பது தூக்குப் போட்டுக்கொள்வது — நாக்கைப் பிடுங்கிக் கொள்வது — கத்தியின் துணையை நாடுவது — காரிலோ, ரயிலிலோ மாட்டிக் கொள்வது — இப்படி எத்தனையோ வழிகள்.

புதுமைப்பித்தன் இறப்பதற்கு இந்த வழிகளையெல்லாம் கையாளவில்லை, அவர் எழுதினார்.

ஆம்! அவர் வாழ்வதற்காக எழுதவில்லை, சாவதற்காக எழுதினார்.

எனக்குத் தெரிந்தவரை அவர் செத்துப் போனதற்குக் காரணம் இதுதான்!

ஆனால் இரட்டைக் குழந்தைகளான எமனும் வறுமைப் பேயும் எப்பொழுதுமே பழியைத் தங்கள் மீது சுமத்திக்கொள்வ தில்லை, வேறு யார்மீதாவது, எதன் மீதாவது சுமத்திவிடுவதுதான் அவர்கள் வழக்கம். இந்த வழக்கத்தையொட்டித்தான் இன்று புதுமைப்பித்தன் இறந்ததற்குக் காரணம் புகையிலை என்று சிலர் கூசாமல் சொல்லுகிறார்கள்.

கவி பாரதியார் இறந்ததற்குக் காரணம் கஞ்சா என்று சொல்ல வில்லையா? — அந்த மாதிரி.

அட, கடவுளே! — எந்த இழவெடுத்த தொழிலைச் செய்வதா யிருந்தாலும் அதற்கென்று ஒரு தெம்பு வேண்டியிருக்கிறது. இருப்பவர்கள் 'மளமள'வென்று ஏறிக்கொண்டுவரும் 'பாங்க்' கணக்கிலும் பாவையரின் பசலை விழிகளிலும் அந்தத் தெம்பை வரவழைத்துக் கொள்கிறார்கள். இல்லாதவன் என்ன செய்வான்? — அவன் தனக்குப் பிடித்த, தன்னால் முடிந்த வேறு ஏதாவது ஒரு வழியில் தெம்பை வரவழைத்துக் கொள்ளப் பார்க்கிறான். அந்த வழி புதுமைப்பித்தனுக்குப் புகையிலையாயிருந்தது; பாரதியாருக் குக் கஞ்சாவாயிருந்தது.

இதுதான் விஷயம்!

சாதாரணமாக, புகையிலை இரசிகர்கள் அதை ஏதாவது ஒரு விதத்தில்தான் உபயோகிப்பது வழக்கம். ஆனால் நம் புதுமைப்பித் தனோ இரண்டு விதங்களில் அதை உபயோகப் படுத்தினார். ஒன்று புகை, இன்னொன்று சாரம். இரண்டும் வாய்ப் பிரயோகங் கள். மூன்றாவதான மூக்குப் பிரயோகத்தையும் அவர் கையாண்டி

ருந்தால் எவ்வளவோ நன்றாயிருந்திருக்கும். இன்னும் கொஞ்சம் முன்னாடியே அவர் தம் துன்பத்திலிருந்து, துயரத்திலிருந்து, கஷ்டத்திலிருந்து, காசத்திலிருந்து ஏன், இந்தப் பாழாய்ப்போன உலகத்திலிருந்தே விடுதலையடைந்திருக்கலாம். தமிழர்களும் இன்னும் கொஞ்சம் முன்னாடியே அவருக்காகச் சந்தோஷப்பட்டிருப்பார்கள்! ''நினைவு நாள்'' கொண்டாடியிருப்பார்கள்.

இன்று நேற்றல்ல; என்றுமே எழுத்தாளன் பிழைப்பு, இருந்த போது திண்டாட்டமாயிருந்திருக்கிறது, இல்லாத போது கொண்டாட்டமாயிருந்திருக்கிறது.

உதாரணமாக, காலங்கடந்த கதையான அரபு கதையில் ஒரு கதாநாயகன் வருகிறான். பல கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளான பிறகு, அவ்ன் கடைசியாக ஒரு தையற்காரனைச் சந்திக்கிறான். அந்தத் தையற்காரன், ''பிழைப்பை நடத்த உனக்கு ஏதாவது தொழில் தெரியுமா, தம்பி?'' என்று அவனை நோக்கிக் கேட்கிறான்.

''ஓ, தெரியுமே! — நான் பெரிய எழுத்தாளனாக்கும்! எனக்கு வான சாஸ்திரம் தெரியும், கணித சாஸ்திரம் தெரியும்.. '' என்றெல்லாம் அளக்கிறான் அவன்.

''உஸ் ..'' என்று அவன் வாயைப் பொத்திவிட்டு, தையற்காரன் சிரித்துக்கொண்டே ஒரு கோடாரியையும் ஒரு துண்டுக் கயிறையும் எடுக்கிறான் அவற்றை அவனிடம் கொடுத்து, ''அதெல்லாம் இந்தக் காலத்தில் பிரயோசனமில்லை, அப்பா! அதற்குவேண்டிய கலையுணர்ச்சி இந்த நாட்டு மக்களிடம் கிடையாது. நீ பேசாமல் இந்தக் கோடாரியை எடுத்துக்கொண்டு காட்டுக்குப் போ! விறகை வெட்டி எடுத்துக்கொண்டு நாட்டுக்கு வா! யாராவது அதை வாங்கிக் கொண்டு காசு கொடுப்பார்கள்; காலந் தள்ளலாம்!'' என்கிறான்

இந்த உண்மை காலஞ்சென்ற புதுமைப்பித்தனுக்கும் தெரியாமலில்லை. அவரே 'நமது இலக்கியம்' என்ற நூலில் பின்வருமாறு கூறுகிறார்:

''இப்பொழுது நமக்கு இருக்கும் கலையுணர்ச்சியைப் பற்றி எண்ணும்பொழுதெல்லாம் ஔவைக் கிழவி ஓர் அரசனுக்கு கொடுத்த சர்டிபிகேட்தான் என்னுடைய நினைவிற்கு வருகிறது ''

'இருள் தீர் மணிவிளக்
கத்தெழிலாள் கோவே!
குருடேயும் அன்று
நின் குற்றம்—பொருள்சேர்
பாட்டுச் சுவையும்
பயிலாதன இரண்டு
ஓட்டைச் செவியும் உள!'

'இருளை விரட்டும்படியான ரத்னாபரணங்களை வாரி அணிந்து கொண்டு சிம்மாசனத்தில் பெருமிதமாய் உட்கார்ந்திருக்கும் அழகுமிக்க அரசனே! மனிதனின் அற்புதமான கனவுகளையெல்லாம் கல்லில் கொண்டிருக்கும் சிற்பங்களைப் பொருத்தமட்டில் நீ திருதராஷ்டிரன்தான்!

— அந்தோ, அது மட்டுமா? — அலைமேல் அலையாக எழும் சப்த ஜாலங்களான கவிதையை அனுபவித்தறியாத இரண்டு ஓட்டைச் செவிகளும் உண்டு, உனக்கு!' என்று இரங்குகிறாள்

அந்த எழிலாள் பெருமானின் வம்சவளர்ச்சியோ தமிழ்நாடு என்று சொல்லும்படி இருக்கிறது நமது கவியுணர்ச்சி

இவ்வாறு கூறியிருப்பவர் ஏன் கதை எழுதினார், கட்டுரை எழுதினார், கவிதை எழுதினாரென்றால் அதுதான் எழுத்தாளனின் குறும்பு. கிறுக்கு, பைத்தியம்! உலகத்தில் தொன்றுதொட்டு இருந்துவரும் கொடுமைகளையும் கொடூரங்களையும், அநீதிகளையும், அக்கிரமங்களையும், விசித்திரங்களையும், விநோதங்களையும் முதன் முறையாகப் பார்த்தபோது புத்தர் பெருமானுக்கு ஞானப் பைத்தியம் பிடித்தது. போதி மரத்தை நாடினார். புதுமைப் பித்தனுக்கோ எழுத்துப் பைத்தியம் பிடித்தது. பத்திரிக்கைத் தொழிலைத் தேடினார்

புத்தர் வாழ்க்கையின் துன்பங்களைக் கண்டு வெருண்டு ஓடினார். புதுமைப்பித்தன் அவற்றை எதிர்த்து நின்று போராடினார்.

இரண்டும் பைத்தியங்கள்தான் என்றாலும் எழுத்துப் பைத்தியம் ஒரு தனி ரகம்.

உங்களுக்குக் கதை தெரியுமா?— எழுத்தாளர் ஒருவர் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் இருந்தார். அவர் ஒரு நாள் டாக்டரை நோக்கி, தயவுசெய்து எனக்குப் பேனாவும் காகிதமும் கொடுங்கள், கதை எழுத வேண்டும்!' என்றார்.

டாக்டருக்குச் சந்தோஷம் தாங்கவில்லை, மனுஷனுக்குப் பைத்தியம் தெளிந்து விட்டது என்று கருதி, உடனே அந்த எழுத்தாளருக்கு அவர் பேனாவும் காகிதமும் கொண்டுவந்து கொடுக்கச் சொன்னார். எழுத்தாளர் அவற்றை வாங்கி ஒரு கனைப்புக் கனைத்துவிட்டு எழுதத் துவங்கினார். எழுதி முடித்ததும் அதை டாக்டரிடம் கொடுத்துவிட்டு, அவரை ஒரு 'ராஜபார்வை' பார்த்தார். டாக்டர் அதை ஆவலுடன் வாங்கிப் படிக்க ஆரம்பித்தார்.

''ஓர் ஊரில் ஒரு ராஜா இருந்தார். அந்த ராஜாவுக்கு ஒரு நாள் அடுத்த ஊரிலிருக்கும் தன் ராணியைப் பார்க்க வேண்டுமென்று ஆசை வந்துவிட்டது. உடனே தன்னை அழகாக அலங்கரித்துக்கொண்டு அவர் அரண்மனையை விட்டு வெளியே வந்தார் ''மந்திரியே கொண்டுவா, குதிரையை!'' என்றார். குதிரை வந்து நின்றது. ஒரே தாவாகத் தாவி அதன் மீது ஏறினார். லகானை மிடுக்குடன் இழுத்துப் பிடித்து, ''ஹை ஹை என்று அதட்டினார் . ஹை ஹை என்று அதட்டினார் .. ஹை ஹை என்று அதட்டினார் . ஹை ஹை என்று அதட்டினார் ஹை ஹை என்று அதட்டினார் . கதை மேலே போகவில்லை; ஹை ஹை என்று அதட்டினார்!'' என்பதிலேயே பக்கம் பக்கமாகப் போய்க்கொண்டிருந்தது. டாக்டருக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவர் 'திரு, திரு' என்று விழித்துக்கொண்டே, ''என்ன ஸார், இது! கதை மேலே போகவில்லையே?'' என்றார்.

"நான் என்ன செய்யட்டும், ஸார்! குதிரை என்ன அதட்டியும் மேலே போகவில்லை; 'மக்கர்' செய்துவிட்டது அப்புறம் கதை எப்படி மேலே போகும்?" என்றார் அந்த எழுத்தாளர் பைத்தியம்

இந்தக் கதையை இங்கே எதற்காகச் சொல்கிறேனென்றால், பைத்தியம் பிடித்த நிலையிலும் அந்த எழுத்தாளரின் மமதையும் கற்பனையும் எப்படி வேலை செய்கிறதென்று பாருங்கள் என்பதற் காகத்தான்!

ஏறக்குறைய இம்மாதிரிப் பைத்தியந்தான் நம் புதுமைப்பித்த னையும் பிடித்திருந்தது அதனால் அவர் தம்மை மறந்து, தம் மனைவி மக்களை மறந்து ஆத்திரத்தோடு எழுதினார், ஆவேசத் தோடு எழுதினார், அடிவயிற்றைக் கையால் அமுத்திப் பிடித்துக் கொண்டு எழுதினார், ஆயாசத்தால் ஆகாயத்தில் பறந்துகொண்டு எழுதினார்!

"உள்ளத்தில் ஒளி உண்டானால்
வாக்கினிலே ஒளி உண்டாகும்"

என்றார் பாரதியார் அந்த ஒளி புதுமைப்பித்தனின் உள்ளத்தில் உதயமாகியிருந்தது எனவே, அவருடைய கதைகளிலும் கட்டுரை களிலும் அந்த ஒளி சுடர்விட்டுப் பிரகாசித்தது

ஆனால் அவற்றைத் தக்கபடி அனுபவிக்க, அவற்றை எழுதிய மேதையைத் தக்கபடி உபசரிக்க, தமிழர்களின் உள்ளத்தில் அப்போது ஒளி உதயமாகவில்லை

இந்த நிலையில் அவர் என்ன எழுதி என்ன பயன்? — உண்மையான கலையுணர்ச்சியற்ற தமிழர்கள் அவருடைய கவி தைகளைப் படித்துவிட்டுக் கற்சிலைகளைப் போல் இருந்துவிட் டார்கள், நண்பர்களோ 'உங்கள் கதைகளைப் படித்தோம்; ரொம்ப ரொம்ப பிரமாதம், போங்கள்!" என்று பாராட்டுவதோடு நின்று விட்டார்கள்

காசுக்கு வழியில்லை; கிடைத்த கொஞ்சநஞ்சம் காசும் அவருடைய 'பைத்தியக்கார வாழ்க்கை'க்குப் போதவில்லை. எல்லோருக்கும் ஒருவித பசி என்றால், புதுமைப்பித்தனுக்கு இரண்டுவிதப் பசி. ஒன்று வயிற்றுப் பசி, இன்னொன்று இலக்கியப் பசி! — இந்த நிலையில் உணர்ச்சி அவரை மேலும் மேலும் எழுத உந்தித் தள்ளிற்று அதற்கு ஓரளவாவது தெம்பு வேண்டாமா? அந்தத் தெம்பை அவர் உபயோகித்து வந்த புகையிலைதான் அவருக்கு மனமுவந்து அளித்தது.

அந்த மகத்தான புகையிலையின் ஆதரவிலே அவர் எழுதினார்; அந்த மகத்தான புகையிலையின் ஆதரவிலே அவர் வாழ்ந்தார் அந்த மகத்தான புகையிலையின் ஆதரவிலே அவர் செத்துத் தொலைந்தார்!

இதுதான் தோழர் புதுமைப்பித்தனின் கதை.

''செட்டும் சிக்கனமுமாக இருந்திருந்தால் புதுமைப்பித்தன் தமக்குக் கிடைத்த வருமானத்திலேயே சௌகரியமாக வாழ்ந்திருக்கலாம்'' என்று சிலர் சொல்கிறார்கள். உண்மை, அப்படி வாழ்ந்திருந்தால் அவர் ரூபாய்க்கும் ரூபாய்க்கும் கல்யாணம் செய்து வைத்து, ரூபாய்க்கும் ரூபாய்க்கும் ரூபாயாகவே பிள்ளைபெற வைக்கும் வட்டிக்கடை முதலாளியாக ஆகியிருப்பார், ஓரணாச் சரக்கை, ஒரு ரூபாய் விலையுள்ள சரக்காக மாற்றும் 'மாஜிக்' வியாபாரியாக மாறியிருப்பார், வாழ்க்கை வளத்தைவிடப் பணத்தின் வளத்தையே பிரதானமாகக் கருதி சோம்பேறித்தனத்தைத் தங்கள் வம்ச பரம்பரைச் சொத்தாக விட்டுச் செல்லும் சதிகாரர்களின் கூட்டத்திலே அவரும் சேர்ந்திருப்பார்! — எதிலும் மனத்தை எளிதில் பறிகொடுத்துவிடும் ஏமாளியாகவோ, எழுத்து வாழ்வதற்காகத் தன் வாழ்க்கையையே தத்தம் செய்துவிடும் எழுத்தாளனாகவோ, பணத்தை வெறும் விளையாட்டுக் கருவியாக மதிக்கும் பச்சிளங் குழந்தையாகவோ அவர் ஒரு நாளும் ஆகியிருக்கமாட்டார்!

புதுமை எதுவாயிருந்தாலும் அது முதலில் சிலருக்குப் பிடிக்காமற் போவது இயல்பு. அந்த இயல்பை ஒட்டிச் சிலருக்குப்

புதுமைப்பித்தனின் கதை பிடித்தது; கருத்து பிடித்தது; நடை பிடிக்கவில்லை.

புதுமைப்பித்தன் தம்முடைய நடையைப் பற்றித் தாமே கூறுகிறார்; கேளுங்கள் :

''கருத்தின் வேகத்தையே பிரதானமாகக் கொண்டு வார்த்தைகளை வெறும் தொடர்பு சாதனமாக மட்டும் கொண்டு, தாவித்தாவிச் செல்லும் நடை ஒன்றை நான் அமைத்தேன் அது நானாக எனக்கு வகுத்துக் கொண்ட ஒரு பாதை. அது தமிழ்ப் பண்புக்கு முற்றிலும் புதிது. அதைக் கையாண்ட நானும் கல்வி கற்றதின் விளைவாகப் பாஷைக்குப் புதிது இதனால், பலர் நான் என்ன எழுதுகிறேன் என்பது பற்றிக் குழம்பினார்கள். சிலர் நீங்கள் எழுதுவது பொது ஜனங்களுக்குப் 'புரியாது' என்று சொல்லி அனுதாபப்பட்டார்கள். அந்த முறை நல்லதா, கருத்து ஓட்டத்திற்கு வசதி செய்வதா என்பதை அதே முறையில் பலர் எழுதிய பின்புதான் முடிவுகட்ட முடியும். அந்த முறையை நானும் சிறிது காலத்திற்குப் பிறகு கைவிட்டு விட்டேன். காரணம், அது சௌகரியக் குறைவுள்ள சாதனம் என்பதற்காக அல்ல, பல முறைகளில் கதைகளைப் பின்னிப் பார்க்க வேண்டும் என்ற ஆசையினால் அதைக் கைவிட்டு வேறு வழிகளைப் பின்பற்றினேன் இன்று திரும்பிப்பார்க்கும்போது, அவை உலக வளர்ச்சியில் பரிணாமவாதத்தினர் சொல்வது போல, இலக்கிய வளர்ச்சியின் தெருவடச்சான் சந்துகளாக அங்கேயே வளர்ச்சித்தன்மை மாறி நின்றுவிட்டன. இன்று அவற்றை ஆற அமரப் படித்துப் பார்த்துத்தான் முடிவு கட்டவேண்டும் எனது முயற்சி பலிக்காமல் போயிருக்கலாம், அதனால் முறை தப்பானது என்று முடிவு கட்டிவிடக்கூடாது !''

இவ்வாறு தம்மைப் பற்றியும் சரி — பிறரைப் பற்றியும் சரி, எதையும் அழுத்தந்திருத்தமாக அஞ்சாநெஞ்சத்துடன் எடுத்து சொல்லிக் கொண்டுவந்த நண்பர் புதுமைப்பித்தனுக்கு, இன்று தமிழர்களிடம் நிதிகோரும் நிலை ஏற்பட்டுள்ளது. அதற்குத் தமிழ்ப் பெருமக்கள் இனியாவது ஒரு விதி செய்ய வேண்டும்

''என்ன விதி?'' என்று கேட்கிறீர்களா? — இதோ சொல்கிறேன். பணக்காரர்களுக்கு எழுத்தைப் பற்றிக் கவலை கிடையாது,

எழுத்தாளர்களைப் பற்றியும் கவலை கிடையாது. அவர்கள் எப்பொழுதுமே மனித இனத்திலிருந்து வேறுபட்டிருப்பவர்கள். இதயமில்லாமல் இயங்கக் கூடிய அபூர்வ சக்தியை அவர்கள் அவமதிக்கும் ஆண்டவன் அவர்களுக்கு அளித்திருக்கிறார். அத்துடன் எல்லாவற்றுக்கும் பணம் அவர்களுக்குத் துணை செய்கிறது; சர்க்காரும் துணை செய்கிறார்கள் எனவே, அவர்கள் பிறக்கும் போது பணத்தோடு பிறக்கிறார்கள், வளரும் போது பணத்தோடு வளர்கிறார்கள், வாழும்போது பணத்தோடு வாழ்கிறார்கள்; சாகும் போது பணத்தோடு சாகிறார்கள்.

அறிவின் துணை கொண்டு பெருமை தேடிக்கொள்ள வேண்டிய அவசியமும் அவர்களுக்கு இல்லை. அந்தப் பெருமையைப் பிருந்தாவனம் போன்ற மாடமாளிகையும், நடைமுறை வருஷத்து 'மாடல்' காரும் அவர்களுக்குச் சுலபமாக அளித்துவிடுகின்றன.

இன்னும் அவர்களைப் 'புண்ணியவான்கள்' என்று, சொல்லச் சில 'பாவிகள்' இருக்கிறார்கள்; 'புத்திசாலிகள்' என்று சொல்லச் சில 'மடையர்கள்' இருக்கிறார்கள்.

பணத்தைப் பாதுகாக்க 'பாங்க்' இருக்கிறது; உயிரைப் பாதுகாக்க டாக்டரோடு போலீஸாரும் இருக்கின்றனர்.

ஆகவே, எந்த விதமான விசாரமுமின்றி அவர்கள் நிர்ச்சிந்தையாக இருக்கிறார்கள்.

ஏழைகளோ, பணக்காரர்களுக்காக எப்பொழுதுமே தியாக வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பவர்கள் தங்களைப்பற்றியே அவ்வளவாகக் கவலைப்படாத அவர்கள், எழுத்தாளர்களைப் பற்றி எங்கே கவலைப்படப் போகிறார்கள்? — அவர்களுக்காக எழுத்தாளர்கள்தான் கவலைப்பட வேண்டும்!

இந்த இருசாரார்களுக்குமிடையே இருப்பவர்கள் யார் தெரியுமா? — மத்தியதர வகுப்பாராகிய நாம்தான்! — உலகத்தில் நடக்கும் எல்லாவற்றுக்கும் பொறுப்பேற்றுக்கொள்வது போல, நீங்கள் எழுத்தாளர்களை உயிரோடு வாழ வைப்பதற்கும் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும் போலி நாகரிகத்துக்காகவும், பொழுதுபோக்

குக்காகவும், போட்டி பந்தயங்களுக்காகவும் நீங்கள் செலவழிக்கும் பணத்தில் ஒரு பகுதியை நல்ல புத்தகங்கள் வாங்குவதில் செலவழிக்க வேண்டும். கூடியவரை இரவல் புத்தகங்கள் வாங்கிப் படிக்கும் வழக்கத்தை நிறுத்த வேண்டும் புத்தகத்தின் சொந்தக்காரர்களும் இரவல் கொடுக்கும் வழக்கத்தை ஓரளவு குறைத்துக் கொள்ளவேண்டும்.

முடியுமானால் பஸ் பிரயாணிகள் சங்கம், சினிமா ரசிகர்கள் சங்கம் என்பவை போல நீங்கள் வட்டத்துக்கு ஓர் "இலக்கிய ரசிகர்கள் சங்கம்" அமைத்து, "வீட்டுக்கு ஒரு புத்தகசாலை" என்னும் இயக்கத்துக்குத் திட்டம் வகுக்க வேண்டும்.

அத்துடன் இலக்கிய ரசனையுள்ள நீங்கள், உங்கள் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் இலக்கிய ருசியை ஊட்ட முயற்சி செய்யவேண்டும் அவ்வாறு முயற்சி செய்தால் உங்களுடைய வாழ்க்கை மேலும் வளம் பெறும்; போலி நாகரிகத்திலுள்ள மோகமும் போட்டிப் பந்தயங்களிலுள்ள வேகமும் படிப்படியாகக் குறையும்

ஒரு நாட்டின் நாகரிகத்தை அளவிடுவதற்கு அதனுடைய இலக்கிய வளர்ச்சிதான் அடிப்படையாயிருக்கிறது. அது மட்டுமல்ல, மிருகத்தன்மையுள்ள மனிதனை மனிதத்தன்மையுள்ள மனிதனாக மாற்றக் கூடிய சக்தி இலக்கியத்துக்குத்தான் இருக்கிறது அப்படி மாற்றினால் உங்களுக்கும் க்ஷேமம், எழுத்தாளர்களாகிய எங்களுக்கும் க்ஷேமம்

அந்த நிலை வந்த பிறகு, எத்தனை பாரதிகள் பிறந்தாலும் அவர்களைக் கஞ்சாவால் கொல்ல முடியாது, எத்தனை புதுமைப் பித்தன்கள் பிறந்தாலும் அவர்களைப் புகையிலையால் கொல்ல முடியாது.

ஆம், அவ்வாறு கொல்ல முடியுமென்று எல்லையில்லாத விஞ்ஞானமும், முடிவில்லாத ஆராய்ச்சிகளும் கூட இன்றுவரை

இறுதியிட்டுச் சொல்லவில்லை. ஏன் நம்முடைய அனுபவஞானம் கூட அதற்கு நேர் விரோதமாய்த்தான் இருந்து வருகிறது.

எனவே, நீங்கள் கஞ்சாவைப் பற்றிக் கவலைப்படவேண்டாம், புகையிலையைப் பற்றிக் கவலைப்படவேண்டாம். மேலே கூறிய இலக்கிய உணர்ச்சியை மட்டும் நீங்கள் உங்களிடையே வளர்த்துக் கொண்டால் போதும்; உங்கள் எழுத்தாளர்கள் சாட்சாத் ஸ்டாலினைப் போலவும் வின்ஸ்டன் சர்ச்சிலைப் போலவும் பண்டித நேருவைப் போலவும், சுப்பராயனைப் போலவும் ஓயாமல் புகைப்பிடித்தாலும் நெடுநாட்கள் உயிரோடிருந்து தமிழை வளப்படுத்துவார்கள், தமிழ் நாட்டை மேம்படுத்துவார்கள்.

இதில் சந்தேகமேயில்லை!

—பொன்னி , 10-7-1951

✡ ✡ ✡ ✡ ✡

# எனக்குப் பிடித்த புத்தகம்

***மார்க்ஸிம் கார்க்கி 'தாய்'***

ஒரு பெண் எதற்காகப் பிறக்கிறாள்? ஏன் வாழ்கிறாள்? ஓர் ஆண் மகன் எதற்காகப் பிறக்கிறான்? ஏன் வாழ்கிறான்?

அவர்கள் எதற்காகப் பிறக்கிறார்களோ, ஏன் வாழ்கிறார்களோ, அது எனக்குத் தெரியாது ஆனால் நம்முடைய நாவல்களைப் பொறுத்தவரை, அவர்கள் காதல் செய்வதற்கென்றே பிறக்கிறார்கள் கடைசியில் கல்யாணமோ, தற்கொலையோ செய்து கொள்வதற்கென்றே வாழ்கிறார்கள்!

இடையில் சந்திக்க நேர்ந்தால் அவர்கள் என்ன பேசுகிறார்கள்?

கண்ணே! உன்னைக் கண்டது முதல், எனக்குத் தூக்கமேயில்லை. தூணைப் பார்த்தாலும் உன்னைப் போலிருக்கிறது. துடைப்பத்தைப் பார்த்தாலும் உன்னைப் போலிருக்கிறது! என்கிறான் அவன்.

''உங்களுக்கு மட்டுமா? எனக்கும் அப்படித்தான்! கத்தரிக்காயைப் பார்த்தாலும் உங்களைப் போலிருக்கிறது; கழுதையைப் பார்த்தாலும் உங்களைப் போல் இருக்கிறது!'' என்கிறாள் அவள்.

வேறு என்ன இருக்கிறது, பேச? — வாழ்க்கையில் நமக்குள்ள பிரச்சினைகளெல்லாம் காதலும் கல்யாணமும் தானே?

இதோ இந்தக் காதல் காட்சியைப் பாருங்கள்.

நீங்கள் தான் கொடியை ஏந்திக்கொண்டு போகப் போகிறீர்களா? என்று கேட்கிறாள் அவள்.

''ஆம் நானே தான்!'' என்கிறான் அவன்

''முடிவான தீர்மானம் அதுதானா?''

''ஆம், அது என் உரிமை!''

''மறுபடியும் சிறைக்குப் போகவா''

இதற்குப் பதில் இல்லை, அவனிடமிருந்து.

''நீங்கள் மட்டும் . . . '' என்று ஆரம்பிக்கிறாள் அவள்; ''என்னது?'' என்று குறுக்கிட்டுக் கேட்கிறான் அவன்

''ஒன்றுமில்லை; பொறுப்பை வேறு யாரிடமாவது விட்டு விடுங்களேன்?''

''முடியாது, வேறுயாரிடமும் என்னால் விட முடியாது!''

''நான் உங்களை விரும்பிக் கேட்டால் கூடவா?''

'' இந்த மாதிரி பேசுவது உன் வேலையில்லை; அப்படிப் பேச உனக்கு உரிமையும் கிடையாது!'' என்கிறான் அவன், அழுத்தம் திருத்தமாக.

அப்போது அவனுடைய தொண்டை அடைபடுகிறது; தழுதழுத்த குரலில் அவன் சொல்கிறான்

**''நீ எனக்கு மிகவும் பிரியமானவள். அதனால்தான் ... அதனால்தான் ... இந்த மாதிரியெல்லாம் நீ என்னிடம் பேசக் கூடாது என்கிறேன் நான்!''**

**இதில் காதல் இல்லையா? — இருக்கிறது! கல்யாணம் இல்லையா? — இருக்கிறது. ஆனால் வாழ்க்கையில் தாங்கள் கவனிக்க வேண்டிய பிரச்சினைகள் காதலும், கல்யாணமும் மட்டும் அல்ல, வேறு எத்தனையோ இருக்கின்றன என்று இவர்கள் நினைக்கிறார்கள். அவற்றைத் தீர்த்து வைப்பதற்கான வழிவகைகளையும் தேடுகிறார்கள்; சிந்திக்கிறார்கள்; செயல்படுகிறார்கள்.**

தங்களுக்காக மட்டுமா? — இல்லையில்லை, மனிதவர்க்கம் முழுவதற்குமாக!

இத்தகைய காதலர்கள் கடைசியில் கல்யாணமாவது செய்து கொள்கிறார்களா என்றால், இல்லை, தற்கொலையாவது செய்து கொள்கிறார்களா என்றால் அதுவும் இல்லை! நீண்டகால விசாரணைக்குப் பிறகு ஆயுள் தண்டனை அடைந்த அவன் சைபீரியாவுக்கு (அந்தமான் தீவு போன்றது) அனுப்பப்படுகிறான் அதற்குப் பின் அவனுடைய தாயைச் சந்தித்த அவள் கேட்கிறாள்·

"என்ன தேசாந்தரமா? சைபீரியாவுக்கா?

"ஆமாம், ஆமாம்" என்று சொல்லிவிட்டு, அந்தத் தாய் கேட்கிறாள்

"நீ எப்போது போய் அவனோடு சேரப் போகிறாய்?"—அவள் சொல்கிறாள்:

"நானும் ஒரு தண்டனையை எதிர்நோக்கித்தான் இருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியும். அநேகமாக அவர்கள் என்னையும் சைபீரியாவுக்குத்தான் அனுப்புவார்கள். அப்போது அவரை அனுப்பிய இடத்துக்கே என்னையும் அனுப்பிவிடுங்கள்!" என்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்வேன்!"

இதைக் கேட்டதும் தாயின் உள்ளம் உருகுகிறது. 'உனக்கு ரொம்ப சிரமமா யிருக்குமே!" என்று அவளைக் கட்டித் தழுவிக் கண்ணீர் வடிக்கிறாள்.

யார் இந்தத் தாய்? — இந்தத் தாய்தான் மனிதாபிமானம் மிக்க மாக்ஸிம் கார்க்கியின் தாய்! மாக்ஸிம் கார்க்கியின் தாய் என்றால், அவனைப் பெற்றெடுத்த தாய் இல்லை அவனால் பெற்றெடுக்கப் பட்ட தாய்!

ஆம்! உலகப் பிரசித்திபெற்ற "தாய்" என்னும் அவனுடைய நாவலில்தான் வருகிறார்கள். மேலே குறிப்பிட்ட லட்சியக் காதலர்களான பாவெலும் ஸாஷாவும். 'இமயமலை வீழ்ந்தது போல...!' என்று எக்காளத்தோடு பாடினானே பாரதி — அந்த ஜார் அரசனின்

வீழ்ச்சிக்குக் காரல் மார்க்ஸும், ஏங்கல்ஸும் வித்திட்டிருக்கலாம். லெனினும் ஸ்டாலினும் அதற்கு நீர் பாய்ச்சியிருக்கலாம். ஆனால் அதைக்கட்டிக் காத்து வளர்த்த ருஷ்ய எழுத்தாளர்களிலே முக்கிய மானவன், முதன்மையானவன் மாக்ஸிம் கார்க்கி. அவன் சொன்னான்

''மனிதன்! — ஆகா, அவனுடைய பெயர்தான் எவ்வளவு கம்பீரமாக ஒலிக்கிறது! சர்வ வல்லமை பொருந்திய அவனுக்கு மேலாக வேறு எதையும் என்னால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை.''

ஆம் மனிதாபிமானம் மிக்க மாக்ஸிம் கார்க்கியின் தாய்க்கும் மேலாக வேறொரு நாவலை என்னாலும் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லைதான்.

—ஆனந்த விகடன், 1981

❀ ❀ ❀ ❀ ❀

# நாவல் பிறக்கிறது

''பிறப்பதெல்லாம் இறக்கும், இறப்பதெல்லாம் பிறக்கும்.'' என்பது நம்மவர் நம்பிக்கை.

''இறப்பதெல்லாம் பிறக்கும்'' என்பதைச் சிலர் ஒப்புக் கொள்ளாவிட்டாலும் ''பிறப்பதெல்லாம் இறக்கும்'' என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள்.

ஆனால், நாவல்கள்?. ...

பிறப்பதெல்லாம் இறந்து விடுகின்றனவா?—இல்லை; இறவாத புகழுடைய நாவல்கள் எத்தனை எத்தனையோ இருக்கின்றன. அவற்றின் பட்டியலைக் கொடுத்து, இங்கே நான் எவ்வளவு தூரம் படித்தவன் என்பதைக் காட்டிக் கொள்ள விரும்பாததால், மேலே தொடர்கிறேன்.

அத்தகைய நாவல்கள் எப்படிப் பிறக்கின்றன?
எங்கிருந்து பிறக்கின்றன?

சென்னை மூர் மார்க்கெட்டில் விற்கும் பழைய பிறமொழிப் பத்திரிகைகள், பழைய பிறமொழி நாவல்கள் ஆகியவற்றிலிருந்தா? ஹிக்கின்பாதம்சில் விற்கும் புதிய ஆங்கிலப் பத்திரிகைகள், புதிய ஆங்கில நாவல்கள் ஆகியவற்றிலிருந்தா?—இல்லை, இல்லவே இல்லை. அதோ, எச்சில் சோற்றுக்கு நாயுடன் போராடிக் கொண்டிருக்கிறானே, அவனைக் கண்டு எவனுடைய நெஞ்சம் பதறுகிறதோ—அதோ, நோய்ந்த புடவையில் பாதியை தோட்டத்து வேலியின் மேல் போட்டுவிட்டு, இன்னொரு பாதியை இடையிலே சுற்றிக் கொண்டு நிற்கிறாளே, அவளைக் கண்டு எவனுடைய இதயம் குமுறுகிறதோ—அவனுடைய நெஞ்சத்திலிருந்து, அவனுடைய இதயத்திலிருந்து அத்தகைய நாவல்கள் பிறக்கின்றன. அவ்வாறு பிறக்கும் நாவல்கள் காலத்தை மட்டுமல்ல, காலனையும் வெல்லும் சக்தி வாய்ந்தவையாகி விடுகின்றன.

"எதை எழுதினாலும் அதில் உயிர் இருக்க வேண்டும்; உணர்ச்சி இருக்க வேண்டும்" என்பது, நான் எழுத ஆரம்பித்த போதே எடுத்துக்கொண்ட பிரதிக்ஞை இவையிரண்டும் இல்லாமல் எழுதுவதில்தான் என்ன பலன்? படிப்பதில்தான் என்ன பயன்?

அநீதியையும் அக்கிரமத்தையும் அன்பென்றும் பண்பென்றும் பேசி எவன் மூடி மறைக்கிறானோ, "நல்லவனாக மட்டும் வாழ்ந்தால் போதாது; வல்லவனாகவும் வாழ வேண்டும்!" என்ற நரித்தனத்தோடு எவன் தன்னை உலகமென்னும் அரங்கத்தில் நடிக்க மேக்-அப் போடாத நடிகனாக்கிக் கொண்டு விடுகிறானோ, அவனால் மேற்கூறிய நாவல்களை எழுதமுடியாது; வாணிப நோக்கத்துடன் எழுத முயன்றாலும் வராது; வரவே வராது.

நண்பர் அகிலன் சொன்னார்: நன்றாகச் சொன்னார்—நதிமூலத்தையும் ரிஷிமூலத்தையும் ஆராயக்கூடாது என்பார்களே, அதுபோல் நாவலின் மூலத்தையும் ஆராயக்கூடாதென்று—உண்மை; முக்காலும் உண்மை—நம் தமிழ்நாட்டு நாவல்களைப் பொறுத்தவரை!

ஏன் இந்த நிலை?—இதோ சில காட்சிகள்:

### களம்: மூர் மார்க்கெட்; காலம்: மாலை

"எங்கே சார், இப்படி?"

"சும்மாத்தான்!"

"சும்மா யாராவது வருவார்களோ? செப்படி வித்தைக்காரர்களிடம் தாயத்து, தாது புஷ்டி மாத்திரை ஏதாவது வாங்க வந்தீர்களாக்கும்?"

"ஹி! ஹி!! அதெல்லாம் ஒன்றுமில்லை. உங்களுக்குத்தான் தெரியுமே, ஓய்ந்த நேரத்திலே நான் பத்திரிகைகளுக்கு ஏதாவது எழுதுவேன் என்று! அதற்காக ஏதாவது 'மெட்டீரியல்ஸ்' கிடைக்குமா என்று பார்க்க வந்தேன்!"

''மெட்டீரியல்ஸ் என்ன சார், வேண்டிக்கிடக்கிறது. தச்சனுக்கு உளியும், கொட்டாப்புளியும் தேவைப்படுவதுபோல, கொத்தனுக்குக் கரண்டியும், மட்டப்பலகையும் தேவைப்படுவதுபோல, உமக்கு வேண்டியது காகிதமும் பேனாவும்தானே?''

''காகிதமும் பேனாவும் இருந்து விட்டால் போதுமா? எழுத ஏதாவது.....?''

''மூளை வேண்டும்! அவ்வளவுதானே?''

''நல்லவேளை, ஞாபகப்படுத்தினீர்கள்! அப்படி ஒன்று இருப்பதாக இப்பொழுதுதான் என்னுடைய ஞாபகத்துக்கு வருகிறது; நான் வரட்டுமா?''

''என்ன அவ்வளவு அவசரம்? அப்படி என்னத்தை மறைத்து மறைத்து எடுத்துக்கொண்டு போகிறீர்?''

''அதுதான் சொன்னேனே.....''

''ஓ, மெட்டீரியல்ஸா? அதை மறைப்பானேன்? அந்தப் பாவி ஒரே ஒரு பிரதி அச்சிட்டு உமக்கு மட்டும் அனுப்பி வைத்தாலும் பரவாயில்லை; அவன்தான் லட்சக்கணக்கில் அச்சிட்டு உலகம் முழுதும் அனுப்பித் தொலைக்கிறானே!''

''நன்றாய்ச் சொன்னீர்கள்! எனக்கும் சில சமயம் அப்படித்தான் தோன்றுகிறது—என்ன செய்யலாம்? எவன் முந்திக் கொள்கிறானோ, அவனுக்கு அடிக்கிறது யோகம்!

''அடிக்கட்டும், அடிக்கட்டும்; சுய சிந்தனையாளர்களுக்கு உரிய கௌரவமும், தக்க பாதுகாப்பும் இந்த நாட்டில் கிடைக்கும் வரை உம்மைப் போன்றவர்களுக்கு யோகம் அடித்துக் கொண்டே இருக்கட்டும்!''

இதோ, இன்னொரு காட்சி;

## களம்: ஒரு வீட்டின் முற்றம்; காலம்: பிற்பகல்

''அடி, காமு! கோடி வீட்டுக் கோமளத்தைப் பார்த்தாயோ? அவள் ஏதோ ஒரு பத்திரிகைக்கு நாவல் எழுதினாளாம்; முழுசா ஆயிரம் ரூபாய் கிடைத்ததாம்; பத்து பவுனிலே இரண்டு வடம் சங்கிலி வாங்கிக் கழுத்திலே போட்டிண்டிருக்கா! நீயும்தான் இரவல் வாங்கியாவது தினம் ஏழெட்டு நாவல்கள் படிக்கிறே, என்னடி பிரயோசனம்? நாலு நாவல் படித்தால் உனக்கும் ஒரு நாவல் எழுத வராதோ?''

''ஏன் வராது, நல்லா வரும்! நானும் எழுதி அனுப்பிண்டுதான் இருக்கேன், அவா போட்டத்தானே?''

''நீயே அனுப்பினால் போடுவாளோ? பார்க்கிறவாளைப் பார்த்துக் கொடுக்கிறவாகிட்டே கொடுக்கணும்!''

''அப்போ மட்டும் என்ன வாழுதாம்? தபால்காரன் திருப்பிக் கொண்டுவந்து கொடுக்கிறதுக்குப் பதிலா, அவாளே திருப்பிக் கொண்டு வந்து கொடுத்துடறா !''

''அட பாவமே! 'சமைக்கத் தெரியுமா, சாப்பிடத் தெரியுமா?' என்றாவது ஏதாவது எழுதேண்டி!''

''அதையும் தான் எழுதிப் பார்த்தேன் '' ''என்ன எழுதினே?''

''அப்பளாம் இடுவது எப்படி, வடாம் போடுவது எப்படி?'' என்று இரண்டு புத்தகங்கள் எழுதி வான்மதி பதிப்பகத்துக்கு அனுப்பிப் பார்த்தேன், அந்தப் புண்ணியவான் என்னடான்னா, ''பொரித்து எடுப்பது எப்படி, எடுத்துப் 'பரிமாறுவது எப்படி?'' என்று இன்னும் இரண்டு புத்தகங்கள் எழுதி அனுப்பினால், நாலையும் 'அவுட்ரைட்'டா எடுத்துண்டு, நாற்பது ரூபாய் தரேன்னு எழுதியிருக்கான். . !''

''காகிதத்துக்கும் மசிக்கும்கூடக் காணாது போலிருக்கே?''

''அந்த வெட்கக்கேட்டை ஏன் கேட்கிறேள்? இன்னும் கொஞ்சம் நாட்கள் போனா, அந்த மனுஷன் எழுதிய களைப்புத் தீர ஒரு கப் காப்பிக்குக் காசு கொடுத்தால் போதாதா என்று கூடக் கேட்பான் போலிருக்கிறது!''

''பத்திரிகைக்காரர்கள் கூட விஷயத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், இத்தனை பைசாவுக்கு இத்தனை அப்பளாம் என்று நாம் கணக்கிட்டு வாங்குவதுபோல், இத்தனை பக்கக் கதைக்கு இத்தனை ரூபாய்ன்னு கணக்கிட்டுக் கொடுக்கிறாளாமே?''

''அவர்கள் என்ன செய்வார்கள், பாவம்! வாசகர்களும் பக்கம் கணக்குப் பார்த்துத்தானே எதையும் வாங்குகிறார்கள்!''

இன்றைய இலக்கிய கர்த்தாக்கள், பத்திரிகைக்காரர்கள், பதிப்பாளர்கள், வாசகர்கள் ஆகியவர்களின் நிலை இதுவாக இருந்தால், இந்த நாட்டிலே நாவல் பிறக்கவா செய்யும்? இறக்குமதிதானே ஆகும்?

இந்த 'இறக்குமதி வியாபாரம்', 'ஏற்றுமதி வியாபார'மாக மாற வேண்டுமானால், நடுநிலையோடு எதையும் நாடும் நல்ல விமர்சகர்கள் நம்முடைய நாட்டுக்குத் தேவை

நல்ல விமர்சகன் என்றால், அவனுக்கு நாலும் தெரிந்திருக்க வேண்டும். கதை எழுத வரவில்லை என்பதற்காக விமர்சனம் எழுத வந்துவிட்டவனாக இருக்கக்கூடாது!

சில விமர்சகர்கள் இருக்கிறார்கள். இன்னார் எழுதிய இன்ன நாவலுக்குப் பிறகு, தமிழில் நல்ல நாவல் எதுவும் வரவில்லை என்று கண்ணை மூடிக்கொண்டு எழுதுவார்கள் நமக்கோ அப்பொழுதுதான் அப்படி ஒரு நாவல் வந்திருப்பதே தெரியும்! தேடாத இடமெல்லாம் தேடி அதை வாங்கிப் படிப்போம்—பலன்?—இரண்டு பக்கங்களுக்குமேல் படிக்க முடியாது, புத்தகத்தை மூடிக் கீழே வைத்துவிட்டு, அந்த விமர்சகரால் பெற்ற புத்தியைக் கொள்முதல் கணக்கில் எழுதிவைப்போம்—இல்லையா?

இவர்களுக்கு நான் ஒன்று சொல்லுவேன்—நீங்கள் ஏதாவது எழுத வேண்டும். பிழைப்புக்காக, அல்லது பெயர், புகழுக்காக—அவ்வளவுதானே?

இருக்கவே இருக்கின்றன. நம் அரும்பெரும் தமிழ் நூல்களில் சில—யார் எப்படி வேண்டுமானாலும், எத்தனை முறை வேண்டுமானாலும் வியாக்கியானம் செய்வதற்குரிய வசதியோடு—அரைத்த மாவையே அரைத்துக்கொண்டு, கரைத்த புளியையே கரைத்துக் கொண்டு, காலட்சேபம் செய்யுங்களேன்? தாராள நோக்குடைய தமிழ்ப் பெருமக்களின் தயவு உங்களுக்குக் கிடைக்காமலா போய்விடப் போகிறது?—அவர்கள்தான் தயாராயிருக்கிறார்களே, உங்கள் வியாக்கியானங்களை வாங்கிப் படிப்பதோடு, விழாவும் கொண்டாட!

என்னைப் பொறுத்தவரை 'நாவல் பிறந்த கதை'யை நான் இங்கே சொல்லப் போவதில்லை, பிறக்கும் கதையைத் தான் சொல்லப் போகிறேன்:

அதோ, நாற்பது வருடகாலம் இரவும் பகலுமாக மாறி மாறி உழைத்த பிறகு, ஓய்வு பெற்று வருகிறான் ஒரு மில் தொழிலாளி; 'யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே!' என்பது போல, அவனுக்கு முன்னால் 'லொக், லொக்' என்ற இருமல் ஓசை வருகிறது. அவனை எதிர்நோக்கிக் குடிசையின் வாசலிலே நிற்கிறாள் அவன் மனைவி—'வரும்போது சும்மா வரமாட்டார், ஆயிரமோ, இரண்டாயிரமோ கொண்டு வருவார், கல்யாணத்துக்குத் தயாராகிப் பத்து வருடங்களாகக் காத்துக் கொண்டிருக்கும் பெண்ணுக்குக் கல்யாணம் செய்துவைத்து விடலாம். பையன்களில் யாராவது ஒருவனைப் பத்தாம் வகுப்பு வரையிலாவது படிக்க வைக்கலாம், குடிசையைப் பிரித்துக் கட்டலாம், மாற்றிக் கட்டிக்கொள்ள மறுசேலை வாங்கலாம்; மாடும் இரண்டு பிடித்துக் கொள்ளலாம்' என்றெல்லாம் எண்ணமிட்டபடி!

அவன் அவளை நெருங்குகிறான்.

'லொக், லொக்!'

''கொஞ்சம் வெந்நீர் கொண்டு வரட்டுமா?'' என்று கேட்கிறாள் அவள். ''கொண்டு வா!'' என்கிறான் அவன்.

வெந்நீர் வருகிறது, குடிக்கிறான்.

அதற்குமேல் ஆவலை அடக்கமுடியவில்லை, அவளால்

''என்ன கிடைத்தது?'' என்று கேட்கிறாள், 'டி.பி !' என்கிறான் அவன்!

அப்போது அவள் விடுகிறாளே, பெருமூச்சு—அந்தப் பெரு மூச்சிலிருந்து என்னுடைய நாவல் பிறக்கிறது!

அதோ, வேலைக்கு வருகிறாள் ஒரு குடியானவப் பெண், குண்டுக்கட்டாகத் தூக்கிக் கொண்டுபோய் அவளைக் கெடுக்கி றான் ஒரு மைனர், அந்த அவமானத்தைத் தாங்காமல் தூக்கிலே தொங்குகிறாள், அவள்!

செய்தி பரவுகிறது, பெற்ற தாய் துடிக்கிறாள். பேணிக் காத்த தந்தை பழிக்குப் பழி வாங்கும் நோக்கத்துடன் மைனர் வீட்டுக்குப் போகிறான், எல்லோரையும் தீர்த்துக் கட்டியபிறகு, எஞ்சி நிற்கிறது தொட்டிலிலே தூங்கும் ஒரு குழந்தை, அந்தக் குழந்தையை நெருங்குகிறான், கத்தியை ஓங்குகிறான்—அது சிரிக்கிறது, தூக் கத்தில்தான்!

கத்தி கீழே விழுகிறது. கொலைகாரன் குனிந்து அந்தக் குழந்தையை முத்தமிடுகிறான்—ஆம், கொலைகாரன்தான் அந்தக் குழந்தையை முத்தமிடுகிறான்!

அப்போது அவன் முகத்தில் படர்ந்திருந்த இருள் மறைந்து ஒளி உதயமாகிறதே, அந்த ஒளியிலிருந்து என்னுடைய நாவல் பிறக்கிறது!

இவ்வாறு பிறக்கும் நாவல்களெல்லாம் வளர்ந்து விடு கின்றனவா என்றால், அதுதான் இல்லை!

காரணம்? அந்த மூன்று எழுத்துக்கள்தான்—வறுமை! எழுத்துக்கு வறுமை நண்பனாயிருக்கலாம், ஆனால் வாழ்வுக்கு அது பகைவனாகவல்லவா இருக்கிறது

அந்தப் பகைவனை ஒவ்வொரு நாளும் எதிர்த்தபடி, நான் உடனுக்குடன் நிறைவேற்றியே தீரவேண்டிய சில கடமைகள், பொறுப்புகள்—இவற்றுக்கிடையே என்னைப் புரிந்துகொள்ள முடியாத என் மனைவி, அவளைப் புரிந்துகொள்ள முடியாத நான்!—''நாம் விரும்புவதையெல்லாம் வாங்கிக் கொடுக்க முடியாத அப்பா, என்ன அப்பா!' என்று நினைக்காமல் நினைக்கும் என் அருமைக் குழந்தைகள், அந்தக் குழந்தைகளின் ஏக்கத்தைக்கூடத் தீர்க்க முடியாத அப்பா, என்ன அப்பா!'' என்று ஏங்காமல்—ஏங்கும் நான்—இந்த ஆசாபாசங்களுக்கு இடையே, அன்றாடம் பிரச்சினைகளுக்கு இடையே, பிறந்தும் வளர முடியாத என்னுடைய நாவல்கள்—கடவுளே! சர்வ வல்லமையுள்ள காசால்தானா என்னையும் என்னுடைய நாவல்களையும் காப்பாற்ற முடியும்? உன்னால் முடியாதா?

—கல்கி, 1961

✤ ✤ ✤ ✤ ✤

# முடிவுரை

''முல்லைக் கொடியாள்!''

புத்தக வடிவில் வெளியாகியிருக்கும் இந்த ''முல்லைக் கொடியாள்'' எனது முதல் முயற்சியாகும்

மேற்படி புத்தகத்தின்மூலம் யாரும் அழைக்காமல் கொள்ளாமல் தமிழ்நாட்டுப் புத்தக உலகில் இப்போதுதான் முதன்முதலாக நான் பிரவேசித்திருக்கிறேன்.

என்னதான் அசட்டுத்தனமாக நடந்துகொண்டாலும் பெற்ற சேயைத் தள்ளாத தாயைப்போல, தமிழன்னையும் என்னைத் தள்ள மாட்டாளல்லவா?

இந்த ஆரம்ப முயற்சிக்கு அன்புடன் ஆசி கூறி முன்னுரை எழுதி உதவியிருக்கும் ஆசிரியர் 'கல்கி' அவர்கள், என்னைப் பொறுத்தவரையில் துரோணரைப் போன்றவர். அத்தகைய ஆசிரியரைப் பற்றி வியாசரைப் போன்றவர்களால்தான் ஏதாவது சொல்ல முடியுமே தவிர, ஏகலைவனைப் போன்ற என்னால் என்ன சொல்ல முடியும்?

பார்க்கப்போனால் அந்த ஏகலைவனுக்குத்தான் என்னை ஈடாகச் சொல்லமுடியுமா? அர்ஜுனன் தன்மீது கொண்ட அசூயைப் போக்குவதற்காக ஆசான் இட்ட ஆணையின்படி, தன்னுடைய கட்டைவிரலைத் துண்டித்துக் காணிக்கை செலுத்தியவன் அவன். அரும்பாடு பட்டுக் கற்ற வில்வித்தையையே அதன்மூலம் அர்ப்பணம் செய்து அமரனையும் மிஞ்சியவன் அவன்!

அவன் எங்கே, நான் எங்கே?

ஆசிரியர் 'கல்கி' அவர்களை அறியாத அந்த நாளிலும் அறிந்த இந்த நாளிலும் எத்தனையோ இலக்கிய ரசிகர்கள்,

எழுத்தாளர்கள் அவரைப் பற்றிப் பெருமையோடு பேசிக் கொள்வதை நான் கேட்டிருக்கிறேன்.

''கடவுளால் சிருஷ்டிக்கப்படும் நிஜ ஜீவன்களாவது இன்று தோன்றுகின்றன, நாளை அழிந்து விடுகின்றன. ஆனால், வியாசராலும் வால்மீகியாலும் சிருஷ்டிக்கப்பட்ட கற்பனை ஜீவன்களோ என்றும் அழியாதவை அத்தகைய சாகாவரம் பெற்ற கதாபாத்திரங்களைச் சிருஷ்டிசெய்து, இறவாத புகழ் பெற்ற வியாசரையும் வால்மீகியையும் போன்றவர்கள், ஆசிரியர் 'கல்கி' அவர்களும், அவருடைய 'கதாபாத்திரங்களும்' '' என்பார் ஒருவர்.

''வியாசரின் கதாநாயகியான திரௌபதிக்கும், வால்மீகியின் கதாநாயகியான சீதைக்கும், இளங்கோவின் கதாநாயகியான கண்ணகிக்கும் தமிழ்நாட்டில் இன்று எங்கெங்கும் கோயில் எழுந்திருப்பதுபோல, நாளை 'கல்கி' அவர்களின் கதாநாயகியான சிவகாமிக்கும் கோயில் எழுந்தால், அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமே இராது!'' என்பார் இன்னொருவர்

''தமிழ்நாட்டில் இன்று மறுமலர்ச்சி இலக்கியம் அடைந்திருக்கும் மகத்தான வளர்ச்சிக்கும், எத்தனையோ எழுத்தாளர்கள் தோன்றி விதம் விதமாக எழுதுவதற்கும்—ஏன், எழுத்தாளர்களுக்கே ஜீவநாடியான இலக்கிய ரசிகர்கள் 'மள மள'வென்று பெருகியதற்கும் கூடப் பெரிதும் காரணமாயிருந்தவர் ஆசிரியர் 'கல்கி' அவர்கள்தான்!'' என்று அடித்துச் சொல்வார் மற்றொருவர்

''அந்த நாளில் அகத்தியனால்தான் தமிழ்மொழி பெருமையடைந்தது'' என்பார்கள் சிலர் ஆனால் கம்பரோ அகத்தியனைப் பற்றிக் கூறும்போது,

'என்றுமுள தென்தமிழ்
இயம்பி இசை கொண்டான்!'

என்கிறார்—அதாவது, தமிழால்தான் அகத்தியன் பெருமையடைந்தானாம்!—ஆனால் இந்த நாளிலோ, ஆசிரியர் 'கல்கி' அவர்களால்தான் தமிழ்மொழி பெருமையடைந்து வருகிறது!'' என்பார் மற்றும் ஒருவர் வியப்புடன்.

இப்படியெல்லாம் ஆசிரியர் 'கல்கி' அவர்களைப் பற்றிக் கேள்விப்படும்போது, அத்தகைய மேதையின் வழித்தோன்றலில் நாமும் ஒருவனாகும் பேறு பெறவேண்டுமென்று நான் கனவு காண்பேன். அந்தக் கனவு நெடுநாட்களுக்குப் பிறகு, எனது அருமை நண்பரும், அக்கம்பக்கம் தெரியாமல் தேசத் தொண்டு செய்வதில் ஆர்வம் உள்ளவரும், கள்ளச் சிந்தையில்லாத வெள்ளை உள்ளம் படைத்தவருமான ஸ்ரீ டி.எம். ராஜாபாதரின் மூலம் ஒருநாள் நனவாகவே ஆகிவிட்டது. அதைக்குறித்து அன்று நான் அடைந்த பெருமை, இந்த ஜென்மத்தில் இன்னொருமுறை அடைய முடியாததாகும்

ஆனால், என்னையும் ஒரு பொருட்டாக மதித்துத் தமிழ் நாட்டுக்கு அறிமுகப்படுத்தி வைத்த ஆசிரியர் 'கல்கி' அவர் களுக்கோ

என்னால் ஏதாவது பெருமையுண்டா? இந்த நிலையில், நான் வழிபடும் தெய்வமாகவே எனது இதயக் கோயிலில் குடிகொண்டி ருக்கும் அவருக்கு, என்னுடைய நன்றி எந்த விதத்திலும் அவசிய மில்லையல்லவா?

நான் கொஞ்சமும் எதிர்பாராத முறையில் இந்தப் புத்தகத்தை இவ்வளவு அழகாக வெளியிட்டிருக்கும் அன்பர் ஸ்ரீ வி ஆர் எம். செட்டியார் பி.ஏ அவர்கள் தமிழ்நாட்டாருக்குப் புதியவர் அல்லர் ஸ்டார் பிரசுராலயத்தின்மூலம் அவர் தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் செய்துவரும் சேவை யாவரும் அறிந்ததாகும்

அவருடைய சேவையை ஒரு சமயம் தமிழ்நாடு இழந்துவிடும் படியான சந்தர்ப்பம் ஒன்று நேர இருந்ததை நேயர்களில் பலர் அறிந்திருக்க மாட்டார்கள் 1929-ஆம் வருஷம் இந்தோ-சீனாவைச் சேர்ந்த சைகோனுக்கு விஜயம் செய்த கவி ரவீந்தரரை வரவேற்று, அங்குள்ள தமிழ் மக்களுக்கு அவரை அறிமுகப்படுத்தி, விஸ்வபா ரதி சர்வ கலாசாலை நிதிக்காக 2601 டாலர்களையும் வசூலித்து அவரிடம் கொடுத்தார் ஸ்ரீ வி.ஆர் எம். அவர்கள் கவி டாகுர்

ஸ்ரீ செட்டியார் அவர்களின் அருங்குணத்தையும், அழகிய ஆங்கில நடைமுறையையும் கண்டு மகிழ்ந்து அவரைத் தம்முடன் சாந்தி நிகேதனத்துக்கு வந்துவிடும்படி அன்புடன் அழைத்ததுதான் மேலே குறிப்பட்ட சந்தர்ப்பமாகும்.

ஸ்ரீ வி.ஆர்.எம் அவர்களின் வெறும் பிரசுரகர்த்தர் மட்டும் அல்ல, அருந்தமிழும் ஆங்கிலமும் ஒருங்கே கற்றுப் பெரும்புலமையடைந்தவர்.

சிறந்த இலக்கிய ரஸிகரோடு, பிரசித்தி பெற்ற எழுத்தாளரும் கூட. கவிதைப் புயல் வீசும் அவருடைய ஆங்கில நடையிலும், தமிழ் வசனத்திலும் சிருஷ்டியின் அழகு உண்மையைத் தழுவி ஓங்கி நிற்கும். ஆங்கிலத்தில் "Shelley and Ascar Wilde—Literary Criticism" என்னும் இலக்கிய விமர்சன நூலை எழுதியிருக்கிறார். அவருடைய இன்னொரு நூலான "Lucid Moments" என்பது லண்டனில் பிரசுரிக்கப்பட்டதாகும்; "Lyric festoons" என்ற சிறந்த சிந்தனைக் கோவை பல அறிஞர்களின் பாராட்டுதலைப் பெற்றதாகும்.

இவை மட்டுமன்றி, தமிழில் இலக்கிய விமர்சன நூல்கள் இல்லாத குறையையும், தம்முடைய "இலக்கிய விருந்து" "கட்டுரைக் கரும்பு" முதலிய நூல்களின்மூலம் ஓரளவு நிவர்த்தி செய்திருக்கிறார். ஆஸ்கார் வைல்டின் "சிறை அனுபவ"த்தையும், கவி ரவீந்தரரின் உலகப் புகழ் பெற்ற "கீதாஞ்சலி"யையும் தமிழாக்கித் தமிழர்களுக்குத் தந்திருக்கிறார்.

இப்படியெல்லாம் தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் அரும்பெரும் தொண்டு ஆற்றி வரும் ஸ்ரீ வி.ஆர்.எம். அவர்கள். என்னுடைய புத்தகத்தையும் ஏற்றுப் பிரசுரித்ததற்காக எனது மனமார்ந்த நன்றியை அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாவம், அவருடைய முழுப்பெயர் ஸ்ரீ வி.ராமச்சந்திரன் என்பது தெரியாத நேயர்கள் பலர், "நீ எந்தக் குலத்தைச் சேர்ந்தவள்? வயது என்ன ஆகிறது? கல்யாணமாகிவிட்டதா....?" என்றெல்லாம் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிக் கடிதங்கள்

எழுதிக் கொண்டிருந்தார்கள். அத்தகைய நேயர்கள் சந்திராவின் மனமார்ந்த அனுதாபங்களை இந்தச் சமயத்தில் ஏற்றுக் கொள்வார் களாக!

மொத்தம் இருபத்தைந்து கதைகள் இந்தப் புத்தகத்தில் வெளி யாகியிருக்கின்றன யுத்தகாலக் காகிதச் சிக்கனத்தை முன்னிட்டு எல்லாக் கதைகளும் சின்னஞ்சிறிதாக எழுதப்பட்டவை. பெரும்பா லும் ஏழைபடும் பாட்டை எடுத்துச் சொல்வதுதான் என்னுடைய கதைகளின் நோக்கமென்றாலும், அவற்றை எல்லோருமே அனுப விப்பார்கள் என்று நம்புவதற்கு இல்லையல்லவா? ஆகவே, கூடுமான வரை யாவருமே அனுபவிக்கும் முறையில் பலதரப் பட்ட கதைகளைக் கொண்டு இந்த 'முல்லைக் கொடியாள்' அலங்கரிக்கப்பட்டிருப்பதை நேயர்கள் உணர்ந்திருப்பார் களென்று நம்புகிறேன்.

ஆசிரியர் 'கல்கி' அவர்களுக்குப் பிறகு, என்னுடைய கதை களைப் பற்றி நான் இங்கு ஒன்றும் சொல்லிக் கொள்ள விரும்ப வில்லை. ஆனால், கையில் எடுத்ததும் ஒரே மூச்சில் படித்து முடித்த பிறகுதான் கீழே வைக்குமாறு தூண்டும் சில புத்தகங்களைப் போல, இந்த 'முல்லைக் கொடியாள்' நேயர்களைத் தூண்டியிருக்க மாட்டாள் என்பது என்னுடைய நம்பிக்கை. ஏனெனில், ஸ்டாண் டுக்கு ஸ்டாண்டு நின்று, இறங்கும் பிரயாணிகளை இறக்கி ஏறும் பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் பஸ் கண்டக்டர்களைப் போல, இந்தப் புத்தகத்தைப் படிக்கும் நேயர்களும் கதைக்குக் கதை நின்று தள்ள வேண்டிய விஷயத்தைத் தள்ளி எடுத்துக் கொள்ள வேண் டிய விஷயத்தை எடுத்துக் கொண்டு மேலே செல்லவேண்டுமென் பது என்னுடைய விருப்பமாகும். அந்த விருப்பம் எவ்வளவு தூரம் நிறைவேறியிருக்கிறதோ, அவ்வளவு தூரம் இந்தக் கதைகளை நான் எழுதியதன் நோக்கமும் நிறைவேறியதாகும்.

— முல்லைக்கொடியாள் , 1-8-1946

# என்னுரை

பிரசுரத்தார் எனக்குப் பிடிக்காத காரியம் ஒன்றைச் செய்துவிட்டார்கள்.

அந்தக் காரியம் இந்தப் புத்தகத்துக்கு 'விந்தன் கதைகள்' என்று பெயர் சூட்டியிருப்பதே!

இல்லையென்றால் இதில் வெளியாகியுள்ள கதைகளை என்னுடைய கதைகள் இல்லையென்று யாராவது சொல்லி விடப் போகிறார்களா என்ன?

'புதுமைப்பித்தன் கதைகள்' என்ற புத்தகம் முதன்முதல் வெளியானபோது, இதே கேள்வி பல எழுத்தாள நண்பர்களிடையே எழுந்தது. அப்போது அமரர் புதுமைப்பித்தன் சொன்னார்.

''என்னைத் தவிர 'என் கதைகள்' என்று சொல்லிக் கொள்ள இங்கே வேறு யாருக்கு ஐயா, தைரியம் இருக்கிறது?''

அவருக்கிருந்த அந்தத் தைரியம் அடியேனுக்கும் உண்டு, அதற்குச் சான்று என்னுடைய கதைகளில் சிலவும் பிற மொழிகளில் இடம் பெறக் கூடிய தகுதியைப் பெற்றிருப்பதேயாகும்.

எனினும், ஏற்கெனவே வெளியான 'முல்லைக் கொடியாள், ஒரே உரிமை, சமுதாய விரோதி' ஆகிய கதைத் தொகுதிகளைப் போல இந்தக் கதைத் தொகுதியும் ஏதாவது ஒரு கதையின் தலைப்பையே தன் தலைப்பாகக் கொண்டு வெளியாகியிருக்கலாமல்லவா?

ஒரு வேளை, 'என் கதைகள்' என்ற தைரியம் எண்ணத்தில் மட்டும் இருந்தால் போதாது. எழுத்திலும் இருக்க வேண்டும் என்பது பிரசுரத்தாரின் எண்ணமோ, என்னவோ!

போகட்டும்......

இலக்கிய உலகில் பொதுவாக ஓர் அபிப்பிராயம்—என்ன அபிப்பிராயம் என்கிறீர்களா?—உங்களால் லேசான விஷயங்க

ளைத்தான் தெரிந்து கொள்ள முடியுமாம் புரிந்து கொள்ள முடியுமாம்—உண்மையான வாழ்க்கையில் பட்டும் படாமல் ஒட்டியும் ஒட்டாமலிருக்கும் 'சௌஜன்யம் மிக்க கதை'களைத்தான் உங்களுக்குப் பிடிக்குமாம்; ருசிக்குமாம்!

'ராஜாமணி ஊஞ்சலைப் பிடித்துக்கொண்டு நின்றான், சூடாமணி கேணியில் ஜலம் இறைத்துக் கொண்டிருந்தாள், ஒரு கணம் இருவர் பார்வையும் பட்டுத் தெறித்தன.' என்பது போன்ற பீடிகையுடன் திடீரென்று ஏற்படும் திடீர்க் கல்யாணங்களும் நிறைந்த 'லைட் மேட்டர்ஸ்' ஸைத்தான் நீங்கள் சுவைப்பீர்களாம்; 'ஹெவி மேட்டர்ஸ்' என்றால் எடுப்பீர்களாம், ஓட்டம்!

அதற்கெல்லாம் காரணம் என்னவாம் தெரியுமா? உங்களுக்கு அவ்வளவு தூரம் 'இலக்கிய ஞானம்' கிடையாதாம். பக்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தெரியுமே தவிர, விஷயத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தெரியாதாம்!

இப்படிச் சொல்கிறார்கள் ஐயா, அவர்கள் இப்படிச் சொல்கிறார்கள்! என்னால் இதை நம்ப முடியவில்லை; உஹூம்—நம்பவே முடியவில்லை!

அதற்காகச் சும்மா விட்டு விடுகிறார்களா? இல்லை; அனுதாபம் காட்டுகிறார்கள். அதை மறுத்தால், "உங்களுக்குத் தெரியாது, ஸார்! புதுமை மக்களுக்குப் பிடிக்கவில்லை; அதனால் சமுதாயத்தைப் படம் பிடிக்கும், 'எக்ஸ்ரே கதை'களையும் அதன் கொடுமைகளின் மேல் தீச்சரம் வீசும் புத்துலக இலக்கியங்களையும் அவர்கள் புறக்கணித்து விடுகிறார்கள்!" என்றெல்லாம் அவர்கள் உங்கள் மேல் குற்றம் சாட்டுகிறார்கள்.

எது எப்படியிருந்தாலும், என்னைப் பொறுத்தவரை நீங்கள் அப்படி இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. இலக்கியத்தில் நான் அப்படிப்பட்ட பாகுபாட்டையும் வகுத்துக் கொள்ளவில்லை.

ஏனெனில், பழைய பாசி பிடித்த வழுக்குப் பாதையை விட்டு விலகிப் புதிய பாதையிலே நான் நடக்க ஆரம்பித்ததும், என்னைத் தொடர்ந்து வருவதை நீங்கள் நிறுத்திக் கொண்டு விடவில்லை; அஞ்சி நடுங்கி ஓடி விடவும் இல்லை!

பார்க்கப் போனால் உங்களைப் பற்றிக் குறை கூறித்திரியும் மகானுபாவர்கள் இதுவரை உங்களுக்காக என்னத்தைச் செய்து குவித்து விட்டார்கள்?

உலக இலக்கியங்களிலே, உலக மொழிகளிலே எத்தனை எத்தனையோ விதமான புதுமைகள், புரட்சிகள் தினந்தினம் பூத்துக் குலுங்கிக் கொண்டிருக்கின்றன—ஏன், நம்மை அடுத்திருக்கும் கேரள நாட்டின் மலையாள இலக்கியங்களிலும், ஆந்திர நாட்டின் தெலுங்கு இலக்கியங்களிலும் கூட அவற்றை நாம் பார்க்கிறோம், பார்த்துப் பெருமூச்சு விடுகிறோம்.

அப்படியிருக்க, தமிழும் தமிழ்நாடு மட்டும் பழமை என்னும் குட்டையில் ஏன் இன்னும் மட்டை போல் ஊறிக் கொண்டிருக்க வேண்டும்?

காரணம் இருக்கிறது—ஆம், காரணம் இருக்கத்தான் இருக்கிறது. அன்றிலிருந்து இன்றுவரை சில 'சைத்தான்'கள் தமிழ் நாட்டு இலக்கியப் பீடத்தைப் பற்றிக் கொண்டு நாசம் புரிந்து வருகின்றன. எதையெல்லாமோ 'புதுமை, புதுமை' என்று கூறிக் கொண்டு அபத்தங்களை, அலங்கார வார்த்தைகளை அள்ளி அள்ளி வீசி, 'குடும்பக் கதைகள்' என்ற பேரிலே, 'ஜீவனற்ற இலக்கியங்களைப் படைத்துக் குப்பைகளைக் குன்றுகளாகவும், கோபுரங்களாகவும் உயர்த்திக் காட்டி, உங்களிடமிருந்து அவை 'உபாதானம்' பெற்று வருகின்றன.

இந்தச் 'செயலற்ற தன'த்தைக் கண்டு நீங்கள் சிரித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும்—இருந்தாலும், மேற்படி 'உபாதானத்'தை நீங்கள் தொடர்ந்து செய்து வந்தால் தமிழ் மொழி வளராது, தமிழ் இலக்கியமும் செழிக்காது.

எனவே, போலியைச் சுட்டெரிக்கும் புதுமைகளை, வாழ்க்கையை அலசி அலசிப் பரிசீலிக்கும் 'ரஸாயன'ங்களை, சமுதாயத்தின் புற்று நோய்களுக்கு 'மின்சார சிகிச்சை' யளிக்கும் புத்தம் புதுமுறைகளை, குரூர வசீகரங்களைப் படம் பிடித்துக் காட்டி, மனித உள்ளத்திலே எங்கோ ஒரு மூலையில் செய்வதறியாது

ஏங்கிக் கிடக்கும் மனிதாபிமானத்தைத் தட்டியெழுப்பும் உணர்ச்சி மிக்க உயிரோவியங்களை, அந்த அபிமானத்துக்கு விரோதமாயிருந்த—இருந்து வருகிற 'மனித மிருக'ங்களின்மேல் வெறுப்பைக் கக்கி, உங்கள் நல்வாழ்வுக்கு வழிதேட முயலும் நவயுகக் கதைகளை இன்று போல் நீங்கள் என்றும் வரவேற்று வாழ்த்தித் தமிழை வளப்படுத்த வேண்டும்; தமிழ் நாட்டை மேம்படுத்த வேண்டும்—இதுவே என் எண்ணம்; இதுவே என் இருபது வருட கால எழுத்து.

இந்த எழுத்தைத் தமிழ் நாட்டு வாசகர்கள் மட்டுமல்ல, தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரும் பாராட்டி, பரிசும் அளித்திருக்கிறார்கள்

இப்படியெல்லாமிருந்தும் கொஞ்ச நாட்களாக என்னைப் பார்க்கும் நண்பர்களெல்லாம், "இருப்பவனை விட்டு விட்டு இல்லாதவனைப் பற்றியே ஏன் ஐயா, எழுதிக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்கிறார்கள்.

அவ்வாறு கேட்பவர்கள் இல்லாதவர்களாயிருக்கிறார்களா வென்றால் இல்லை; இருப்பவர்களாயிருக்கிறார்கள்.

பாவம் பொழுது தானாகவே போகக்கூடியது என்பது கூட இவர்களுக்குத் தெரியாது அதனாலேயே அதைப் போக்கக் கதைகள் வேண்டும் என்கிறார்கள். குலுங்கும் கொங்கையும் குலுங்காத அல்குலும் அந்தக் காலத்துக் காவியங்களில் அரசர்களுக்காக இடம் பெற்றது போல கவைக்குதவாத காதலும் கருத்துக் கொவ்வாத கல்யாணமும் இந்தக் காலத்துக் கதைகளிலே இவர்களுக்காக இடம் பெற வேண்டும் என்கிறார்கள்

இயற்கை மட்டும் இடங் கொடுக்குமானால், ஒரு நாள் இருபத்து நாலு மணிநேரமும் இவர்கள் பெண்களுடனேயே காலத்தைக் கழிக்கத் தயாராயிருப்பார்கள்!

மற்றவற்றைப் பற்றி இவர்களுக்குக் கவலையும் கிடையாது; அவற்றைப் பற்றி நினைத்துப் பார்க்கும் அளவுக்குக் கூட மனிதத் தன்மையும் கிடையாது.

அதே முறையில் எதிர்கால மக்களான நிகழ்கால இளைஞர்களையும் உருவாக்கி, அவர்களிடம் இவர்களுக்கு எதிராக வளர்ந்துவரும் எதிர்ப்புச் சக்தியை எந்த விதத்திலாவது பறித்துவிடப் பார்க்கிறார்கள் இந்தப் பாதகர்கள்!

அதற்காகவே 'காமக் கலை'யை 'விஞ்ஞானக் கலை' என்று சொல்லும் அளவுக்கு இவர்களுடைய 'கலா ஞானம்' வளர்ந்திருக்கிறது. அதற்காகவே 'அநாகரீக'த்தை 'நாகரீகம்' என்று சாதிக்கும் அளவுக்கு இவர்களுடைய 'பண்பு' உயர்ந்திருக்கிறது. அதற்காகவே 'பொழுதைப் போக்க உதவாத கதையை எப்படிக் கதை என்று சொல்ல முடியும்?' என்று கேட்கும் அளவுக்கு இவர்களுடைய அசட்டுத் துணிச்சல் அதிகரித்திருக்கிறது.

அன்பு ஆசையாகி, ஆசை அன்பானதற்குக் காரணம் இவர்களே; காதல் காமமாகி, காமம் காதலானதற்குக் காரணம் இவர்களே, பாவம் புண்ணியமாகி, புண்ணியம் பாவமானதற்குக் காரணம் இவர்களே, கலை விபசாரமாகி, விபசாரம் கலையானதற்குக் காரணம் இவர்களே, இலக்கியம் பித்தலாட்டமாகி, பித்தலாட்டம் இலக்கியமானதற்குக் காரணம் இவர்களே; நாகரீகம் அநாகரீகமாகி, அநாகரீகம் நாகரீகமானதற்குக் காரணம் இவர்களே, பணம் பகவானாகி, பகவான் பணமானதற்குக் காரணமும் இவர்களே!

இதுவரை, 'பண்பு' என்னும் பட்டுத் திரைக்குப் பின்னால் ஒடி ஒளிந்து கொண்டிருந்த இந்தப் 'பக்காத் திருடர்கள்' இப்போது 'தமிழ்' என்னும் தங்கத் திரைக்குப் பின்னால் ஓடி ஒளிகிறார்கள்.

''தமிழ் என்றால் இனிமையல்லவா? அந்த இனிமையான தமிழில் இனிமையான கதைகள் எழுதினால் எவ்வளவு நன்றாயிருக்கும்!'' என்று இவர்கள் 'சுவாரஸ்ய'மாகச் சொல்லும்போது, ''பணம் என்றால் பாஷாணமல்லவா? அந்தப் பாஷாணத்தின் துணையால் பலருடைய ஆன்மாவை நீங்கள் கொல்லாமலிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்!'' என்று 'அசுவாரஸ்ய'மாகக் கொட்டாவி விடத் தோன்றுகிறது எனக்கு!

எது எப்படியிருந்தாலும் எனக்குத் தெரிந்தவரை இருப்பவன் வெளியே நல்லவனாயிருக்கிறான்; உள்ளே பொல்லாதவனா யிருக்கிறான்.

இல்லாதவனோ, வெளியே பொல்லாதவனாயிருக்கிறான்; உள்ளே நல்லவனாயிருக்கிறான்

அவனுக்கு வெளியே நல்லவனாயிருக்கச் சமூக நிலை இடங் கொடுக்கிறது; இவனுக்கு வெளியே நல்லவனாயிருக்கச் சமூக நிலை இடங்கொடுக்கவில்லை

இந்த வித்தியாசம் ஒழிய வேண்டாமா? இருசாராரும் உள்ளும் புறமும் ஒன்றாக வாழ வேண்டாமா? இலக்கியம் அதற்கு உதவ வேண்டாமா?

எனவே, இருப்பவனைப் பற்றி எழுதி அவனுடைய பணத்துக்கு உண்மை இரையாவதை விட, இல்லாதவனைப் பற்றி எழுதி அவனுடைய அன்புக்கு உண்மை இரையாவதே மேல் என நான் எண்ணுகிறேன்; அதனால் இனிக்கும் தமிழ் இன்று கசந்தாலும், கசக்கும் வாழ்க்கை என்றாவது ஒரு நாள் இனிக்கும் என நான் நம்புகிறேன்.

இத்தகைய குறிக்கோளுடன் எழுதும்போது, 'இல்லாதவனுக்கு வாழ்க்கையில் நம்பிக்கை உண்டாகும்படி எழுதவேண்டும்' என்று சில விமர்சகர்கள் கூறுகிறார்கள். அதாவது, செத்தாலும் அவன் நம்பிக்கையுடன் சாக வேண்டும் என்பது அவர்களுடைய கட்சி. என்னுடைய கட்சியோ அதற்கு நேர் விரோதமானது. அதாவது, செத்துத் தொலைபவன் நம்பிக்கையோடுதான் செத்துத் தொலைய வேண்டும் என்பது என்ன விதி! நம்பிக்கையில்லாமல்தான் செத்துத் தொலையட்டுமே!

உண்மை ஒன்று வாழ்ந்தால் போதாதா? உலகம் வாழ?

—விந்தன் கதைகள், 15-5-1958

❋ ❋ ❋ ❋ ❋

# வயிறும் வாழ்வும்

அப்போது 'கல்கி' காரியாலயத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த காலம். பணி என்றால் அன்புப் பணி அல்ல; பணத்துக்காக ஆற்றிக்கொண்டிருந்த பணிதான்!

ஒரு நாள் நண்பர் ஒருவர், ''ஸார், உங்களை ஒருவர் தூக்கி யடித்துவிட்டார்!'' என்று உற்சாகத்துடன் சொல்லிக்கொண்டே என் அறைக்குள் நுழைந்தார்.

அதைக் கேட்டதும் திடுக்கிட்டு என்னை நானே தொட்டுப் பார்த்துக்கொண்டேன். ''உங்களை என்றால் உங்களை அல்ல; உங்கள் கதைகளை!'' என்றார் நண்பர்.

''ஐயோ பாவம், என்னுடைய கதைகள் அவரை என்ன செய்தனவோ?''

''வேறொன்றும் செய்யவில்லை, உங்களைப் போலவே அவ ரையும் எழுத வைத்துவிட்டன!''

''ரொம்ப சந்தோஷம். அதை விடப் பெருமை வேறென்ன வேண்டும், ஓர் எழுத்தாளனுக்கு?''

''பெருமையாவது! ஆசிரியர் கல்கி அவர்கள் பார்த்தால் நீங்கள்தான் வேறொரு புனைபெயரில் அந்தக் கதையை எழுதுகிறீர் களாக்கும் என்று எண்ணி உங்களைக் கட்டாயம் வீட்டுக்கு அனுப்பிவிடுவார், ஜாக்கிரதை!'' என்று நண்பர் எச்சரித்தார்.

இந்தச் சம்பவத்துக்குப் பின் ஒரு நாள் அமரர் கல்கி அவர்கள் என்னைத் தம் வீட்டுக்கு வருமாறு பணித்தார்கள், சென்றேன். கையில் திறந்த பத்திரிகையொன்றை வைத்துக்கொண்டு ஏதோ யோசித்த வண்ணம் அப்படியும் இப்படியுமாகத் தம் அறையில் அவர்கள் நடைபோட்டுக் கொண்டிருந்தார்கள்.

''அழைத்தீர்களாமே?'' என்றேன் நான்.

''கல்கி காரியாலயத்தில் வேலைபார்க்கும் நீங்கள் வேறெந்தப் பத்திரிகைக்கும் கதையோ கட்டுரையோ எழுதக் கூடாது என்ற விஷயம் உங்களுக்குத் தெரியுமா?'' என்று தமக்கே உரித்தான கம்பீரத்துடன் அவர்கள் கேட்டார்கள்

''தெரியும்!'' என்றேன் நான்

''சரி, இந்தப் பத்திரிகையில் வெளியாகியிருக்கும் தொடர் கதை யாருடைய தொடர்கதை?''

''தெரியாது!''

''உங்களுடைய தொடர்கதை என்று பலர் எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்களே, அதற்கு என்ன சொல்கிறீர்கள்?''

''அவர்கள் ஒருவேளை என்னுடைய விரோதிகளாயிருக்கலாம்!''

''இல்லை, உங்களுடைய அபிமானிகள்தான் அப்படி எழுதியிருக்கிறார்கள் அத்துடன், 'கல்கி'யில் ஏன் அவர் தொடர்கதை எழுதக்கூடாது என்றும் கேட்டிருக்கிறார்கள்.''

அவர்கள் நாசமாய்ப் போகட்டும்!' என்று மனத்துக்குள் சபித்துக்கொண்டே நான் பலிபீடத்தில் நிற்கும் ஆடுபோல் நின்றேன்

அதற்குப் பின் ஆசிரியர் அவர்கள் என்ன நினைத்தார்களோ, என்னமோ, ''சரி, போய் வாருங்கள்!'' என்று என்னை அனுப்பிவிட்டார்கள்.

வீட்டுக்கல்ல; காரியாலயத்துக்குத்தான்!

அதன் விளைவே 'கல்கி'யில் தொடர்ந்து வெளியாகி, உங்கள் உள்ளத்தைப் பெரிதுங் கவர்ந்த 'பாலும் பாவையு'மாகும்.

இத்தகைய புயலுக்கும் பூகம்பத்துக்கும் என்னை உள்ளாக்கி, நண்பர் திரு. முருகு சுப்பிரமணியம் அவர்களை 'பொன்னி' வாசகர்களிடம் திண்டாட வைத்த கதையே 'கண் திறக்குமா?' கதை, அதற்காக நான் எடுத்த அவதாரமே 'நக்கீரன்' அவதாரம்!

ஏன் எடுத்தேன்? காலமெல்லாம் என்னைத் தொழுது, கடைசியில் இரணியன் கையிலோ முதலையின் வாயிலோ சிக்கிக்கொண்ட பக்தனைக் காப்பாற்றவா? இல்லை, என்னை நானே காப்பாற்றிக் கொள்ளத்தான்!

வாழ்வதற்காக வயிறு செய்யத் தூண்டும் எத்தனையோ தவறுகளில் அதையும் ஒன்றாகப்பாவித்து என்னை அன்று மன்னித்துவிட்ட ஆசிரியர் கல்கி அவர்களோ இன்று அமரராகிவிட்டார்; அந்தத் தவறைத் தாம் செய்த தவறாகக் கருதி இன்னல் பலவற்றுக்கு உள்ளான திரு. முருகு சுப்பிரமணியம் அவர்களோ இன்று தமிழ்ப் பெரு மக்களால் நாடு கடத்தப்பட்டு விட்டார்! — ஆம், அவர்களுக்காக அசல் தமிழ்ப் பத்திரிகையொன்றை நடத்தியதே அவர் செய்த குற்றம் — அதற்காகவே இன்று அவர் மலேயாவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்!

இந்நிலையிலே நீண்ட நாட்களுக்குப் பின் நூல் வடிவம் பெற்று வரும் இக்கதை, என்னை இன்னும் என்ன பாடு படுத்தப் போகிறதோ, தெரியவில்லை!

—கண் திறக்குமா? , 1-4-1956

# வாழ்த்து!

''*பாரதம் வாழி, பாரதம் வாழி!*
*பசிகோவிந்தம் பாடப் பசிதந்த*
*பாரதம் வாழி!*

*தாய்த்தமிழ் வாழி, தாய்த்தமிழ் வாழி!*
*தரித்திரத்தில் சரித்திரப் பெருமைபெற்ற*
*தாய்த்தமிழ் வாழி!''*

வாழ்க்கைப் பாதையில் குறுக்கிடும் பெருங் கடல் வாலி பம்; பசிமிக்க பாரதத்தில் வறுமை மிக்கோர் அதைக் கடப்பது கடினம் ஆயினும், வயலில் *சிறுவாய்க்காலைத் தாண்டுவதுபோல* வாழ்க்கையில் சிலர் வாலிபக் கடலைத் தாண்டிவிடுகின்றனர். அதற்கேற்ற வசதியும் அவர்களுக்குப் பரம்பரை பரம்பரையாகவே இருந்து வருகிறது சுயாதீனத்தால் சோம்பேறித்தனத்தையும், சுகா னுபவத்தால் சொர்க்கலோக இச்சையையும் வளர்த்து வரும் அவர்க ளுடைய பரம்பரைச் சொத்துக்களைப் பராதீனப்படுத்தி, பசிக்குப் பலியாகும் கோடானு கோடி மக்களைப் பாதுகாக்க ஏதாவது செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் எழுந்ததே இந்தப் 'பசி கோவிந்தம்' பாட்டு

பசி வேறு பக்தி வேறு என்று பக்குவமடையாத சிலர் பேசுவதுண்டு. எடுத்த விஷயத்தைக் குழப்பி, ஏமாந்தவரை லாபம் என்று கருதுவோர் அப்படிப்பட்ட சொற்றொடர்களை ஆங்காங்கே பிரயோகப் படுத்துகிறார்கள், அவற்றைப் பார்த்து நீங்கள் மயங்கி விடக் கூடாது. எதையும் ஊன்றிப் படிக்க வேண்டும், தவறான பொருளை எடுத்துக்கொண்டு 'ததிங்கிணத்தோம்' போடக் கூடாது. **பசியும் பக்தியும் ஒன்றே; இரண்டல்ல.** பசி முத்தினால் பக்திக்கு

அவசியமில்லை, புலன்கள் அனைத்தும்— ஏன், கடைசி மூச்சு உள்பட —தாமாகவே அடங்கிவிடும். 'தத்துவம்' இதுவே!

'உண்மை' என்னவென்றால் மண், விண், நீர், நெருப்பு, காற்று ஆகிய பஞ்ச பூதங்களின் சேர்க்கையே இவ்வுலகம். இதனுள் வாழும் உயிர்களும் அப்படியே. பிறப்பினால் பஞ்ச பூதங்கள் சேருகின்றன; இறப்பினால் பஞ்சபூதங்கள் பிரிகின்றன. அவ்வாறு பிரியும் மண் மண்ணோடும், விண் விண்ணோடும், நீர் நீரோடும், நெருப்பு நெருப்போடும், காற்று காற்றோடும் கலந்து எந்தச் சூன்யத்திலிருந்து மனிதன் வந்தானோ,.அதே சூன்யத்தில் அவனைக் கொண்டு போய்ச் சேர்த்துவிடுகின்றன. இதற்குப் பின் இல்லாத ஒன்றைத்தான் மையமாக வைத்துப் பாவமென்றும் புண்ணியமென்றும், நரகமென்றும் மோட்சமென்றும் சொல்லி ஆசான்களும் அடியான்களும் கதைத்து வருகிறார்கள்.

இந்தக் கதையை நீங்கள் நம்பவில்லை யென்றால், அவர்களு டைய கதி அதோகதிதான்! —அதற்குப் பின் இங்கே சனாதனமும் இருக்காது, சாஸ்திரங்களும் இருக்காது. பாவமும் இருக்காது; புண்ணியமும் இருக்காது. நரகமும் இருக்காது, மோட்சமும் இருக்காது — இத்தகைய நிலைமைக்கு நீங்கள் இடங்கொடுத்தால் என்ன ஆகும்? — 'உழைப்பவன் வாயில் சோறு, உழைக்காதவன் வாயில் மண்ணு!' என்று மக்கள் அனைவரும் தங்களைத் தாங்களே நம்ப ஆரம்பித்துவிடுவார்கள். அப்படி நம்ப ஆரம்பித்துவிட்டால் இந்துமதமே ஆட்டங்காண ஆரம்பித்துவிடும். அதைக் காத்துத் தங்களையும் காத்துக்கொண்டு வரும் மடாதிபதிகளின் நெற்றியில் விபூதிக்குப் பதிலாக வியர்வையும், அவர்களுடைய கையில் ருத்திராக்ஷத்திற்குப் பதிலாக மண் வெட்டியும் இருக்க வேண்டிய அவசியம் நேர்ந்துவிடும் — இந்த 'அபாய'த்தைத் தவிர்ப்பதற்கா கத்தான் அடியான்களும் ஆசான்களும் நாம் விழித்துக் கொள்ளும் போதெல்லாம் நமக்குத் 'தத்துவ போதை' ஊட்டித்தூங்க வைக்கப் பார்க்கிறார்கள்.

'மதுவிலக்'கால் தீர்க்க முடியாத இந்தப் போதையைத் 'தத்துவ விலக்'காலாவது நீங்கள் தீர்க்கப் பார்க்க வேண்டும். அதற்கு முதற்படியாகவே இந்நூல் இயற்றப்பட்டிருக்கிறது.

தமிழில் புதிய துறைக்கு வழிகோலும் இதனைத் தமிழுலகம் துணிந்து வரவேற்குமென்று நம்புகிறேன்.

''பாமரர் வாழி, பாமரர் வாழி!
பஜகோவிந்தம் பாடாப் பாமரர் வழி!'''

—பசி கோவிந்தம்', 1-2-1956

❀ ❀ ❀

# சுழலும் உலகிலே!

உலகம் மட்டுமா சுழல்கிறது? மனிதனும் சுழல்கிறான்!—அவனுடைய வாழ்க்கை, நாகரிகம், அரசியல், இலக்கியம் எல்லாமே சுழல்கின்றன—அந்தச் சுழற்சியில்தான் எத்தனை மாறுதல்!

ஒரு காலத்தில் ஏழை எளியவர்களைப் பற்றி, இல்லாதவர்களா யிருந்தாலும் பொல்லாதவர்களாக வாழ விரும்பாமல் நல்லவர்க ளாக வாழ விரும்பும் நடுத்தர வர்க்கத்தைப் பற்றிச் சிந்திப்பதும், எழுதுவதும் இலக்கிய உலகில் அவ்வளவாக எடுபடவில்லை. எனவே, எழுத்தாளர்கள் பலர் அவர்களைப் பற்றிச் சிந்திக்கவும் அஞ்சினார்கள், எழுதவும் அஞ்சினார்கள். அப்படியே ஓரிருவர் துணிந்து எழுதினாலும் ''என்ன கஷ்டம் வேண்டியிருக்கிறது சார் வாழ்க்கையில் தான் கஷ்டம் என்றால் இலக்கியத்திலுமா கஷ்டம்?'' என்பார்கள் சிலர், ''இந்த ஏழை எளியவர்களின் பிரச்சினை இங்கு மட்டும் இல்லை, உலகம் பூராவிலுமே இருக்கிறது. அப்படி ஒரு பகுதி என்றும் எங்கும் எப்பொழுதும் இருக்கத்தான் இருக்கும்; யார் என்ன எழுதிக் கிழித்தாலும் அதை ஒன்றும் மாற்றிவிட முடியாது!'' என்பார்கள் இன்னும் சிலர், ''அவன் என்ன செய்வான், பாவம்! அவனே ஒரு தரித்திரம்; அந்தத் தரித்திரத்துக்குத் தரித்திரத் தைப் பற்றித்தானே எழுத வரும்?'' என்பார்கள் வேறு சிலர். இப்படியெல்லாம் சொல்லிக் கொண்டிருந்த 'கனவான்கள்' இப் போது எங்கே இருக்கிறார்கள் என்று பார்த்தால். காணோம்! அவர்களில் ஒருவரைக் கூட காணோம் ஆம், இலக்கிய உலகத்தி லும் அவர்கள் நிற்கவில்லை, இலக்கிய ரசிகர்களின் உள்ளங்களி லும் அவர்கள் நின்று நிலவவில்லை

காரணம், வாழ்க்கையில் மட்டுமல்ல இலக்கியத்திலும் அவர் கள் 'ஹை' சர்க்கிளிலேயே 'மூவ்' பண்ணிக் கொண்டிருப்பது தான்.

கல்யாணமாயிருந்தாலும் சரி, கருமாந்திரமாயிருந்தாலும் சரி — இந்த 'ஹை சர்க்கிள்' ஆசாமிகளை யாரும் அழைக்க வேண்டியதில்லை; இவர்களே வந்து விடுவார்கள். வந்ததோடாவது இவர்கள் நிற்பார்களா என்றால் அதுவும் கிடையாது; 'புஷ்ஷிங் நேட்சர்' என்று ஏதோ ஒன்றைச் சொல்லிக்கொண்டு, "என்னைத் தெரிகிறதோ, இல்லையோ?" என்று விசேஷத்துக்கு உரியவரைக் கேட்டுவிட்டுப் பல்லை இளிப்பார்கள் "தெரிகிறது, தெரிகிறது!" என்று போகிற போக்கிலாவது அவர் தலையை ஆட்டிவிட்டுப் போனால் போச்சு, "தெரியவில்லையே?" என்று கையை விரித்து விட்டாலோ, வந்தது ஆபத்து! — "என்ன அப்படி சொல்லி விட்டீர்கள்! டெல்லியில் நடந்த ஒரு வைபவத்தின்போது நாலுபேருக்கு நடுவிலே அமர்ந்துவிட்ட நீங்கள், வாயிலிருந்த வெற்றிலைப் பாக்குப் புகையிலையை எங்கே துப்புவது, எப்படித் துப்புவது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தபோது, நான் தானே 'இப்படித் துப்புங்கள்!" என்று இரு கைகளையும் உங்களுக்கு முன்னால் ஏந்தி நின்றேன், அதுவே எனது பெறற்கரிய பெரும் பாக்கியமெனக் கருதி, போன வாரம் கூட டெல்லியிலிருந்து திரும்பிய நீங்கள் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வந்து இறங்கியபோது, நான் தானே எல்லோரையும் முந்திக் கொண்டு முன்னால் வந்து நின்று உங்கள் காலில் விழுந்ததோடு, கன்னத்திலும் போட்டுக் கொண்டேன் — உங்களையும் 'பெரிய மனித'ராக்கி, என்னையும் 'பெரிய மனித'ராக்கிக் கொண்டுவிடலாம் என்ற எண்ணத்தில்!" என்று 'ரெபரென்'சுக்கு மேல் 'ரெபரென்'சாக எடுத்துக் காட்ட ஆரம்பித்து விடுவார்கள். "அப்படியா! உங்கள் நினைவே எனக்கு இல்லாமல் போய்விட்டது. அதனால்தான் அழைப்பும் அனுப்ப முடியாமற் போய்விட்டது!" என்பார் அவர் அப்போதும் தம்முடைய 'பெரிய மனிதத் தோரணை'யை அவரிடம் விட்டுக் கொடுக்க விரும்பாமல் இவர் அவருக்குச் சளைத்தவரா, என்ன? — "இது என்ன வேடிக்கையாயிருக்கிறதே! நீங்கள் அழைக்காவிட்டால் நான் வரக்கூடாதா, என்ன? நீங்கள் வேறு, நான் வேறா, என்ன? உங்களுடைய வீடு வேறு, என்னுடைய வீடு வேறா, என்ன? உங்கள் வீட்டு விசேஷம் வேறு, என் வீட்டு விசேஷம் வேறா, என்ன? நன்றாயிருக்கிறதே நீங்கள் சொல்வது?"

என்று அடுக்க ஆரம்பித்துவிடுவார், உங்களுடைய மனைவி வேறு, என்னுடைய மனைவி வேறா, என்ன? என்பதை மட்டும் போனாற் போகிறதென்று விட்டுவிட்டு!

இத்தகைய 'ஹை சர்க்கிள்'களுக்கு ஏழை எளியவர்களிடம் இரக்கமோ, இதயமோ, இதயம் ஒன்றிய ஈடுபாடோ இருக்க முடியுமா? — இருக்காது, இருக்க முடியாது. ஆயினும் எழுத வேண்டுமென்ற ஆசை, இவர்களுக்கு — ஏன்? — பெருமைக்காக தனக்குத் தெரிந்த நாலுபேராவது தன்னைப் புகழ வேண்டுமே என்பதற்காக.

இந்த ஆசையை நிறைவேற்றிக் கொள்ள இவர்களுக்குப் பெரும்பாலும் உதவியாயிருப்பது ஆங்கிலப் பத்திரிகைகள்; ஆங்கிலப் புத்தகங்கள் அவற்றை வாங்கி விழுந்து விழுந்து படிப்பார்கள்; படிக்கும்போதே தங்களுக்குப் பிடித்த கதையம்சத்தைக் குறிப்பெடுத்து வைத்துக்கொள்வார்கள் — அதற்குப் பிறகு கேட்க வேண்டுமா? அந்தக் குறிப்புகளை வைத்துக்கொண்டே கதை எழுத ஆரம்பித்து விடுவார்கள்.

இந்த நிலை இருபது, முப்பது வருடங்களுக்கு முன்னால்தான் இருந்தது என்றால், இப்போதுமா இருக்க வேண்டும்? தமிழில் சுயமாகச் சிந்திக்கவும், சுயமாக எழுதவும் ஒரு சிலராவது தோன்றி விட்ட இந்தக் காலத்திலுமா இருக்க வேண்டும்? — வெட்கக்கேடு, தமிழ் இலக்கியத்தைப் பிடித்துவிட்ட சாபக்கேடு! இல்லாவிட்டால் தமிழ்ப் பத்திரிகை உலகில் இந்த 'இலக்கிய விவகாரம்' தொடர்ந்து இடம் பெற்று வருமா?

ஆம், சமீபத்தில் கூட எதோ ஒரு பிரபல வாரப் பத்திரிகையில் வெளியான தொடர் கதையில் நான் இந்த அக்கிரமத்தைக் கண்டேன் — என்னத்தைச் சொல்வது போங்கள், ஜமீன்தார்கள் நம் நாட்டை விட்டு ஒழிந்தாலும் இலக்கியத்தை விட்டு ஒழியமாட்டார்கள் போலிருக்கிறது! — சந்தேகமென்ன, அது ஒரு ஜமீன்தார் கதை; ஆங்கில நாவல் ஒன்றில் வந்த 'பிரபு' அதில் 'ஜமீன்தார'ராக்கப் பட்டு இருந்தார்!

இது போன்ற 'களவாணி இலக்கியங்க'ளின் கர்த்தாக்கள் இருக்கிறார்களே, இவர்கள் பெரிய பேர்வழிகள்! — இவர்களுடைய நடை, உடை, பாவனை, பேச்சு, சிரிப்பு எதுவுமே

இயற்கையாயிருக்காது, எல்லாமே செயற்கையாயிருக்கும் — அப்படிப்பட்ட பேர்வழிகளிடம் இயற்கையான இலக்கியத்தை எதிர்பார்க்க முடியுமா? — முடியாதுதான்; ஆனால் அவர்கள் தலையிலும் நாலு அட்சதையை அள்ளிப்போட 'ஹை சர்க்கிள்' இருக்கும்போது, அதைப்பற்றி என்ன கவலை அவர்களுக்கு?

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம் — அப்படிப்பட்ட இலக்கியக் கர்த்தாக்களுக்கு 'ஹை சர்க்கி'ளில் 'மூவ்' பண்ணுவது காரணமாக அரசியலில் பரிசு கிடைக்கலாம், பட்டம் கிடைக்கலாம், பணம் கிடைக்கலாம், பதவியும் கிடைக்கலாம் — மக்கள் உள்ளத்தில் இடம் மட்டும் கிடைக்காது — ஆம் அவர்கள் மண்ணாய்ப் போனாலும் கிடைக்காது!

இதை உணர்ந்துதானோ என்னமோ, இப்போதெல்லாம் எழுத்தாளர்களில் பலர் ஏழை, எளியவர்களைப் பற்றிச் சிந்திக்கிறார்கள், எழுதுகிறார்கள், 'ஹை சர்க்கி'ளுக்கு அப்பாற்பட்டு நிற்கும் இலக்கிய உலகத்தில் ஓரளவு மதிப்பும் மரியாதையும் கூடப் பெறுகிறார்கள்.

அவர்களுக்கெல்லாம் வழி காட்டியாகயிருந்தவர்களில் அடியேனும் ஒருவன் என்ற முறையில் இப்போது நான் பெருமைப் படுகிறேன்; அந்தப் பெருமையில் ஏற்பட்ட மன நிறைவுடன் நான் அவர்களை வரவேற்கிறேன், அவர்கள் வாழ, வளர, வாழ்த்தும் கூறுகிறேன்.

இதைத்தவிர இந்தப் புத்தகத்தில் வெளியாகியுள்ள கதைகளைப் பற்றியோ, கருத்துக்களைப் பற்றியோ நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை சொன்னால் அது என்னையும் 'ஹை சர்க்கி'ளில் சேர்த்தாலும் சேர்த்துவிடலாம்!

வேண்டாம், ஐயா' பொய்யும் புரட்டும் இல்லாத 'சர்க்கி'ளே எனக்குப் போதும் — அவர்கள் வாழ்ந்தால் நானும் வாழ்கிறேன், அவர்கள் செத்தால் நானும் சாகிறேன்!

'ஏமாந்துதான் கொடுப்பீர்களா?', 15-3-1963

# 'சுயம்வர'த்துக்கு முன்னால் கொஞ்சம் 'சுய விளம்பரம்'

இந்த விளம்பரம் எனக்குப் பிடிக்காத ஒன்றுதான் ஆயினும் என்ன செய்வது? நீங்கள் தான் இப்போதெல்லாம் விஷயத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதைவிட விளம்பரத்துக்கு முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்துவிட்டீர்களே!

'எழுத்தாளர்' என்றால் முன்னெல்லாம் எழுதாவிட்டால் கூட ஒரு கதர் ஜிப்பாவைத் தைத்துப் போட்டுக் கொண்டுவிட்டால் போதும், உடனே நீங்கள் அவரை எழுத்தாளர் என்று ஒப்புக் கொண்டு விடுவீர்கள். இப்போது அப்படியில்லை; நீங்கள் ஒருவரை எழுத்தாளர் என்று ஒப்புக்கொள்ள வேண்டுமானால் அந்த எழுத்தாளர் என்னவெல்லாம் செய்ய வேண்டியிருக்கிறது!

முதலில் அவர் 'ஹிப்பி'களைப் பின்பற்றி முடி வளர்க்க வேண்டியிருக்கிறது, அப்படி வளர்த்த முடியை அவர் விதம்வித மாக அலங்கரித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதற்குப் பின் அவர் விதம் விதமாகச் சட்டை தைத்துப் போட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறது; அந்த விதம் விதமான சட்டைகளுடன் விதம் விதமான 'போஸ்'களில் படம் எடுத்து, விதம் விதமான பத்திரிகை களில் அவற்றை வெளியிடுவதற்கு வேண்டிய ஏற்பாடும் செய்ய வேண்டியிருக்கிறது!

இவை மட்டுமா? விதம் விதமான பெண்களுடன் வேறு அவர் 'உலா' வரவேண்டியிருக்கிறது, தன்னால் முடியாவிட்டாலும் வேறு யாருடைய செலவிலாவது வீட்டுக்கு ஒரு 'டெலிபோ'னும், போக்குவரத்துக்கு ஒரு காரும் அவசியம் வைத்துக்கொள்ள வேண் டியிருக்கிறது!

இத்தனையும் இல்லாத ஒருவன் என்னதான் எழுதிக் கிழித்தாலும் நீங்கள் எங்கே அவனை 'எழுத்தாளன்' என்று மதிக்கிறீர்கள்? நீங்கள் எங்கே 'எழுத்தாளன்' என்று ஒப்புக்கொள்கிறீர்கள்?

இந்த லட்சணத்தில் இது 'விளம்பர யுக'மாக மட்டுமல்ல, 'கவர்ச்சி யுக'மாகவும் இருந்து தொலைகிறது

இந்த யுகத்தில் 'எழுத்துக் கவர்ச்சி'யைத் தவிர வேறு எந்தக் கவர்ச்சியும் இல்லாத நான், இருந்தாலும் அவற்றையெல்லாம் அன்றிலிருந்து இன்றுவரை அடியோடு வெறுத்து வந்திருக்கும் நான், இப்போதுதான் 'எவ்வளவு பெரிய தவறு செய்துவிட்டோம்?' என்பதை உணர்கிறேன் உணர்ந்து, எனக்காக மட்டுமல்ல, உங்களுக்காகவும் வருந்துகிறேன்.

போகட்டும்; நடந்ததை மறந்து நிகழ்ந்ததைக் கொஞ்சம் கவனிப்போமா?...

என் வாழ்க்கையில் 1946-ம் ஆண்டை நான் சிறப்பான ஆண்டு என்று சொல்லவேண்டும். அந்த ஆண்டில்தான் தமிழ்நாடு அரசின் முதன்முதலாக அளிக்க முன்வந்த சிறுகதைகளுக்கான பரிசை நான் முதன்முதலாகப் பெற்றேன். அதைத் தொடர்ந்து வெளியான 'பாலும் பாவையும்' என்ற நாவல் மக்களின் பேராதரவைப் பெற்று, அந்த ஆதரவு வேறு எந்த நாவலுக்கும் இல்லாத அளவுக்கு இன்றுவரை நீடித்து நின்று வருகிறது.

அந்த நாவல் வெளியான காலம் 'சாகத்திய அகாடமி' என்ற ஓர் அமைப்பு தோன்றாத காலம். தோன்றியிருந்தால், 'பாலும் பாவையும்' கூட அந்த நாளிலேயே அது அளிக்கும் பரிசைப் பெறும் தகுதியை முதன்முதலாகப் பெற்றிருக்கலாம்.

'மக்களின் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு' என்று சொல்லப்படுவது உண்மையானால், அதன் தீர்ப்பு மட்டும் வேறு விதமாகவா இருந்திருக்கப் போகிறது?

அது மட்டுமல்ல, 'திறமான புலமையெனில் வெளி நாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்' என்று சொல்லிவிட்டுப் போனான் பாரதி அந்தப் புலமையை என் கதைகளிலும் கண்டதால்தானோ என்னவோ, அவற்றில் பல இந்திய, திராவிட மொழிகளில் மட்டுமல்ல, உலகமெங்கும் உள்ள பல முற்போக்கு நாடுகளில் பல அயல்நாட்டு மொழிகளிலும் பெயர்க்கப் பட்டுள்ளன.

இந்த நிலையில் 'பாலும் பாவையும்' என்ற நாவலைத் தொடர்ந்து பல நாவல்கள், பல சிறுகதைத் தொகுப்புகள், பல கட்டுரைத் திரட்டுகள் எல்லாம் வெளிவந்திருக்க வேண்டும்.

வரவில்லை — ஏன்?

காரணம் வேறு யாருமல்ல; நானே!

'ஏதோ ஏதோ ஒரு மயக்கம்' என்கிறார்களே, சினிமாவில் வரும் காதலர்கள் — அப்படி ஒரு மயக்கம் அடியேனையும் அந்நாளில் ஆட்கொண்டது. அதன் காரணமாகப் பல வகைகளில் எனக்குக் 'கற்பகத் தரு'வாக இருந்து வந்த 'கல்கி அலுவலக'த்தை விட்டு, கல்கி அவர்கள் எச்சரித்தும் கேளாமல் விலகினேன்.

நடக்கக்கூடாத இது நடந்தது 1951-ம் ஆண்டில்.

அப்போது 'சுத்த சுயமரியாதை வீர'னாக இருந்துவந்த நான், இப்போது சில இடங்களில், சில விஷயங்களில் 'அட்ஜஸ்ட்' செய்துகொண்டு போவதுபோலப் போயிருந்தால் நானும் மற்றவர்களைப்போல சினிமா உலகிலும் பிரகாசித்திருக்கலாம். அந்த 'புத்தி' அப்போது இல்லாததால் அதிலிருந்தும் விலகி, 'சுதந்திர எழுத்தாள'னாக இருந்து 'சுடர்' விடப் பார்த்தேன். நான் விட முயன்றாலும் என்னை விட விரும்பாத சுயமரியாதையோ அதற்கும் குறுக்கே நின்று தொலைந்தது.

'இதெல்லாம் எதற்கு, சொந்தமாக ஒரு பத்திரிகையே நடத்திப் பார்த்துவிடுவோமே?' என்று 1954-ம் ஆண்டில் 'மனித'னை ஆரம்பித்தேன். மக்கள் ஆதரவு அதற்கு அமோகமாக இருந்தும், விற்பனையாளர்கள் செய்த 'சத்திய சோதனை'யாலும், அந்தச் சத்திய சோதனையிலிருந்து அவ்வப்போது மீள்வதற்கு வேண்டிய பொருளாதார வசதியோ மீட்பதற்கு வேண்டிய நண்பர்களோ இல்லாததாலும் அதுவும் பிறந்த ஓராண்டு காலத்துக்குள்ளேயே பிராணனை விட்டுவிட்டது

இதனால் எனக்கு நேர்ந்த இழப்புகளிளெல்லாம் மிகப் பெரிய இழப்பு, என்னுடைய நீண்ட நாள் நண்பரும், ஸ்டார் பிரசுரத்தின் உரிமையாளருமான திரு. ராமநாதனின் நட்பை நான் இழந்ததாகும்.

அதற்குப் பின் எத்தனையோ பிரசுரகர்த்தாக்கள், எத்தனையோ பிரசுரங்கள் — ஒன்றும் உருப்படியாக வரவில்லை. வந்தாலும் அவை புத்தக உலகில் நீடித்து நிற்க அந்தப் புண்ணியவான்கள் விடவில்லை.

இந்தக் 'கசப்பான அனுபவங்க'ளுக்குப் பிறகு, நான் இப் போது மீண்டும் நண்பர் ராமநாதன் அவர்களுடனும், ஸ்டார் பிரசுரத்துடனும் தொடர்பு கொண்டுள்ளேன். அந்தத் தொடர்பின் முதல் நூலாக இந்த 'சுயம்வரம்' என்ற நாவல் வெளியாகியிருக்கிறது இது 'டீன் ஏஜர்'ஸுக்காக எழுதப்பட்ட நாவல்தான் என்றாலும், இதில் வரும் 'ஆனந்த'னைப் போலவோ, 'அருணா'வைப் போலவோ வேறு யாரும் ஆகிவிடக் கூடாது என்பதே என் விருப்பம். உங்கள் விருப்பமும் அதுவாகத்தான் இப்போதும் இருக்கும் என்பது என் நம்பிக்கை.

பெண்களைப் பல வகைகளிலும் 'தெய்வ'மாகப் போற்றி வந்தது இந்த நாடு; 'மாதர் தம்மை இழிவு படுத்தும் மடமையைக் கொளுத்துவோம்' என்று பாரதியைப் பொங்கியெழுந்து பாடச்

செய்தது இந்த நாடு. அப்படிப்பட்ட நாட்டில் பெண்களை வெறும் 'போகப் பொருள்'களாகக் கருதி, அவர்களுடைய பெயர்களுக்குப் பின்னால் ஒளிந்துகொண்டும், ஒளிந்து கொள்ளாமலும் சில ஆண்கள் கவர்ச்சிக்காக, வயிற்றுப் பிழைப்புக்காக எழுதும் கதைகள், அவற்றைக் கூசாமல் வெளியிடும் ஏடுகள்

*கண்ணராவி, கண்ணராவி!*

அதைவிடக் கொடுமை அம்மாதிரி கதைகளைத்தான் நீங்கள் விரும்பிப் படிக்கிறீர்கள் என்று அவர்கள் சொல்வது!

அந்த ரகத்தில் சேராத இந்த நாவலை அவர்கள் சொல்லும் 'டீன் ஏஜர்'ஸாரும் படிக்கலாம், 'டீன் ஏஜர்ஸ்' அல்லாதவர்களும் படிக்கலாம். படித்துவிட்டுத் தங்கள் கருத்தை எனக்கு எழுதவும் எழுதலாம்.

இந்த நூலைத் தொடர்ந்து என்னால் எழுதப்பட்டுள்ள மற்ற நூல்களும் வெளியாவது நண்பர் ராமநாதனின் கையில் மட்டும் இல்லை; அது உங்கள் கையிலும் இருக்கிறது.

இப்போதைக்கு 'இது போதும்' என்று நினைக்கிறேன்; மற்றவை பின்னர்.

**'சுயம்வரம்', 2-10-1973**

❖ ❖ ❖ ❖ ❖

# முன்னுரை

தோழர் இளமைப்பித்தன் தம்முடைய புத்தகத்துக்கு முன்னுரை எழுத என்னைத் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம் என்னவோ, நான் அறியேன். எனக்குத் தோன்றும் காரணம் இதுதான்:

என்னை அவருக்குத் தெரியாது, அவரை எனக்குத் தெரியாது!

இதிலிருந்தே இந்நூலாசிரியர் மிகமிகப் பொல்லாதவராயிருக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன் ஏன் தெரியுமா?—தெரிந்தவர்களுடைய புத்தகத்துக்கு முன்னுரை எழுதுவதைவிட, தெரியாதவர்களுடைய புத்தகத்துக்கு முன்னுரை எழுதுவது கடினம். கடினம் மட்டுமல்ல, கடுமையான சோதனையும் கூட!

ஆசிரியர் நமக்குத் தெரிந்தவராயிருந்துவிட்டால் விட்டது தொல்லை—அவருடைய புத்தகத்துக்கு முன்னுரை எழுதுவதற்குப் பதிலாக அவருக்கே முன்னுரை எழுதிவிடலாம். ''நிமிர்ந்த நன்னடை; நேர்கொண்ட பார்வை; 'வெடுக், வெடுக்' என்ற பேச்சு; 'களுக், களுக்' என்ற சிரிப்பு!'' என்றெல்லாம் அளந்துகொண்டே சென்று, ''புத்தகம் உங்கள் கையில் இருக்கிறது; இனிமேல் நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது?'' என்று கடைசியில் ஒரு முத்தாய்ப்புடன் முன்னுரையை முடித்துவிடலாம். ஆசிரியர் நமக்குத் தெரியாதவராயிருந்துவிட்டாலோ வந்தது தொல்லை—நாம் அவருக்கு முன்னுரை எழுத முடியாது; அவருடைய கதைகளுக்குத் தான் முன்னுரை எழுதித் தீரவேண்டும். இந்த விஷயத்தை எப்படியோ தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார் எமகாதகர் இளமைப் பித்தன். இல்லையென்றால் தமக்குத் தெரிந்தவர்கள் யாரையாவது அவர் முன்னுரை எழுதச் சொல்லியிருக்கமாட்டாரா?

இப்பொழுதெல்லாம் சென்னை 'மூர் மார்க்கெட்'டில் பழைய ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு இருக்கும் கிராக்கியைப் பார்த்துவிட்டுச் சிலர் தமிழ்நாட்டில் சிறுகதை இலக்கியம் ஏகத்தாறாக வளர்ந்துவிட்டதென்று சொல்லிக்கொண்டிருக் கிறார்கள். அத்தகைய வளர்ச்சியை நான் இளமைப்பித்தனின் கதைகளில் காணவில்லை. அதாவது, அமெரிக்க ஆப்பிள் பழம் இந்திய

மாம்பழமாக மாறியிருக்கும் விந்தையையோ, 'பாப்' வெட்டிக் கொண்டிருக்கும் இங்கிலீஷ்காரி, பின்னல் போட்ட தமிழச்சியாக மாறியிருக்கும் அற்புதத்தையோ அவருடைய கதைகளில் காணோம். ஆசிரியரின் வெற்றிக்கு இது ஒன்றே போதுமானது; வேறொன்றும் தேவையில்லை

இந்தத் தொகுதியில் வெளியாகியிருக்கும் முதற் கதையான ''அவதாரம்'' அறியாமையைப் போக்கி அறிவுக்கு வேலை தருவ தாயிருக்கிறது போக வாழ்வை வெறுத்துப் போதி மரத்தின் நிழலைத் தஞ்சமடைந்த புத்தரின் வாழ்க்கையை அது திறம்படச் சித்திரிக்கிறது கதை பழைய கதையேயாயினும் ஆசிரியர் கையாண்டிருக்கும் வழி புதிய வழி. இதற்கு முன்னால் புத்தரைப் பற்றி எழுதியவர்கள் அவருடைய மனிதத் தன்மையைக் களைந்து அவர்மீது தெய்வத்தன்மையை ஏற்றினார்கள். இவரோ அவருடைய தெய்வத் தன்மையைக் களைந்து மனிதத் தன்மையை ஏற்ற முயன்றிருக்கிறார், அம் முயற்சியில் ஓரளவு வெற்றியும் பெற்றி ருக்கிறார். இருந்தாலும், ''இந்தக் கதையில் கலையம்சம் இல்லை, வெறும் பிரச்சார நோக்கந்தான் இருக்கிறது!'' என்று ஊர் பேர் தெரியாத சில பிரகஸ்பதிகள் சொல்லக்கூடும். அவர்களைப்பற்றி மக்கள் கவலைப்படாமல் இருக்கும்போது நாம் ஏன் கவலைப்பட வேண்டும்?

''அவள் குழந்தை'' ஆசிரியரின் எழுத்து வன்மைக்கு ஓர் எடுத்துக்காட்டு. உயிர்ச் சித்திரமாகவும், உணர்ச்சிச் சித்திரமாக வும் விளங்கும் அந்தக் கதை மடமையைச் சுட்டெரிப்பதோடு, இதயத்தில் என்றும் நீங்காத இடத்தையும் பெறுகிறது. அதற்கு அடுத்தபடியாக விளங்கும் ''வெய்யிலும் நிழலும்'' ஓர் ஒப்பற்ற குணச்சித்திரம் கதையின் முடிவு சிறிது கசந்தாலும் அதிலுள்ள கருத்து இனிக்கத்தான் செய்கிறது. கடைசிக் கதையான ''நினைவுச் சின்னம்'' காதலையும் கடமையையும் மறந்து கயவர்களாகத் திரியும் கலைஞர்களுக்கு ஓர் அவமானச் சின்னம். ''மலரை யொத்தவர் மாதர்'' என்னும் கவிஞர் கூற்றுக்கு ஆசிரியர் மேற்படி கதையில் செய்திருக்கும் வியாக்கியானம் நம்மைத் திகைக்க வைக்கிறது!

இவை தவிர, மற்ற கதைகளனைத்தும் வாழ்க்கையின் விசித்தி ரங்களைப் பல கோணங்களிலிருந்து நமக்கு எடுத்துக்காட்டுவன வாயிருக்கின்றன அவற்றில் பகல் வேடதாரிகள் வருகிறார்கள், பத்திரகாளியின் சந்நிதியைப் படுக்கையறையாகக் கொள்ளும் பாதகர்கள் வருகிறார்கள் பைத்தியக்காரர்களும் நம் பரிதாபத்துக் குரியவர்களும்கூட வருகிறார்கள் ஆனால் அவர்கள் அனைவரும் நம்மைச் சிரிக்க வைப்பதோடு நின்றுவிடவில்லை சிந்திக்கவும் வைக்கிறார்கள்.

ஆசிரியரின் சொந்த நடை எப்படியோ, எனக்குத் தெரி யாது. அவருடைய தமிழ்நடை அழகான நடை, மிடுக்கு, லாவகம், மின்வெட்டு எல்லாம் பொருந்தியிருக்கும் நடை, மொத்தத்தில் எதை எழுதினாலும், எப்படி எழுதினாலும் சோபிக்கக்கூடிய நடை, அடிக்கடி சிரிக்க வைத்துக் கொண்டு செல்லும் சிறப்பு மிக்க நடை, அலுப்பில்லாமல் படித்து அனுபவிக்கக் கூடிய நடை. இது இயற்கை அவருக்கு அளித்திருக்கும் செல்வம் இந்தச் செல்வத்தின் துணைகொண்டு அவர் வெற்றியின் சிகரத்தை எட்டிப் பிடிப்பா ரென்று நான் நம்புகிறேன்

மற்றபடி, தோழர் இளமைப்பித்தன் அவரைப்போல் எழுது கிறார் என்றோ, இவரைப்போல் எழுதுகிறார் என்றோ நான் சொல்லத் தயாராயில்லை, ஏனெனில், இளமைப்பித்தன் இளமைப் பித்தனைப்போல் எழுதுவதாகத்தான் எனக்குத் தோன்றுகிறது!

— நினைவுச் சின்னம் , 25-5-1951

❀ ❀ ❀

# சுடச் சுட குளு குளு

'கல்கி' காரியாலயத்தில் நான் துணையாசிரியனாக இருந்த காலம், லட்சோப லட்சம் மக்கள் கூடியிருந்த கும்பகோணம் மகாமகக் காட்சியொன்றை அட்டைப் படத்தில் பிரசுரித்து, "திரு. ஈ.வெ.ரா பெரியார் அவர்கள் என்ன பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்து என்ன பயன்? மகாமகக் கூட்டத்தைப் பார்த்தீர்களா? என்ன கூட்டம், என்ன கூட்டம்!' என்ற ரீதியில் ஓர் அரைப்பக்கம் விளக்கமும் எழுதியிருந்தோம்.

அதைப் பார்த்த திருச்சி கல்லூரி மாணவர் ஒருவர், பெரியார் அவர்களுக்காக வரிந்து கட்டிக்கொண்டு, ஆசிரியர் கல்கி அவர்களைத் 'தாக்கு தாக்கு' என்று தாக்கி ஒரு நீண்ட கடிதம் எழுதியிருந்தார். அந்தக் கடிதத்தைப் படித்ததும் எங்களுக்கே என்னவோ போலிருக்கவே, ஆசிரியர் அவர்களிடம் அதைக் காட்ட வேண்டாம் என்று எண்ணிக் குப்பைக் கூடையில் போடப் போனோம். அப்போது எதிர்பாராத விதமாக எங்கள் அறைக்குள் நுழைந்த கல்கி அவர்கள், எங்களுடைய முகக் குறியிலிருந்தே விஷயத்தை ஒருவாறு புரிந்துகொண்டு, "என்ன, என்ன விஷயம்?" என்று கேட்டார்கள் நாங்கள் தயக்கத்துடன் விஷயத்தைச் சொல்லி, கடிதத்தையும் வேறு வழியின்றி எடுத்து அவரிடம் கொடுத்து விட்டோம்

அதை வாங்கிப் படித்ததுதான் தாமதம்—நாங்கள் எதிர்பார்த்த படி ஆசிரியர் அவர்களுடைய முகத்தில் எள்ளும் வெடிக்கவில்லை, கொள்ளும் வெடிக்கவில்லை. அதற்குப் பதிலாக, "ஆஹா! என்னமா எழுதியிருக்கிறான், என்னமா எழுதியிருக்கிறான்!" என்று ஒரே 'ஆஹாகாரத்'துடன், தமக்கு வழக்கமான 'என்னமா'வையும் போட்டுப் பாராட்டிவிட்டு, அந்த மாணவருக்கு உடனே தமது கைப்பட ஒரு கடிதமும் எழுதினார்கள் என்னவென்று நினைக்கிறீர்கள்? "இவ்வளவு சக்தி வாய்ந்த தமிழில் எழுதக்கூடிய நீங்கள் ஏன் 'கல்கி' காரியாலயத்தில் துணையாசிரியராகச் சேர்ந்து பணியாற்றக்கூடாது?" என்று கேட்டுத்தான்!

— குமுதம் , 10-12-1964

# படித்தேன், சொல்கிறேன்

'திருமணம் ஒரு கோட்டையைப் போன்றது அந்தக் கோட்டைக்கு வெளியே இருப்பவர்கள் உள்ளே போக நினைக்கிறார்கள், உள்ளே இருப்பவர்கள் வெளியே வர நினைக்கிறார்கள்' என்று ஏதோ ஒரு பத்திரிகையில் எப்பொழுதோ படித்ததாக ஞாபகம் இது எழுத்துலகத்திற்கும் ஒரு வகையில் பொருந்தும் அந்த உலகத்துக்கு வெளியே இருப்பவர்கள் உள்ளே போக நினைக்கிறார்கள்; உள்ளே இருப்பவர்கள் வெளியே வர நினைக்கிறார்கள்

ஆம், அன்று மாரீசன் மாயமானாகத் தோன்றிச் சீதாப்பிராட்டியை ஏமாற்றியதுபோல இன்று எழுத்தும் மாயமானாகத் தோன்றி எத்தனையோ இளைஞர்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறது. அத்தகைய இளைஞர்களில் பதின்மர் சேர்ந்து உருவாக்கியுள்ளதே இச் 'சரவிளக்கு'

நல்லவேளையாக இவர்களில் யாரும் எழுத்தையே தொழிலாகக் கொண்டிருக்கவில்லை என்று நான் கேள்ளவிப்படுகிறேன் இது உண்மையானால் இவர்களுடைய முயற்சியை மற்றவர்களைப்போல நானும் வரவேற்கவும், வாழ்த்தவும் தயாராயிருக்கிறேன். இல்லையென்றால் அது என்னைப் பொறுத்தவரை கொஞ்சம் 'யோசிக்க வேண்டிய விஷய'மாய்த் தான் இருக்கும் ஏனெனில் எழுத்தையே முழுக்க முழுக்க நம்பி இந்த இளைஞர்களில் யாரும் தங்கள் எதிர்கால வாழ்வைப் பாழாக்கிக் கொள்வதை நான் விரும்பவில்லை.

அந்த எழுத்தாளருக்கு மாதம் பிறந்தால் அத்தனை ரூபாய் சம்பளம் கிடைக்கிறதாமே? இந்த எழுத்தாளருக்கு மாதந்தோறும் இத்தனை ரூபாய் வருமானம் வருகிறதாமே? என்றெல்லாம் பரவலாகப் பேசுவார்கள். கேட்க மலைப்பாயிருக்கும். ஆனால், உண்மை

அதற்கு நேர் விரோதமானது. அது மட்டுமல்ல; எந்த எழுத்தாளரின் வேலையும் எந்தப் பத்திரிகாலயத்திலும் 'நித்திய கண்டம், பூரண ஆயுசு' என்பது போலத்தான் இருக்கும். இது அந்தத் தொழிலின் சாபக்கேடு.

இதுதவிர, ஆனந்தவிகடனில் முத்திரைக் கதைக்கு ரூபாய் ஐந்நூறு தருகிறார்களாமே, சாதாரணமாகப் பிரசுரமாகும் கதைக்குக் கூட ரூபாய் நூற்றைம்பது கொடுக்கிறார்களாமே? என்றெல்லாம் சொல்வார்கள். எழுதுவார்கள். இதுவும் மாயமான் கதைதான். எந்த எழுத்தாளர் எத்தனை முத்திரைக் கதைகள் எழுதியிருக்கிறார்? அவற்றில் எத்தனை பிரசுரமாகியிருக்கின்றன? எத்தனை ஐந்நூறு ரூபாய்கள் அவருக்குக் கிடைத்திருக்கின்றன? என்று கணக்குப் போட்டுப் பார்த்தால் அவற்றுக்குக் கிடைக்கும் விடை அநேகமாகப் பூஜ்யமாகத்தான் இருக்கும் நூற்றைம்பது ரூபாய் பெறக்கூடிய சாதாரண கதைகளின் கணக்கும் அப்படித்தான்

இதற்குக் காரணம் அரசியல் உலகில் மட்டுமல்ல, கலை, இலக்கிய உலகிலும் 'சிண்டிகேட்' என்று ஒன்று இருப்பதுதான். அந்த 'சிண்டிகேட்'டின் விருப்பப்படியே எல்லாம் நடக்கும். அதை அரசியல் உலகில் எதிர்த்து நின்று ஆணானப்பட்ட இந்திரா காந்தி அடைந்த வெற்றியே இந்த உலகத்தில் ஒன்பதாவது அதிசயம் என்று சொல்ல வேண்டும் அந்த அதிசய வெற்றியைக் கலை உலகிலும் சரி, இலக்கிய உலகிலும் சரி, இந்த எழுத்தாளர்கள் அடைவதென்பது அவ்வளவு சுலபமல்ல

'அதெல்லாம் உங்களுக்கு ஏன்? எங்களுடைய சொந்த பலத்தைக் கொண்டே நாங்கள் நிற்போம்' என்று சிலர் சொல்லலாம் அப்படிச் சிலர் நிற்கவும் நிற்கிறார்கள். ஆனால் அவர்களில் பலர் வெவ்வேறு தொழில்களில் இருந்துகொண்டு, எழுத்துத் தொழிலைத் துணைத் தொழிலாக மேற்கொண்டிருப்பவர்கள் என்பதை இந் நூலாசிரியர்கள் மறந்து விடக்கூடாது.

அவர்களைப் போலவே இவர்களும் வெவ்வேறு தொழில் களில் இருந்துகொண்டு எழுத்துத் தொழிலைத் துணைத் தொழிலாக மேற்கொள்ள வேண்டுமென்றும், அதன் பயனாக இவர்களும் அவர்களைப் போலவே வாழ்க்கையில் எல்லாவிதமான வெற்றி களையும் அடைய வேண்டுமென்றும் நான் பிரார்த்திக்கிறேன்.

அதற்கு வேண்டிய தகுதியும், திறமையும் இவர்களுடைய எழுத்தில் இருக்கத்தான் இருக்கிறது இவை தவிர இன்னொரு சிறப்பு இவர்களுக்கு வேண்டும் அதுதான் பொறுமையில் எருமை யைக்கூடத் தூக்கியடிக்கும் சிறப்பு. அந்தச் சிறப்பு கைவரப் பெற்றால் எழுத்துலகில் இவர்களுக்கு வெற்றி நிச்சயம் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை

'சரவிளக்கு', 1-9-1969

# இந்நாட்டு மன்னர்கள்

## 1

இந்திய மக்கள் எல்லோருமே இந்திய மன்னர்களாக இருந்த காலம் என்றாவது நம் நாட்டில் இருந்ததா?

இல்லை—சரித்திரத்தில் அப்படிப்பட்ட காட்சியே தென்படவில்லை, இலக்கியத்தில் அத்தகைய குரலே எழுப்பப்படவில்லை.

மக்கள் அடிமைகளாய்க் கோழைகளாய்க் கிடந்தபோது, சமூகத்தில் திடீரென்று தோன்றிய சில சமர்த்தர்கள் மட்டுமே மன்னர்களாக மாறினர்.

''மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்'' என்ற நீதி, அரசமாளிகையில் கட்டியங்கூறிக் கொண்டிருந்தது, மன்னனுக்கும் மக்களுக்கும் இடையே மேற்படி மாளிகை 'மகாமேரு'வாகக் காட்சி தந்துகொண்டிருந்தது, அதற்குள் கொலு வீற்றிருந்த மணிமகுடமோ மக்கள் தொடமுடியாத, தொட்டுப் பார்க்க முடியாத, எட்ட முடியாத, எட்டிப்பிடிக்க முடியாத, 'ஏன்?' என்ற கேள்விக்கே செவி மடுக்காத செங்கோலாக இருந்தது

மன்னன் வேறு, மக்கள் வேறு — ஆள்வதற்கென்றே ஆண்டவனால் படைக்கப்பட்டவன் அவன், அவனுடைய ஆட்சிக்கும் அதிகாரத்துக்கும் அடங்கி நடப்பதற்கென்றே ஆண்டவனால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் மக்கள் மனு நீதியும், மறையின் தீர்ப்பும் இதையே மக்களுக்கு உணர்த்தின இது நம் சரித்திரக் கதை — அந்தச் சரித்திரத்தின் மேல் படிந்த சரித்திரக் கறை! ஆனால் காலம் எப்படிப் பட்டது என்கிறீர்கள்? அது சரித்திரக் கதையை ஆக்கும்; அதன் மேல்படியும் சரித்திரக் கறையையும் போக்கும். அத்தகைய சரித்திரத்தின் துணையைக் கொண்டு, ஒரு நாள் 'வெள்ளை மனிதர்' இந்தியாவுக்குள் நுழைந்தனர், கறுப்பு மனிதரை அடிமை

கொண்டு அகம் மகிழ்ந்தனர் — பாவம், காலம் கைவிட்டு விட்ட 'கறுப்பு மன்னர்'களைக் கடவுளால் படைக்கப்பட்ட மனுவும் கைவிட்டு விட்டார், அந்த மனுவைத் தாங்கி நின்ற நமது அருமைத் தமிழ் மறையும் கைவிட்டு விட்டது. எனவே ஆபத்பாந்தவனாக வந்த கருப்பர் கைப்பற்றிய வெள்ளை 'மன்ன'னின் கையைக் 'கறுப்பு மன்னர்கள்' விடாமல் பற்றினர். ஆனால் தங்களைக் காப்பாற்றிக் கரை சேர்க்கும் கர்த்தாக்களாகக் கறுப்பு மன்னர்களையோ, அம் மன்னர்களுக்குக் கைகொடுத்த வெள்ளை மன்னரையோ நம்பவில்லை மக்கள்!

அதற்கேற்றாற்போல் 'பாழ்பட்டு நின்றதாமோர் பாரத தேசந் தன்னை வாழ்விக்க வந்தார் காந்தி'. ''நாம் எல்லாரும் இந்நாட்டு மன்னர்! — ஆம் ஆம், நாம் எல்லாரும் இந்நாட்டு மன்னர்!'' என்று நம் பாரதியாரைப் பின்பற்றிப் பாடினார். அடிமையைச் சாடி ஆங்கிலேயனை விரட்டினார், அவன் தலையிலிருந்த மணி மகுடத்தைப் பறித்து மக்களின் தலையிலே சூட்ட ஓடினார், வழியிலே வந்து குறுக்கிட்டான் கோட்ஸே — தெய்வமான மனிதனும், மிருகமான மனிதனும் நேருக்கு நேராகச் சந்தித்தனர்.

''இந்துக்கள்தான் அந்த மணிமகுடத்துக்கு உரியவர்கள்!'' என்றான் கோட்ஸே.

''இல்லை, முஸ்லீம்களும் அதற்கு உரியவர்களே!'' என்றார் மகாத்மா.

கேட்வில்லை பாவி! சுட்டான், சுட்டான், சுட்டேவிட்டான்! — மகாத்மா ஏந்தியிருந்த மணிமகுடம் மண்ணில் உருண்டது, அந்த மகுடத்தை ஓடி எடுத்தார் நேருஜி.

குறுக்கிட்டுத் தலையை நீட்டுகின்றனர் கோடீஸ்வரர்கள், தங்கள் தலையில் தான் மணிமகுடம் சூட்ட வேண்டுமென்று! குமுறி நிற்கின்றனர் கோவணாண்டிகள்!

நேருஜி பார்க்கிறார், பார்க்கிறார், இன்னும் பார்த்துக் கொண்டே இருக்கிறார். ''இந்தியா விடுதலையடைந்து ஏழு

வருஷங்களாகியும் நாங்கள் இந்நாட்டு மன்னர்களாக இன்னும் ஆகவில்லையே?'' என்ற ஏக்கத்துடன் மக்கள் அவரைப் பார்க்கின்றனர். பார்க்கின்றனர், பார்த்துக்கொண்டே இருக்கின்றனர்!

அந்த முடிசூடா மன்னர்களில் ஒருவரான குமாஸ்தாவைத் தாங்கும் பெருமையைத்தான் இந்த இதழ் ''மனிதன்'' அடைந்திருக்கிறான்.

* * *

# 2

இந்த வரிசையில் இரண்டாவது மன்னராக இடம் பெற்றிருப்பவர் — இதோ, இந்த இதழ் அட்டையை அலங்கரிக்கும் — அலங்கார புருஷராக அல்ல — அனாதையாக, அகதியாக் காட்சி தரும் கைத்தறிக்காரர்.

இப்பொழுதான் இவர் அனாதை, அகதி, டிக்கெட் இல்லாப் பிரயாணி, நடைபாதைவாசி! இதற்கு முன் — அதாவது, பண்டைக் காலத்தில் இவர் மன்னர் மட்டுமா? — இல்லை, மன்னர்களும் கண்டு மயங்கக்கூடிய மகா வல்லபராக இருந்தார்.

அப்பொழுதெல்லாம் இவருக்கு மாட மாளிகை இல்லாவிட்டாலும் மண் குடிசை இருந்தது. மணிமகுடம் இல்லாவிட்டாலும் முண்டாசு கட்டிக்கொள்ள ஒரு முழம் துண்டாவது இருந்தது. செங்கோல் இல்லாவிட்டாலும் பாவு தட்டும் கோலாவது இருந்தது.

நிலவின் ஒளி, நீரின் அலை — அடடா! இவர் அன்று நெய்த ஆடையின் நேர்த்தியை என்னென்பது? அத்தகைய திறமையை இவர் எங்குப் பெற்றார், எங்கிருந்து கற்றார் என்று தெரியாமல் கவிஞர்கள் உவமைகளைத் தேடினார்கள், அவர்கள் என்ன, ஆனானப்பட்ட 'லங்காஷயர்' ஆலைகளே நமது கைத்தறியாளரின் திறமையைக் கண்டு திகைத்தன என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக நெய்யும் கலையில் நிகரற்ற வராக விளங்கி வந்த இவர், அந்நியருக்கு இந்தியா அடிமைப் பட்டபின், இயந்திர சகாப்தம் இந்த உலகிலே ஆரம்பமானபின், மாற்றாந்தாய்க் குழந்தையாக மாறிவிட்டார், மணி மகுடம் பறி கொடுத்த மன்னராக ஆகிவிட்டார். அவ்வளவுதான் இயந்திரங் களின் இரும்புக்கரங்கள் கைத்தறியாளரின் கைகளை அடித்து நொறுக்கித் தூள் தூளாக்கிவிட்டன. அந்தப் பூதத்துடன் போட்டி யிட முடியாத கைத்தறியும், அதை இயக்கிக்கொண்டு அதன் இன்னிசையுடன் தன்னை மறந்திருந்த இந்த மன்னரும் கதியற்று, விதியற்றுக் காலமெனும் ஆற்றங்கரையின் மரமாக, அடிசாய்ந்து முடிசாய்ந்து விழுந்தனர்.

அது மட்டுமா? — ஒரு காலத்தில் பால் போன்ற ஆடையால் பாரத நாட்டு ராணிகளின் உள்ளங்களை மட்டுமல்ல — பழம் பெரும் ரோமாபுரி ராணிகளின் உள்ளங்களைக் கூடக் கொள்ளை கொண்ட இந்த ராஜா இன்று நடைபாதைகளிலே தன் சரித்திரத்தைச் சுருக்கமாகச் சாக்கால் எழுதிவிட்டு, வாய் விட்டுப் பிச்சை கேட்க முடியாமல் வயிற்றுக்கு மௌன பாஷையில் சமாதானம் சொல்லிக் கொண்டிருக்கிறார்! குடிசைத் தொழில் வளர்ப்பதற்காக அடிக்கடி ஆகாய விமானத்தில் பறக்கும் அரும்பெரும் தலைவர்களை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்கிறார்!

அவர்களோ, காந்திமகானை ஒருவழியாகத் தீர்த்துக் கட்டிய பிறகு, அவர் புத்துயிர் அளிக்க முயன்ற கதரைத் தீர்த்துக் கட்டுவதில் முனைந்திருக்கிறார்கள்! — அதற்காகவே பாவத்தை மறைக்கும் சின்னமாக, பதவிப் பெருமையையும் படாடோபத்தை யும் எடுத்துக்காட்டும் அடையாளமாக அதைப் பரப்பி வருகிறார் கள்!

அப்படிப் பட்டவர்களுக்குக் கைத்தறியைக் கவனிக்க நேரம் எங்கே இருக்கிறது? நேரம் இருந்தாலும் மனம் எங்கே இருக்கிறது? மனம் இருந்தாலும் 'மன்னுயிரெல்லாம் தன்னுயிர்' என்று மானங் காக்கும் பண்புதான் எங்கே இருக்கிறது?

அழியும் தொழிலுக்கு ஆக்கந்தர அத்தொழிலை நம்பி அழிந் தோர்க்கு ஊக்கந்தர உருப்படியான வேலைகள் இதுவரை ஒன் றுமே நடைபெறவில்லை. இந்த நிலையில் தீபாவளி கொண்டாடப்

போகும் நீங்களும், இவரைத் திண்டாடவிடப் போகிறீர்களா? — இல்லை. இவருடைய வீட்டிலும் ஒரு திரி விளக்காவது ஏற்றிவைக்கப் போகிறீர்களா?

* * *

# 3

இந்நாட்டின் வருங்காலச் சந்ததியினரை, 'எதிர்கால மன்னர்க'ளாக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் 'ஏழை மன்னர்' இவர். இந்த மன்னரைப் பற்றி இன்று பேசாதவர் கிடையாது; எழுதாதவர் கிடையாது.

இவர் தொட்டுக்காட்டிய எழுத்திலிருந்துதான் கலைகளே ஆரம்பமாகின்றன; இவர் அறிவிக்கும் அந்த முதல் எழுத்திலிருந்துதான் ஆத்மகீதம் பிறக்கிறது.

சேவையின் பெருமைக்கும் இன்றையச் சிறுமைக்கும் ஆளாகியுள்ள இவர்தான் கலைகளின் ஆரம்ப வடிவத்தைக் கற்றுத் தருகிறார். அதனால்தான், ''எழுத்தறிவித்தவன் இறைவனாகும்'' என்று கடவுளின் ஸ்தானத்தையே இவருக்குக் கொடுத்துக் கும்பிட்டனர், குருகுலம் எடுத்தனர் — அந்தக் காலத்தில்!

குருகுலமே கலைகளின் பிறப்பிடம்; புனிதத்தின் உறைவிடம்; ஆத்மா பரிபக்குவம் பெறும் புனிதத் தலம்.

பாரதத்தின் பண்பாடே ஒரு காலத்தில் குருவுக்கு மரியாதை செலுத்துவதில்தான் அடங்கி இருந்தது. அவருக்கு மதிப்பளிக்கத் தவறும் மனிதனை அந்தக் காலத்தில் மனிதனாகவே மதிப்பதில்லை; மணிமுடி தரித்த மன்னனும் குருவை வணங்குவான்.

அவருக்குச் செலுத்தும் காணிக்கை — சமூகம் செலுத்தும் மரியாதையாக மாசு மருவற்ற அன்பளிப்பாக, தமிழர் பண்பாட்டின் சின்னமாகத் திகழ்ந்தது. துரோணாச்சாரியாருக்குக் கட்டைவிரலையே காணிக்கையாகக் கொடுத்த ஏகலைவன் கதை பாரத நாட்டுக் குருபக்தியின் சிகரம்! அத்தகைய பெருமை இன்று மறைந்து விட்டது. ஏன், மடிந்து விட்டது என்றும் சொல்லலாம். ஆனால், அக்காலக் குருக்களின் ஸ்தானத்திலிருக்கும் இக்கால

ஆசிரியர்களின் சேவை மட்டும் மறையவில்லை. மடியவில்லை. அதற்குப் பதிலாக மலர்ந்து விரிந்து, மணம் பரப்பிக் கொண்டே இருக்கிறது.

காய்ந்த செடியில் துளிர்க்கும் அரும்பு போல வறுமையில் உழலும் ஆரம்ப ஆசிரியர்களின் உள்ளத்திலே முகிழ்த்து முறுவலிக்கும் சேவா உணர்ச்சி 'சமூகச் செல்வங்க'ளுக்குத் தக்க சமயத்தில் பயன்படுகிறது எதிர்கால மன்னர்களாகிய சிறார்களின் நெஞ்சிலே, உயர்ந்த லட்சியத்தின் வரிவடிவங்களை வரையும் அவர்களுடைய பெருமை மகத்தானது. ஆனால், அவர்கள் அடையும் சிறுமையோ? அப்பப்பா! சொல்லக் கூசுகிறது!

'சம்பளம்' என்ற ஒன்று இவர்களுக்கும் கிடைக்காமற் போகவில்லை; அந்தப் 'பொரு'ளால் இவர்கள் கணந்தோறும் செத்துப் பிறக்காமலும் இருக்கவில்லை — ஆம், இவர்களுடைய சிரிப்பிலே ஏன் அந்த வேதனை? வீட்டில் ஏற்றும் விளக்கொளியிலே ஏன் அந்த இருட்டு? குழந்தையின் மழலைமொழியிலே ஏன் அந்தச் சோகம்? குடும்பத்தின் இன்ப நினைவிலே ஏன் அந்தத் துன்பச் சாயல்? வாழ்க்கைச் சோலையிலே ஏன் அந்த வறுமைப் புயல்?

இந்த நிலையிலே உலர்ந்த நெஞ்சும் ஒட்டிய முகமுமாக இருக்கும் இவர், 'சம்பள உயர்வு கேட்பது தப்பு; வயிறார உண்ண உணவு கேட்பது தப்பு; வாழ்க்கைக்கு வேண்டிய சாதாரண வசதி கேட்பது கூடத் தப்பு — ஏன், இவர் வாழ நினைப்பதே தப்பு!' என்று சொல்வதைப் போல் எல்லாம் நடக்கிறது நம் அரசாங்கத்திலே!

இத்தகைய 'மன்ன'ரின் சம்பளத்தைப் பற்றிச் சென்ற வாரத்தில் நிபுணர்கள் பலர் கூடிக் கடைசியாக ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அந்த முடிவு, ''இந்தியாவில் ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் ரொம்ப மட்டம், சகிக்க முடியாத மோசம்!'' என்பதுதான்.

* * *

# 4

'டிசம்பர் ஸீஸன்' ஆரம்பமாகி விட்டது. 'இறந்த கால மகாராஜாக்களின் பணத்தோடு, 'எதிர்காலப் பிச்சைக்காரர்'களின் பணத்தையும் பறித்துக்கொண்டு சென்னை மாநகரையடுத்த கிண்டியிலே குதிரைகள் வாயு வேகம் மனோ வேகமாக ஓடிக்கொண்டிருக்கின்றன

அவை சிந்தும் ஒரு சில சல்லிக் காசுகளைப் பொறுக்கி எடுக்கும் 'புனிதமான தொண்'டில் ஈடுபட்டிருக்கும் '1954 மாடல் முற்போக்குப் பத்திரிகைகள் சில' அவற்றைப் பற்றிய செய்திகளைப் பத்தி, பத்தியாக வெளியிட்டுப் படித்தவர்களோடு பாமரர்களையும் பைத்தியக்காரர்களாக மாற்றிக்கொண்டிருக்கின்றன.

எல்லாம் பொழுது போக்குக்காகத்தான், எல்லாம் வெறும் விளையாட்டுக்காகத்தான்!

இனி அதையடுத்துச் சங்கீதக் கச்சேரிகள் ஆரம்பமாகும் — வயிற்றுக் கவலை இல்லாதவர்களின் செவிக் கவலை தீரும்.

பரத நாட்டியக் கலையரங்குகள் நிர்மாணிக்கப்படும் — பல்லில்லாத கிழவர்கள்கூடப் பாட்டிமாரான குமாரிகளின் அங்க அசைவுகளைக் கண்டு, 'இளிக்கக்கூடப் பல் இல்லையே!' என ஏங்குவார்கள்.

எல்லாம் பொழுதுபோக்குக்காகத்தான்; எல்லாம் வெறும் விளையாட்டுக்காகத்தான்!

இவை மட்டுமா? — இருப்பவனின் பணப் போட்டிக்காக நடக்கும் இல்லாதவனின் ரேக்ளாப் போட்டி, சைக்கிள் போட்டிகளெல்லாம் பார்க்கப் பார்க்க வேடிக்கையாயிருக்கும் பாமரர்களுக்கு வேதனையாயிருக்கும் பகுத்தறிவாளர்களுக்கு.

இந்தப் போட்டி மிருகங்களோடு நிற்குமா? — நிற்காது; இயந்திரங்களோடு நிற்குமா? — நிற்காது — மனிதர்களையும் பிடிக்கும். அதன் பயனாக 'இந்நாட்டு மன்னார்க'ளாக மாற்றப்பட வேண்டிய மனிதர்கள், சுயநலக்காரர்கள் சிலரால் 'மிருகங்க'ளாக மாற்றப்படுவார்கள் அவ்வாறு மாற்றப்படபோகும் ஒரு பாவமும் அறியாத இரு ஜீவன்களைத்தான் இந்த இதழ் அட்டையிலே வருத்தத்துடன் வெளியிட்டிருக்கிறோம்

தாங்கள் மனிதர்கள் என்பதையே அடியோடு மறந்துவிட்ட அவர்களைப் பாருங்கள் — புறக் கண்ணால் பார்க்க வேண்டாம், அகக்கண்ணால் பாருங்கள்.

இதற்கு முன் அவர்களுக்கிடையே ஏதாவது பகையுண்டா? பழி வாங்கும் உணர்ச்சிதான் உண்டா? — கிடையாது; கிடையவே கிடையாது.

ஆனால் அவர்கள் ஏன் அப்படி ஒருவர் மேல் ஒருவர் பாய்கிறார்கள்? முஷ்டியை ஓங்கி ஏன் முகங்களை ரணகளங்களாக்கிக் கொள்கிறார்கள்? அவர்களுக்கு இடையே மத்தியஸ்தனாக ஏன் ஒருவன் நிற்கிறான்? அவ்வளவு அருகிலிருந்தும் அவர்கள் சிந்தும் ரத்தத்தை அவனால் எப்படிப் பார்க்கமுடிகிறது?

அதோ, அடிக்கு மேல் அடி வாங்கிய அவர்களில் ஒருவன் அடியற்ற மரம்போல் கீழே சாய்கிறானே! அப்பொழுதும் விடாமல் அவனை ஒரு கையால் தாங்கி, இன்னொரு கையால் குத்துக்கு மேல் குத்தாக அடுத்தவன் குத்திக்கொண்டே இருக்கிறானே! — அவனிடமிருந்த மனிதத்தன்மை எங்கே போயிற்று? இளகும் மனமும் துடிக்கும் இதயமும் எங்கே போயின?

அங்கே என்ன ஆரவாரம்? — அவர்கள் ஏன் அப்படிக் கைகொட்டுகிறார்கள்? அவர்கள் ஏன் அப்படிக் கோஷமிடுகிறார்

கள்; 'ஐயோ, அழவேண்டிய நேரத்தில் அவர்கள் சிரிக்கிறார்களே! — அன்பு காட்ட வேண்டிய நேரத்தில் அறியாமையைக் காட்டுகிறார்களே — அவர்கள் மக்களா? மனிதர்களா? — நம்மைப் பொறுத்த வரை சந்தேகமாய்த்தான் இருக்கிறது.

இந்தக் கொடுமை எப்போது சாயும்? இந்தக் குரூரம் எப்போது மாயும்? — பதில் அளிக்க வேண்டியவர்கள் நீங்கள்தான்!

* * *

# 5

நம் பழம் பெரும் பாரத நாட்டின் அருமை பெருமைகளைப் பற்றி அன்றும் இன்றும் பல கவிஞர்கள் பாடினார்கள்; பாடிக்கொண்டிருக்கிறார்கள். அவற்றில் சில நாம் ஒப்புக்கொள்ள முடியாதவை; அழுத்தந்திருத்தமாக மறுக்கக் கூடியவை.

ஆனால் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் நாம் அனைவரும் உடனே ஒப்புக்கொள்ளக்கூடியவர்களாயும் எந்தக் காரணத்தைக் கொண்டும் மறுக்க முடியாதவர்களாயும் இருக்கிறோம்.

அதுதான் தொழிலாளரின் தோற்றம்!

உழவன் என்றால் இப்படித்தான் இருப்பான்; கொல்லன் என்றால் இப்படித்தான் இருப்பான், குயவன் என்றால் இப்படித் தான் இருப்பான், கொத்தன் என்றால் இப்படித்தான் இருப்பான் என்று பார்க்கும்போதே இனங் கண்டுகொள்ளும் 'பெருமை' நமது நாட்டின் 'தனிப்பெருமை!'

மற்ற நாடுகளோ இன்றுவரை அந்தப் 'பெருமை'க்கு உள்ளாக வில்லை. அங்கெல்லாம் தொழிலில்தான் வித்தியாசம்; தோற்றத்தில் வித்தியாசம் கிடையாது — என்ன சிறுமை, என்ன சிறுமை! — எதற்கும் கொடுத்து வைக்க வேண்டும், பாருங்கள்!

அதிலும் இந்த இதழ் முகப்பிலே காட்சியளிக்கும் இருவர் — தோற்றத்திலேயே தாங்கள் இன்னார் என்பதைக் காட்டிக்கொள் ளும் இருவர் — இந்நாட்டு மன்னரும் மகாராணியும் மட்டுமல்ல; உலகத்தின் எஜமானர்கள்! ஏக சக்ராதிபதிகள்! கொடுத்து வைத்த வர்கள்! கோலின்றிக் குடியாட்சி நடத்துபவர்கள்!

அவர்கள் இல்லையென்றால் உயிரே கிடையாது; உலகம் கிடையாது, கடவுளுக்கோ நமக்கோ ஏதும் கிடையாது கேட்டா லும் சரி, கேட்காவிட்டாலும் சரி, இவர்களைச் சிலர் பாராட்டிக் கொண்டே இருக்கிறார்கள், அழுதால்கூட அவர்களை அடிக்கடி சிரிக்க வைக்க முயன்று கொண்டே இருக்கிறார்கள் — அதுவும் எப்படி?

''ஆஹா! ஆனானப்பட்ட காந்தி மகானையே அரை நிர்வா ணப் பக்கிரியாக்கிய அண்ணல்களல்லவா நீங்கள்! — உங்கள் கஞ்சியில் இல்லாத இன்பமா எங்கள் காப்பியில் இருக்கிறது? உங்கள் குடிசையில் இல்லாத இன்பமா எங்கள் கூனூர் பங்களா வில் இருக்கிறது? உங்கள் கிராமத்தில் இல்லாத இன்பமா எங்கள் கூவம் நகரத்தில் இருக்கிறது?'' என்றெல்லாம் சதா அவர்களுடைய சிண்டைத் தட்டி விட்டுக்கொண்டே இருக்கிறார்கள்

ஆனால் அவர்களுக்கோ அதைக் கேட்கக்கூட நேரம் இல்லை!

உழைப்பு, உழைப்பு என்று உழைத்துக் கொண்டே இருக் கிறார்கள், வெய்யிலையும் மழையையும் பொருட்படுத்தாமல் ஈனத்தையும் மானத்தையும் மட்டுமே பொருட்படுத்தித் தங்க ளுக்கு வரும் இன்னல்களையெல்லாம் தாங்கிக் கொண்டிருக்கிறார் கள்.

அதற்காக உல்லாசபுரிவாசிகள் அவர்களைச் சும்மா விட்டு விட முடியுமா? — விட்டால் சோற்றுக்கு வழி? — ''பாராட்டு வோம், பாராட்டுவோம், பாராட்டிக்கொண்டே இருப்போம்'' என்கி றார்கள்!

இல்லையென்றால், செருப்பில்லாமல் நடக்க முடியாத அவர்க ளால் சேற்றிலிறங்கி உழ முடியுமா, என்ன?

பாடுங்கள், மேல் ஸ்தாயியில் பாடுங்கள்:

''பார் முழுதும் ஏரு முனையிலே,
பலன் மட்டும் வான் உலகிலே!''

ஆனால் ஒன்று — காலம் போகிற போக்கைப் பார்த்தால் இரண்டாவது அடியை மட்டும் கொஞ்சம் கீழ் ஸ்தாயியில் பாடுவது எதற்கும் நல்லது!

—'மனிதன்', 1954

* * * * *

# இதோ ஒரு சுயமரியாதைக்காரர்! — 1

**தோழர் ராம்ஜி**

இவர் திரு. ஈ.வெ. ராமசாமிப் பெரியாரின் சீடரா? — இல்லை

திரு. அண்ணாத்துரையின் திரு அவதாரமா? இல்லை; இல்லவே இல்லை

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் தாசானுதாசனா? — ஊஹூம், அதுவும் இல்லை!

ஆனால் இவர் ஒரு சுயமரியாதைக்காரர், அசல் சுயமரியாதைக்காரர், அப்பட்டமான சுயமரியாதைக்காரர்!

தென்னாடு இன்று எத்தனையோ தமிழர்களைத் தெருவில் பிச்சை எடுக்க விட்டிருக்கிறது, தமிழர்களும் கொஞ்சங்கூடக் கூசாமல் எடுத்ததற்கெல்லாம் கையேந்தித் தங்கள் தன்மானத்தைக் காலணாவுக்கும் அரையணாவுக்கும் தெருவெல்லாம் விற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

சர்க்கார் இவர்களைக் கவனிப்பதாயிருந்தால் அது இந்தக் காலத்தில் அவ்வளவு சுலபமான காரியமல்ல — அதற்கு முதலில் கமிட்டி அமைக்க வேண்டும், அந்தக் கமிட்டி திட்டம் வகுக்க வேண்டும், அந்தத் திட்டத்தைச் சட்டசபை ஏற்றுக்கொள்ள வேண்டும்; அது அமுலுக்கு வந்தால் அதிகாரிகள் பிச்சைக்காரர்களிடம் லஞ்சம் கேட்காமல் இருக்க வேண்டும் — இப்படி எத்தனையோ தொல்லைகள் சர்க்காருக்கு!

இதற்கெல்லாம் இடம் கொடுக்காமல் சென்னை சைனா பஜாரில் மாலை முழுதும் பெருமையுடன் பவனி வரும் இந்தப் பிறவிக்

குருடரைப் பாருங்கள்; "ஆ, நூறு பத்தி ஆறணா! ஆ, நூறு பத்தி ஆறணா!" என்று கண்ணற்ற நிலையிலும் கைக் கோலை ஊன்றிக் கொண்டு கௌரவத்தோடு ஊதுவத்தி விற்கும் இவர் குரலைக் கேளுங்கள்!

"ஏ, தாழ்ந்த தமிழ்நாடே! தன்மானம் மிக்க தமிழனே! — ஏறு, முன்னேறு!" என்ற கூச்சலை ஒரு முறைகூடக் கேட்டறியாத வடநாட்டுக்காரர் இவர். பெயர் ராம்ஜி. ஆக்ராவுக்கு அருகே உள்ள மதுரா என்னும் பதியில் ஸ்ரீ கல்லாராமுக்கும் ஸ்ரீமதி ஷியாமா பாய்க்கும் அருமந்த புத்திரனாக அவதரித்த இவர், பிறக்கும்போதே கண்களை இழந்திருந்தாராம், பாவம்!

மிட்டாய் வியாபாரியாகிய ஸ்ரீ கல்லாராம், தன் குருட்டுப் பிள்ளையைப் பற்றி என்ன நினைத்தாரோ, மகன் ராம்ஜி மட்டும், "குருடனாயிருந்தாலும் நான் ஒரு வியாபாரியின் மகன், குருடனா யிருந்தாலும் நான் ஒரு வியாபாரியின் மகன்!" என்று அடிக்கடி நினைவுபடுத்திக்கொண்டு சென்னைக்கு வந்தார். வந்ததும், " அம்மா! ரெண்டு கண்ணும் தெரியலே, தாயே!" என்றோ, "மக்களைப் பெத்த மவராசமாரே! ஓடி ஆடிப் பாடுபட முடியாத குருடனய்யா!" என்றோ இவர் தெருவில் ஒப்பாரி வைக்கவில்லை; அதற்குப் பதிலாக, "சைனா பஜார் முழுதும் என் வியாபார ஸ்தலம்!" என்று மார்தட்டிக் கொண்டு கிளம்பினார், தானும் ஒரு வியாபாரி என்ற கௌரவத்தோடு!

1951-ல் இவரது தந்தை காலமானாராம். கணவரை இழந்த அபலை அன்னையைக் காக்கும் பொறுப்பை இவர்தான் இப்போது ஏற்றுக்கொண்டிருக்கிறாராம். இதை அவர் பெருமையுடன் சொல்லும்போது, அவருடைய புறக்கண்கள் இருளடைந்து கிடந்தாலும் அகக்கண்கள் சுடர் விட்டுப் பிரகாசிப்பதை முகத்தின் வழியாகப் பார்க்க வேண்டுமே! — அடடா! தென்னாடு தந்திருக்கும் பிச்சைக்காரச் செல்வங்கள் அனைத்தும் இந்த வடநாட்டுச் செல்வத்தை ஒருமுறை பார்க்க வேண்டும்; அந்தச் செல்வத்தைப் போலத் தன்னம்பிக்கையோடு, தன்மானத்தோடு வாழப் பழக வேண்டும். அதன் மூலம் 'மனிதப் பண்பு' காப்பாற்றப்பட வேண்டும்; 'அதுவே வாழ்க்கை' என்ற உறுதியும் வேண்டும். இந்த உறுதியில்

லாமல் கண்ணிருந்தும் குருடராக இருக்கும் பலரிடையே கண்ணி ழந்தும் கண்ணுடன் இருப்பவர் ராம்ஜி. சென்னையில் இவருக்கு உற்றார் உறவினர்கள் கூட உண்டாம். ஆனால் அவர்களுடைய வீட்டுக்கெல்லாம் இவர் போகவே மாட்டாராம்! — ஓய் தென்னாட் டாரே, எப்படி இருக்கிறது இந்த வடநாட்டார் விஷயம்?

# இதோ ஒரு சுயமரியாதைக்காரர்! — 2

***தோழர் ஆரோக்கியசாமி***

நமது அருமை ஒளவைப் பாட்டி மானிடப்பிறவியைப் பற்றி 'அரிது' ஜாபிதா ஒன்றைச் சமர்ப்பித்திருக்கிறாள் அல்லவா? அந்த அரிது, 'அபாய அறிவிப்பு'க்கெல்லாம் 'டிமிக்கி' கொடுத்துவிட்டுத் தோழர் ஆரோக்கியசாமி பிறக்கும்போது நன்றாகத்தான் பிறந்தார் அந்தச் சமயத்திலே அவர் எந்தவித 'அரிது', அணுக்குண்டுக்கும் இலக்காகவில்லை பிறகுதான் அந்தப் பாழாய்ப்போன 'அரிது' வந்து அவரை அண்டியது வாழ்வின் வசந்தப் பருவத்திலே, அவரது கால்களில் ஒன்றைப் பலி வாங்கிக்கொண்டு விட்டது, எமதூதனைப்போல வந்த கார் ஒன்று! — பாவம், ஒற்றைக் காலை இழந்துவிட்ட ஆரோக்கியசாமி ஒருகணம் சிந்தித்தார்; எதிர்காலம் அவரைப்பார்த்துப் பயங்கரமாகச் சிரித்தது — மேலும் சிந்தித்தார்; அதே காலம் 'கோ'வெனக் கதறி அழுதது!

அதற்குமேலும் சிந்தித்தார்; இப்போது அவருடைய மனக்கண் முன் ''காயமே இது பொய்யடா!'' என்ற ஹிதோபதேசம் எதிரொலித்தது. எப்படியாவது நாம் வாழவேண்டுமென்ற அவரது நம்பிக்கைக்குப் பங்கமளிக்கவில்லை; ''மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான்!'' என்ற சோம்பேறிக் குரலும் அவர் பஞ்சை நெஞ்சிலே பண் பாடவில்லை; ''அம்மா! பிச்சை தாயே, காலில்லாத நொண்டி, தாயே!'' என்ற அபயச் சொல் அபயம் தரவில்லை; தன்மானத்தை விலை பேசி, தன்னம்பிக்கையைக் காற்றில் பறக்கவிட அமுதசுரபித் திரு ஓடும் அவருக்கு முன்னால் பிரசன்னமாக வில்லை — ஏன், உலகளந்த பகவான் கூட அவருக்குப் படியளப்பதாக உறுதி கூறவில்லை. பின்னர்?

அவரது மனிதப் பண்பிலே பண்பட்ட தன்மான உணர்ச்சி கம்பீரமாக முன் நின்று குரல் கொடுத்தது; வாழ வழிவகுத்துத் தந்தது, ஊன்றுகோல் ஒன்று, "இதோ, உனக்கு யார் தோழனா யில்லாவிட்டாலும் நான் தோழனாயிருக்கத் தயார்!'' என்று குதித்துக்கொண்டு வந்து எதிரே நின்றது!

அத்துடன் சைக்கிளையும் துணையாகக் கொண்டு அவர் உலகத்திலே ஊன்ற முடியாத காலை ஊன்றினார், எல்லாம் வல்ல கர்த்தரின் கருணையும், கோபாலபுரம் பத்திரிகை விற்பனையாளர் ஜனாப் அலாவுதீனின் அருளும் அவருக்குக் கிடைத்தன ஆரோக்கி யசாமி மனிதரானார், 'தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா!'' என்று சங்கநாதம் செய்தார்

கடந்த இருபது ஆண்டுகளாக, சாயபு அவர்களிடம் தோழர் ஆரோக்கியசாமி பணியாற்றுகிறார் கையில் பல பத்திரிகைகளு டன் 'சுதேசமித்திரன், விடுதலை!'' என்று தெருவெல்லாம் 'தமிழ் முழக்கம்' செய்வதோடு, 'மெயில், எக்ஸ்பிரஸ்!'' என்று 'ஆங்கில முழக்க'மும் செய்து வருகிறார்! தன்மானம் மிக்க தனயனின் எடுத்துக்காட்டான வாழ்க்கையைக்காணக் கொடுத்து வைக்காதவர் கள் தோழர் ஆரோக்கியசாமியின் பெற்றோர்கள். அவருடைய ரத்த பாசத்தில் சமபங்கு பெறும் பாக்கியம் பெற்றவர்கள், அவரது அருமைத் தங்கையும் அன்புத் தம்பியும். தங்கைக்குத் திருமணம் முடிந்துவிட்டது; தம்பிக்கும் கல்யாணம் முடிந்துவிட்டால் கவ லையே கிடையாதாம் இந்த அண்ணனுக்கு.

ஆம், அவர்களுக்காக இவர் பிரம்மசாரியாக இருந்தார்; இன்னும் இருக்கிறார்!

உடன் பிறந்தவர்களின் இன்பமும் நல்வாழ்வும் தன்னுடைய இன்பம், தன்னுடைய நல்வாழ்வு என்று சொல்லிச் சொல்லிப் பரவசப்படுகிறார் இவர். இத்தகைய தியாகச் சீலரைத் தமையனாகப் பெற்ற தம்பியும் தங்கையும் கொடுத்து வைத்தவர்கள்!

சென்னை ராயப்பேட்டையில் இவர் இருப்பிடம் அமைந்திருக்கிறது

ஏழ்மையில் பிறந்தும், ஒரு காலை இழந்து ஊனமடைந்தும், எடுத்துக்காட்டான 'இலட்சிய வாழ்க்கை' வாழ்ந்து காட்டும் தோழர் ஆரோக்கியசாமிக்கு நான் தலைவணங்குகிறேன்.

❊ ❊ ❊ ❊ ❊

# இதோ ஒரு சுயமரியாதைக்காரர்! — 3

**தோழர் லோகநாதன்**

'அக்கிரகாரத்திலே பிறந்த அதிசயப் பிறவி'யாகவோ அல்லது 'தீரமிக்க திராவிட'ராகவோ இல்லாமல் — 'சுயமரியாதை இயக்கம்' என்கிற 'பழைய இயக்க'த்தில் பங்கு கொண்டவராக இருந்து, 'புதிய கட்சிக்கார'ராக மாறிப் 'பாரம்பரியம்' பேசாமல் — கட்சிகளில் கிடைக்கும் அங்கத்தினர் சீட்டுகளைப் பெற்றதுமே மனிதப் பண்புகள் அத்தனையும் பெற்றுவிட்டதாக மனப்பால் குடிக்காமல் 'சுயமரியாதைக்காரர்களாக வாழ்ந்து காட்டுவோர்' வரிசையில் தோழர் லோகநாதன் தனிச் சிறப்புடையவராகக் காணப்படுகிறார்

செஞ்சித் தாலுக்காவிலே உள்ள ஒரு சின்னஞ் சிறு கிராமத்திலே பிறந்து சென்னையிலே வளர்ந்த இவருக்கு, வயது பதினாலு ஆகும்பொழுதே விதி இவருடன் விளையாடி விட்டது!.

ஏதோ ஒரு பண்டிகை, குழந்தை லோகநாதன் தளிர்க் கரங்களால் பட்டாசுகளைக் கொளுத்திப் போட்டு விட்டு, அவை வெடிப்பதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான். அப்பொழுது விதியும் தன்னுடன் சேர்ந்து விளையாடப் போகிறது என்பதை — அறிஞர்களாலும் அறியமுடியாத அந்த உண்மையை — பதினான்கு வயதுச் சிறுவனால் அறிந்துகொள்ள முடியுமா? 'யானை வெடி' ஒன்றைக் கொளுத்தியபோது அந்த வெடி பயங்கரமாய் வெடித்துச் சிதறி அவன் பிஞ்சுக் கரங்களைத் தாக்கிவிட்டது. தீப்பட்டு வெந்த கைகளுடன் துடித்துக் கதறிய சிறுவனை எடுத்துக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடினர் பெற்றோர். அங்கே ஊசி போட்டார்கள்; மருந்து வைத்துக் கட்டினார்கள்; இன்னும் பல சிகிச்சைகள் செய்து பார்த்தார்கள். என்ன செய்தும் குழந்தையின் பிஞ்சுக் கரங்களை மட்டும் அவர்களால் காப்பாற்ற முடிய

வில்லை — கைகளை எடுத்தே விட்டனர்; தாவிப் படர்ந்து தழைக்க இருந்த இளங் கொடியை வெட்டிச் சிதைத்து வீசி எறிந்தே விட்டது விதியின் கரம்!.

பாவம், திரு லோகநாதன் கைகளை இழந்தார், இன்பக் கனவுகளை என்றுமே எட்டிப் பிடிக்க முடியாதவர் ஆனார். இதனால் அவருடைய வாழ்க்கையே ஆதாரமற்று ஆட்டங் கண்டு விட்டதுபோல் தோன்றிற்று.

''கையே, மூளையின் சிற்பி!'' என்று கூறுகிறார்கள் கட்டடங் களைக் கட்டிய கையே, கற்பனைத் திறன்மிக்க மூளையின் அமைப்பையும் வளர்த்ததாம், மிருகப் பிராயத்தைத் துரத்தி மனி தப் பிராயத்தைக் கண்டதாம்! அத்தகைய கைகளை எந்த மனிதன் தான் இழக்கத் துணிவான்? அப்படி இழக்க நேர்ந்தால் எந்த மனிதன்தான் தன் வாழ்க்கையே அஸ்தமித்து விட்டதாகக் கருதி வருந்தாமல் இருப்பான்? அப்படிப்பட்ட வருத்தம் தன் ஆத்மா வையே கசக்கிப் பிழிய திரு லோகநாதன் கரைகாணாக் கவலைக் கடலில் மூழ்கி, அதன் கடும் புயலில் சிக்கி வருந்தினார், வாடினார், வழி காணாமல் தவித்தார். தோழர் லோகநாதனின் பெற்றோர்களோ பரம ஏழைகள். எனவே கடவுள் இவர்களைச் சோதிக்காமல் சும்மா விடுவாரா?

முதல் சோதனை, லோகநாதன் கைகளை இழந்தது; இரண்டா வது சோதனை தந்தையை இழந்தது — இவ்வாறு சோதனைக்கு மேல் சோதனையைக் கண்ட அந்தக் குடும்பம், எப்படிக் கலங்கியி ருக்கும் என்று ஒரு கணம் கற்பனை செய்து பாருங்கள்!

ஆனால் அன்னை நாகரத்தின அம்மை மட்டும் அடியோடு நம்பிக்கையை இழந்துவிடவில்லை; 'கைவிட்டுச் சென்ற கணவ' னும், 'கைகளை இழந்த பிள்ளை'யும் 'எங்கள் லட்சியமாகிய வாழ்க்கைப் பாதையில் நீயாவது தளராமல் நட!'' என்று தைரிய மூட்டினர், அந்த அம்மைக்கு!

பெரும் பெரும் வாணிபங்கள் நடத்தி வாழ்ந்த தமிழன் பரம்பரைக்குத் தற்போது நினைத்தவுடன் தஞ்சம்புகும் வியாபார மாகத் தலையெடுத்துள்ள தோசை சுட்டு விற்கும் வியாபாரத்தைத் தொடங்கினாள் அந்த அம்மை. அத்துடன் தேனீர்க் கடையும் வைத்தாள்.

அந்தக் கடை மெல்ல மெல்ல வளர்ந்தது; அதன் வளர்ச்சி சென்ற வழியே லோகநாதனின் கருத்துக்களும் வளர்ந்தன.

ஆதிகாலத்தில் கைகளால் சிருஷ்டிக்கப்பட்ட 'மனித மனம்' இன்று மனிதனுக்குக் கைகளாகவும் கால்களாகவும் — ஏன், கண்க ளாகவும்கூட அமைந்து விட்டது. அதுவே திக்குத் தெரியாத இருளில் சிந்தனைச் சுடர் ஏற்றித் திசை காட்டும் கலங்கரை விளக்கமாய்த் திகழ்கிறது.

அந்த மனத்தின் துணை கொண்டு லோகநாதன் சிந்தித்தார்; அவருக்குத் திசை தெரிந்துவிட்டது! — ஊக்கமும் உறுதி குலையா உள்ளமும் அவருடைய கைகளாக மாறின. அவற்றால் தோசை, இட்டிலி முதலிய பலகாரங்கள் சுடவும், கடையை நடத்தவும் கற்றுக்கொண்டுவிட்டார் அவர்.

உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஆம், மனம் இருக்கிறதே, அது மனிதனுக்கு ஆச்சரியமூட்டக்கூடிய — ஆச்சரி யம் நிறைந்த அங்கம். அந்த அங்கத்தின் திட்பமும் நுட்பமும் சேர்ந்துதான் படு செவிடராக இருந்த பிதோவன் என்ற ஜெர்மனிய ரைச் சங்கீத மேதையாக்கியது; குருடராக இருந்த ஆஸ்ட்ராவ்ஸ்கி என்ற ருஷ்யரை நாவலாசிரியராக்கியது, அதே மனம்தான் முட மான லோகநாதனையும் முன்னுக்குக் கொண்டு வந்து விட்டுவிட் டது!.

பிள்ளையின் திறங் கண்டு பெற்றவள் வியந்தாள். ''இனி, என் மகன் பிழைத்துக் கொள்வான்!'' என ஆறுதல் கொண்டாள்.

அதே சமயம் அவள் உள்ளம் மகனின் மண வாழ்க்கையை எண்ணி மகிழ்ந்தது. கன்னியம்மை என்னும் கன்னிகையின் துணையால் அந்தக் கனவும் நனவாயிற்று.

அந்த ஆறுதலில், எல்லையற்றுப் பெருகிய அந்த ஆனந்தத்தில், தன் வம்சாவளியைப் பற்றிய அந்தக் கனவில் மனம் லயிக்க அவள் கண்ணை மூடிவிட்டாள்!'

தாயை இழந்தது லோகநாதனுக்குப் பேரிடியாக இருந்தது. ஆனால் வள்ளுவருக்குக் கிடைத்த வாசுகியைப் போல, திரு லோகநாதனுக்குக் கன்னியம்மை கிடைத்திருந்தாள். தாயைப் பிரிந்த துக்கத்தை, அவளுடைய கருணை ததும்பும் கண்களால் அவர் மறந்தார்; மன நிறைவெய்தினார்.

'தாய்க்குப் பின் தாரம்' என்று சொன்னவர்கள் பைத்தியக்காரர்களா, என்ன? — இந்த இருபதாம் நூற்றாண்டின் 'நாகரிகக் குடும்பங்களில் மூழ்கி நனைந்தவர்களுக்கு வேண்டுமானால் அந்த வாக்கியம் பிடிக்காமல் இருக்கலாம், பிடிபடாமலும் இருக்கலாம். ஆனால் 'லோகநாதன் — கன்னியம்மை' போன்ற தம்பதிகள் அந்த வாக்குக்கேற்ப இன்னமும் நடந்துகொண்டுதான் இருக்கிறார்கள், அத்தகையவர்களால் தமிழர்களின் மானமும் ஓரளவாவது இன்று வரை வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறது.

''என் மனைவி, என்னுடன் மனமுவந்து ஒத்துழைக்கிறாள். இதனால் யாருடைய உதவியும் இன்றியே நாங்கள் ஐந்து குழந்தைகளுடன் கஷ்டமின்றிக் காலத்தைக் கழித்து வருகிறோம்'' என்று கூறுகிறார் தோழர் லோகநாதன் — வாழ்க, அவர் தன்மானம்!

✡ ✡ ✡ ✡ ✡

# இதோ ஒரு சுயமரியாதைக்காரர்! — 4

***எழுத்தாளர் கலைப்பித்தன்***

முதல் பிரம்மாவுக்குக் *'கண்ணாமூச்சி'* என்றால் ரொம்ப ரொம்ப ஆசை, அதற்காகத்தான் வாழ்க்கையையே கண்ணாமூச்சி யாக்கி விளையாடினார், விளையாடுகிறார்! — இந்தக் கண்ணா மூச்சி விளையாட்டுக்குச் *'சவால்'* மாதிரி ஓர் எக்காளச் சிரிப்பு — தன்மானச் சிரிப்பு எதிரொலித்தது, முதல் பிரம்மாவுக்கு நேர் வாரிசான இரண்டாவது பிரம்மாவிடமிருந்து படைப்புக் கடவுள் கள் இருவரும் 'ராஜீய முறை'யிலே கை குலுக்கிக் கொண்டார்கள், மூன்றே முக்கால் நாழிகைக்கு மேல் எந்தக் கடவுளும் பூலோகத் திலே நிலைத்து நிற்கமுடியாதல்லவா? — எனவே முதல் பிரம்மா வைப் பேட்டி கண்ட இரண்டாவது பிரம்மாவை மட்டும் இந்த இதழ் ''மனித''னில் அறிமுகப்படுத்துகிறோம் பெருமையுடன், பெருமிதத்துடன். இந்தச் சுயமரியாதைக்காரர் ஓர் அதிசய மனிதர்; கலையென்றால் இவருக்குப் பைத்தியம்; வாழ்க்கையே இவருக்குக் கண்ணாமூச்சி விளையாட்டு — முதல் கடவுளின் பரம்பரை யல்லவா?

பெற்றோர் இட்ட பெயர் சுந்தரராஜன்; இவராகப் புனைந்து கொண்ட பெயர் *'கலைப்பித்தன்.'*

பள்ளி நாட்கள் வாழ்க்கையின் கனவுலக இன்ப நாட்கள். அந்நாட்களிலேதான் நண்பர் கலைப்பித்தனின் வாழ்க்கையில் ஒரு திருப்பு முனை — கால்பந்தாட்டத்தில் திளைத்திருந்த இவருக்குக் கால்கள் 'சுளுக்கி'க் கொண்டன; சிறு விபத்துதான்! — ஆனால் அந்தச் சிறு விபத்தின் விளைவு பன்னிரண்டு ஆண்டுகள் 'மருத் துவ நிலையப் பறவை'யாக இவரை ஆக்கிவிட்டதே!

எத்தனையோ இரண சிகிச்சை செய்தும் பயன் இல்லை; இரண்டு கால்களும் மடக்க முடியாமல் இடுப்பிற்குக் கீழே நீட்டியது நீட்டியபடியே கிடக்கின்றன. எழுந்து நிற்கவோ, நடக் கவோ முடியாது. குளிப்பதாயிருந்தாலும் சரி, வெளியில் எங்கா

வது போவதாயிருந்தாலும் சரி, இருவர் சேர்ந்து இவரைத் தூக்கிக் கொண்டுதான் செல்ல வேண்டும்—இது கடவுள் சித்தம்!.

''சாவதற்குத் துணிந்தால் பேனாவை எடு!''—சூன்ய வெளியினை வெட்டிப் பாய்ந்த இந்த எதிரொலியைக் கேட்டுச் சிரித்தார் நண்பர், பைத்தியக்காரன் ஒருவனின் அனுபவமொழியான அது, அவரைச் சிந்தனை செய்யத் தூண்டவில்லை; சிரிக்கத்தான் தூண்டியது!—''இரண்டு கால்களென்ன, இரண்டு கண்களும் போனால் கூட நான் கலங்கப் போவதில்லை'' என்ற 'தன்னம்பிக்கை' அந்தச் சிரிப்பிலே வெற்றி முரசு கொட்டியது. பேனாவை எடுத்தார்; கலைப்பித்தனானார்.

பிறவா வரம் தர மேலிடத்திற்கு மனுப் போடாமலேயே, தண்டமிழ் நாட்டிலே தமிழ்க்குரல் கொடுத்துவிட்ட இவருக்குப் பிறவிப் பயன் கிடைத்துவிட்டது என்றுதான் சொல்லவேண்டும். இல்லையென்றால் இவருக்குச் 'சோதனை'கள் காட்டிய தெய்வங்களென்ன, அரசியல் தலைவர்களென்ன, மேலை நாட்டு நல்லறிஞர்களென்ன—இவர்களெல்லாம் கலைப்பித்தனின் பேட்டிக்கு இசைவார்களா?—பிறந்த மனையான 'கலை இல்ல'த்தில் நிறுவப்பட்டுள்ள சிறு நூல் நிலையத்திலேதான் இந்தப் 'பேட்டிக'ளெல்லாம் அன்றாடம் நடைபெற்று வருகின்றன!

எழுத்துப் பைத்தியம் நண்பரை ஆசிரியனாகவும் ஆக்கி வேடிக்கை பார்த்துவிட்டது. ஒருவன் எண்ணியவிதமே ஆகிறான் அல்லவா?—அதற்கிணங்கக் 'கலை மலர்' என்ற இலக்கிய இதழ் திரு. கலைப்பித்தனை ஆசிரியராகக் கொண்டு பெருமை பூண்டது. இவருடைய சொந்தக் குழந்தையான அதற்கு மூன்று ஆண்டுகள் தாம் ஆயுள் என்று தமிழ்நாடு சொல்லி விட்டது; எனவே மலரும் கருகிவிட்டது.

படிப்பு, சிந்தனை, பயனுள்ள பேச்சு—இவை தினசரி வேலை. 'சுதந்திர தீபம், மந்திரி மனைவி, தொழிலாளர் தோழன்' என்பன இவரது படைப்புகள்.

❋ ❋ ❋ ❋ ❋

# இதோ ஒரு சுயமரியாதைக்காரர்! — 5

**தோழர் வெங்கடாசலம்**

பிறருடைய சுயமரியாதைக்கு எந்த விதத்திலும் பங்கம் விளைக்காமல் கடந்த நாற்பது வருடகாலமாகத் தன் சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொண்டு வருபவர் தோழர் வெங்கடாசலம்.

கடவுள் கண்ணைக் கொடுப்பார் என்பார்கள். இவருடைய விஷயத்தில் அவர் ஏனோ அப்படிச் செய்யவில்லை, பதின்மூன்றாவது வயதிலேயே பெரியம்மை அவர் கண்களைப் பறித்துக் கொண்டுவிட்டது.

என்ன செய்வார், பாவம் — 'ஏற்பது இகழ்ச்சி' என்று கருதிய இவர், மூன்றாவது வகுப்புடன் திண்ணைப் பள்ளிக்கூடத்துக்கு முழுக்குப்போட்டுவிட்டு, அறிவுக்கு உணவு தேடுவதற்குப் பதிலாக வயிற்றுக்கு உணவு தேடினார்

சந்தர்ப்பம் முதலில் அவரை மாட்டு வண்டி ஓட்ட வைத்தது. ஏறக்குறைய எட்டாண்டுகள் முன்னால் செல்லும் வண்டிகள் வழி காட்டப் பின்னால் தன் வண்டியை ஓட்டி ஜீவனம் செய்தார்.

அதற்குப் பின் வணிகர் மரபிலே உதித்த அவருக்கு வாணிபத்தின்மேல் கவனம் சென்றது சிறுவன் ஒருவன் உதவியுடன் சென்னைமாநகர் வீதிகளிலே மிளகாய், தனியா விற்கும் தெரு வியாபாரியாக மாறினார் அதனால் ஏற்பட்ட நஷ்டத்தால் ஐந்து வருட காலம் மளிகைக் கடையொன்றைத் தஞ்சமடைந்தார். உயிரும் உணர்ச்சியும் அற்ற தராசும் படிக்கல்லும், மரக்காலும் படியும் இவரைக் கைவிடவில்லை, ஒத்துழைத்தன எனவே, கண்ணில்லாத குறை ஒரு குறையாகவே தோன்றவில்லை, கடை முதலாளிக்கு — கருணை காட்டினார்!

அடுத்தாற்போல் மிட்டாய்க் கம்பெனியொன்று நாலு வருட காலம் இவருடைய சேவையை உபயோகப்படுத்திக் கொண்டது. அதற்குப் பின் இரவு வாயில் காப்போனாக இவர் ஒரு காரியாலயத்தில் வேலை பார்த்தார். அதிலும் மனம் ஒன்றவில்லை; 'லாபமோ நஷ்டமோ, சொந்த வியாபாரம்தான் நமக்குச் சரி!' என்று பொடி கடையை ஆரம்பித்தார். அதைத் தானே டின்களில் அடைத்துக் கடைக்குக் கடை கால் நடையாகவே சென்று விற்றுவிட்டு வந்தார்.

ஏமாற்றும் பொய்யும் நிறைந்த உலகம் இவரை ஏய்த்தது. எனவே, அதையும் விட்டுவிட்டு அப்பளம் விற்கும் வியாபாரியாக மாறினார். அதுவே தற்போது இவருடைய நிரந்தரத் தொழிலாகி விட்டது. எனவே உலகம் இவரிடம் தோற்றது.

அத்துடன், ''உங்களுக்காகத்தான் ஓய்வொழிவில்லாமல் நான் உலகைச் சுற்றிக் கொண்டே இருக்கிறேன்!'' என்று சூரியபகவானும் இவரிடம் சொல்ல 'முடியவில்லை — காரணம், புற விளக்குக்குப் பதிலாக இவர் அக விளக்கை ஏற்றிக்கொண்டு விட்டதுதான்!

தந்தை பொன்னுசாமிக்கு ஐந்து குமாரர்கள். அவர்களில் நாலாவது குமாரர் இவர். காலஞ்சென்ற அண்ணன்மார் மூவரும் கடவுளுக்கு அடுத்தபடியாக இவரைச் சோதித்திருக்கின்றனர். அதாவது, தங்கள் மனைவிமார் மூவரையும் அவர்களுக்குப் பிறந்த எட்டுக் குழந்தைகளையும் இந்த அந்தகருடைய பொறுப்பிலே விட்டுவிட்டுச் சென்றிருக்கின்றனர். கடைக்குட்டி தம்பியார் இவருடைய சொந்தக் கிராமமான கூவத்தூரிலேயே இருக்கிறாராம். அங்கே தன்னைப் பொறுத்தவரை ஓரளவு வசதியுடன் வாழும், அவர், எப்போதாவது சென்னைக்கு வந்தால் கண்ணிழந்த அண்ணாவிடம் காசுக்குக் கை நீட்டுகிறாராம் — எப்படி அவர் சுயமரியாதை?

❋ ❋ ❋ ❋ ❋

# இதோ ஒரு சுயமரியாதைக்காரர்! — 6

**தோழர் முனுசாமி**

சேதாவின் பரம்பரையில் உதித்த தோழர் முனுசாமி இம்மா தம் வாசகநேயர்களுக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றார் பெருமையோடு பெருமிதத்தோடு

பட்டணத்தில் ராயபுரத்தில் பிறந்து வளர்ந்த இவர், கடந்த பதினைந்தாண்டுகளாக மாம்பலம் வாசியாகியிருக்கிறார்.

அரும்பு வியர்வை உதிர்த்து புவிமேல் தொழில் செய்வோரையெல்லாம் 'பிரம்மதேவன் கலையிங்கு நீரே!' என்று பெருமைப்படுத்துகிறார் அமரகவி. தொழிலுக்கு வந்தனை செய்வது நம் கடமை. செருப்புத் தைக்கும் சக்கிலியர் வகுப்பிற்குப் பெருமையுண்டு முனுசாமியினால் அந்தப் பெருமையில் தன்மானமும் சுயமரியாதைப் பண்பும் குரல் கொடுக்கின்றன. இவருக்கு வலது கை பிறப்பு முதல் 'விளங்காது' — வலிப்பு நோயின் விளைவு இது. இடது கை ஒன்றுதான் இவருக்குத் தோழன். வலது கை எந்நேரமும் 'படபட'வென்று ஊசலாடிக்கொண்டேயிருக்கும். அதை ஒருநிலைப் படுத்தி மடக்கிக்கொண்டால் தான், இடது கை வேலை செய்ய முடியும் இந்த இடது கையினால் தான் முனுசாமி செருப்புத் தைக்கிறார், லாடம் அடிக்கிறார், பாலிஷ் பூசுகிறார், தோலைக் கத்தியால் வெட்டுகிறார், நூலை ஊசியில் இணைத்துத் தைக்கிறார். உண்மையில் இந்நிலை அவருக்கு அமைந்த சோதனைக் கட்டம் தான்! சேதாவுக்கு இரண்டு கைகள் இருந்தும், 'பகவானின் கருணை' தேவைப்பட்டது ஆனால் நம் முனுசாமியின் ஒரு கையை — அதுவும் வலக்கையைப் படைத்த கடவுள் உணர்வற்றதாக்கி விட்டாலும் கூட, அதற்காக அவர் மனமொடிந்து விடவில்லை, தன்னம்பிக்கைத் துணையை வலது கையாக்கிக் கொண்டு உழைக்கத் தலைப்பட்டார். இரண்டு கைகளும் சேர்ந்து செய்ய வேண்டிய வேலைகளை அந்த ஒரே கையினால்

ஆர்வத்துடனும் சுறுசுறுப்புடனும் தோழர் முனுசாமி செய்யும் விந்தையைப் பார்த்தேன். அந்தக் கையில் சொக்குப்பொடி ஏதாவது வைத்திருக்கிறாரோ என்ற ஐயம்? ஆம்; அவர் நிஜமாகவே சொக்குப் பொடிதான் வைத்திருந்தார். அவரது உழைப்பும் தன்னம்பிக்கை யும்தான் அந்தச் சொக்குப்பொடி!

மாம்பலம் பாண்டிபஜாரில் நடைபாதை ஓரத்திலிருக்கும் ஒரு மரநிழல் தான், இவருக்கு தொழில் முறையில் அமைந்த 'ஷோ ரூம்'! புதுப்புது மோஸ்தரில் வகைவகையான செருப்புகள் தயாரிக் கிறார்; பழைய செருப்புகளுக்குப் புத்துயிர் கொடுக்கிறார். ஆறா வது வகுப்புவரை படித்திருக்கிறார், உலக உருண்டையை 'ஜாம் ஜாம்' என்று சுற்றியவாறு அமர்க்களமாக அரசியல் பேசுகிறார்.

'உன் நெற்றி வியர்வையில் நீ உன் அப்பத்தைச் சாப்பிடு!' — ஏசுநாதரின் வாக்கில் நண்பருக்குப் பெரும்மதிப்பு உண்டு.

"தன் கையே தனக்கு உதவின்னு ஒரு வாக்கம் சொல்லு வாங்க. அது என்வரைக்கும் அப்படியே மெய்தானுங்க, ஸார்! பாருங்களேன், இந்த என்னுடைய ஒரு கை தானுங்க இப்போ எனக்கு, என் பெண்சாதிக்கு, இரண்டு பிள்ளைங்களுக்கு எல்லாம் நிதம் சோறு போடுது! பொழுது விடிய இங்கே வருவேன், மறுபடியும் வீட்டுக்குப் போக இருட்டிப் போகும். தினமும் இரண்டு மூன்று ரூபாய்க்குக் குறைச்சலிருக்காதுங்க...!" என்று தன்னை மறந்த பெருமிதத்துடன், உழைப்பின் நம்பிக்கையுடன் தோழர் முனுசாமி சொல்கிறார்! இவருடைய குலத்தில் பிறந்து சோம்பேறிகளாய் ரௌடிகளாய் திரிபவர்கள், இந்தச் சுயமரியா தைக்காரரைப் பார்த்தாவது சுய உணர்வு பெறவேண்டுமென்று விழைகிறோம். எதிர்பார்க்கிறோம்!

— மனிதன், 1954

# விந்தன் வாழ்க்கையில் சில துளிகள்

1916—செப்டம்பர் திங்கள் 22-ம் நாள் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள நாவலூர் என்னும் சிற்றூரில் வேதாசலம்— ஜானகியம்மாள் தம்பதிகளுக்குத் தலைமகனாகப் பிறந்தார் கோவிந்தன். உடன் பிறந்தவர் சாமிநாதன் என்கிற இளவல் ஒருவர் மட்டுமே ஆவார்.

1921—சென்னை சூளை பட்டாளம் பகுதியில் உள்ள பி அண்ட் சி பஞ்சாலையின் புகழ் எவ்வளவு பெரியதோ அதைவிடப் பன்மடங்கு பெரியது அந்தப் பகுதியில் வாழும் தொழிலாளர்களின் போராட்ட உணர்வுகள்! அந்த மண் துப்பாக்கி சூடுகள், மரணங்கள் இன்னும் பிற வர்க்கப் போராட்டங்கள் நிகழ்வற்குக் களமாக அமைந்த மண். அம் மண்ணையே தமது வளரும் இடமாகவும், வாழும் இடமாகவும் கொண்டு இளமைக் கல்வியைத் துவக்கினார் கோவிந்தன்.

1926—இரண்டு தலைமுறையாகப் பஞ்சாலைத் தொழிலாளிகளாக வாழ்ந்து பழகிப்போன கோவிந்தனின் முன்னோர்கள், கோவிந்தனையும் பகுதி நேரப் படிப்பு, பகுதி நேரத் தொழில் என்னும் திட்டத்தின் கீழ் பஞ்சாலையில் சேர்த்தார்கள். ஆனால், அடிநாளிலேயே அடிமைத்தனங்களைக் கண்டு ஆவேசம் கொள்ளும் போக்கு இயற்கையாக அமைந்திருந்ததால் பஞ்சாலைத் தொழிலைக் கைவிட்டார் கோவிந்தன்.

1931—வசதியும் வருவாயும் ஓரளவிற்கு இருந்த போதிலும், கல்வி அறிவு இல்லாமையாலும், மூடப் பழக்க வழக்கங்களுக்கே முதல் இடம் கொடுத்ததாலும் வறுமை மிகுந்த வாழ்க்கையே தமது வாழ்க்கை என வாழ்ந்த கோவிந்தனின் பெற்றோர்கள் அவர் படிப்பில் கவனம் செலுத்தத் தவறினார்கள். எனினும், விழிப்பும் வெளிச்சமும் எதிர்கால வாழ்க்கைக்குத் தேவை

யென்பதை உணர்ந்த கோவிந்தன் இரவுப் பள்ளிகளில் படித்துத் தம் கல்வி அறிவை வளர்த்துக் கொண்டார்; அதனூடே ஓவியம் கற்க விரும்பி ஓவியப் பள்ளியில் சேர்ந்தார்.

1936—'கருவிலே திரு'வுடைய கோவிந்தன் ஜெமினி ஸ்டுடியோ விளம்பரப்பகுதியில் ஓவியராகப் பணியாற்றிய போது, அவர் பாட்டனார் ''படைக்கும் தொழில் தரித்திரத்தின் ஊற்று! '' என்று கோவிந்தனின் படைப்பாற்றலை முடக்கினார். அதன் பிறகே நண்பன் இராஜாபாதர் துணையால் டாக்டர் மாசிலாமணி முதலியார் நடத்தி வந்த 'தமிழரசு' என்னும் திங்கள் இதழில் அச்சுக் கோர்க்கும் தொழிலாளியாகச் சேர்ந் தார்.

1939—'தமிழரசு' இதழில் பாவேந்தர் பாரதிதாசன் போன்ற தமிழ்ப் புலவர்களும் அறிஞர்களும் தொடர்பு கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில் தமிழ் மேல் பற்றும் எழுத்தார்வமும் கொண்டிருந்த கோவிந்தன் அவர்களோடு பழகும் வாய்ப்பி னைப் பெறாதபோதிலும் அவர்கள் எழுத்தினை அச்சுக் கோர்க்கும் வாய்ப்பினைப் பெற்றார். சான்றாக பாவேந்தர் பாரதிதாசன் புனைந்துள்ள 'தமிழுக்கு அமுதென்று பேர்' என்னும் கவிதை வரிகளை முதன் முதலாக அச்சுக் கோத்தவர் கோவிந்தன் அவர்களே! 'தமிழரசு' இதழை விட்டு விலகி ஆனந்த போதினி, தாருல் இஸ்லாம் போன்ற இதழ்களில் பணியாற்றி தேர்ச்சிமிக்க அச்சுக்கோப்பாளராக ஆனந்த விகடனில் சேர்ந்தார். 30-4-39 அன்று லீலாவதி என்னும் பெண்மணியை மணந்தார்.

1940—தலைமகன் வரதராசன் பிறப்பு.

1941—சென்னை சூளை பட்டாளத்தில் 'ராயல் ஒட்டல்' என்னும் பெயரில் மிலிட்டரி ஒட்டல் ஒன்றை நடத்தி பெரும் நஷ்டம் அடைந்தார்.

1942—இராஜாபாதர் உதவியால் 'கல்கி' அச்சகத்தில் அச்சுக்கோப்பவராகச் சேர்ந்தார். இந்த ஆண்டில் தான் வி.ஜி. என்னும் பெயரில் 'கல்கி' இதழில் பாப்பா மலர் பகுதிக்குக் கதைகள் எழுத ஆரம்பித்தார்.

1943—பேராசிரியர் கல்கி அவர்களால் 'விந்தன்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு எழுதிய முதல் சிறுகதை "முல்லைக் கொடியாள்" இதே ஆண்டில் 'கல்கி' இதழின் ஆசிரியர் குழுவில் உதவி ஆசிரியராகச் சேர்ந்தார்.

1944—பாட்டனார், தந்தையார் ஆகியோர் இரு தாரங்களை மணந்தது போலவே விந்தனும் சரசுவதி அம்மையாரை 13-7-44 அன்று மணந்தார்.

1946—விந்தன் எழுதிய 'முல்லைக் கொடியாள்' என்னும் சிறுகதைத் தொகுப்பிற்கு தமிழ் வளர்ச்சிக் கழகம் முதற்பரிசு வழங்கிப் பாராட்டியது; கழகம் முதன் முதலாக அளிக்க முன்வந்த பரிசைப் பெற்ற முதல் எழுத்தாளர் விந்தன் அவர்களே ஆவார்!

1947—இல் 'வேலை நிறுத்தம் ஏன்?' என்ற சிறுநூலை எழுதி வெளியிட்டார்.

1948—அண்மையில் இயற்கை எய்திய முற்போக்காளர் முருகு சுப்பிரமணியம் நடத்திய 'பொன்னி' திங்கள் இதழில் **கண் திறக்குமா?** என்னும் தொடர்கதையை நக்கீரன் என்கிற பெயரில் எழுதினார், விந்தன் எழுதிய முதல் தொடர்கதை — நாவல் இதுவேயாகும்.

1950—கண் திறக்குமா? கதையை எழுதிப் பலரின் பார்வைக்கும்—பாதிப்புக்கும் ஆளான விந்தன், பேராசிரியர் கல்கியின் விருப்பத்திற்கு ஏற்றவாறு "**பாலும் பாவையும்**" என்னும் தொடர்கதையை கல்கி இதழில் எழுதினார்.

1951—'கல்கி' இதழை விட்டுவிலகி 'ஏவிஎம்' கதை இலாகாவில் சேர்ந்தார். "ஒரே உரிமை" என்னும் சிறுகதைத் தொகுப்பு டாக்டர் மு.வ.' முன்னுரையுடன் வெளிவந்தது.

1953—"சமுதாய விரோதி" என்னும் சிறுகதைத் தொகுப்பு கி. சந்திரசேகரன் முன்னுரையுடன் வெளிவந்தது. விந்தன் திரைக் கதை—வசனம் எழுதி வெளிவந்த முதல் திரைப்படம் 'வாழப் பிறந்தவள்'.

1954—ஆகஸ்ட் திங்கள் 15ம் நாள் 'மனிதன்' மாத இதழை வெளியிட்டார், விலை நாலணா. இவ்விதழ் பத்து இதழ்கள் மட்டுமே வெளிவந்தது.

1956—புதுமைப் பிரசுரம் வீ. இராமசாமி விரும்பியபடி பென்னாடம் எனும் கிராமத்தில் தங்கி 'பசிகோவிந்தம்' என்கிற புடை நூலை எழுதினார்.

1957—'அமுதசுரபி' மாத இதழில் 'அன்பு அலறுகிறது' என்னும் பெயரில் தொடர்கதை எழுதினார். இக்கதை தன்னுடைய 'சிநேகிதி' நாவலைத் தழுவியிருப்பதாக—விமர்சனம் செய் வதாக எழுத்தாளர் அகிலன் விந்தன் பேரில் வழக்குத் தொடுத்தார்.

1959—புத்தகப் பூங்கா' என்கிற பெயரில் பதிப்பகத்தை ஆரம் பித்து தோழர் ஜெயகாந்தனின் 'ஒருபிடி சோறு' என்னும் சிறுகதைத் தொகுப்பின் இரண்டாம் பதிப்பை வெளிக் கொணர்ந்தார்.

1960—அமுதசுரபி' இதழில் 'மனிதன் மாறவில்லை' என்னும் தொடர்கதையை எழுதினார். இதே ஆண்டில் சொந்தமாகத் திரைப்படம் தயாரிக்க எண்ணி சிலருடன் கூட்டுச்சேர்ந்து 'மல்லிகா புரொடக்ஷன்' என்னும் பெயரில் திரைப்படக் கம்பெனியைத் துவக்கினார்.

1961—"கனவிலே வந்த கன்னி" என்னும் தலைப்பில் இராணி வார இதழில் தொடர்கதை எழுதினார். இக்கதையே பின்னால் 'காதலும் கல்யாணமும்' என்ற பெயரில் நூலாக வெளிவந்த போது க.நா.சு. முன்னுரை எழுதினார்.

*1962*—'முன்னணி' மாத இதழில் '**ஏமாந்தவுதான் கொடும்பீர்களா**' என்ற சிறு கதையை விந்தன் எழுதியபோது இக்கதையைக் கவிஞர் கண்ணதாசன் நாடகமாக்க விரும்பினார். பின்னால் இக்கதை இந்தியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

*1964*—ஜூலை திங்கள் 15-ம் நாள் ''பாலும் பாவையும்'' நாவல் மு. பரமசிவம் அவர்களால் நாடகமாக்கப்பட்டு சென்னை இராஜா அண்ணாமலை மன்றத்தில் அரங்கேறியது.

*1967*—டிசம்பர் திங்கள் 17-ம் நாள் 'பாலும் பாவையும்' நாவல் நாடகமாக சென்னை வானொலியிலும் அனைத்திந்திய மொழி களிலும் ஒலிபரப்பப்பட்டது இதே ஆண்டில் 'தினமணி கதிர்' ஆசிரியர் குழுவில் உதவி ஆசிரியராகச் சேர்ந்தார்.

*1974*—'கதிர்' பத்திரிக்கையில் இலக்கியப் பணியாற்றிப் பல எதிர்பார்ப்புகளுடன் வாழ்ந்து கொண்டிருந்தவர் ஒரு நாள் எதிர்பாராமல் ஓய்வு பெற்றார்.

*1975*—''வாழ்ந்தாலும் 'லோ சர்க்கி'ளோடு வாழ்வேன் செத்தாலும் 'லோ சர்க்கி'ளோடு சாவேன்!'' என்று சொல்லிக் கொண்டிருந் தவர், தமது குடும்பத்துக்குத் தம் படைப்புகளையே சொத் தாக்கி விட்டு ஜூன் திங்கள் 30-ம் நாள் செவ்வாய்க்கிழமை காலை 11-மணியளவில் மார்புவலி ஏற்பட்டு மரணம் அடைந்தார். விந்தன் வாழ்ந்த ஆண்டுகள் ஐம்பத்தொன்ப தற்கு எண்பத்திரெண்டு நாட்கள் குறைவாகும்

> **''இருப்பவனைப் பற்றி எழுதி அவனுடைய பணத்துக்கு உண்மை இரையாவதைவிட, இல்லாதவனைப் பற்றி எழுதி அவனுடைய அன்புக்கு, உண்மை இரை யாவதே மேல்!''**

**— விந்தன்.**

# இந்த வரிசையில்...

| | | |
|---|---|---|
| டாக்டர் தயாவின் தொடர்கின்ற பயணம் | .... | ரூ 40 00 |
| மக்கள் எழுத்தாளர் விந்தன்<br>— மு. பரமசிவம் | | ரூ 9 00 |
| தமிழ்த் தென்றல் திரு.வி.க.வின் நெஞ்சம்<br>— மா. சேசையா | .... | ரூ. 16.00 |
| நாடுபோற்றும் நாரண துரைக்கண்ணன்<br>— மு பரமசிவம் | ... | ரூ. 20 00 |
| கவிஞர் தமிழ் ஒளி<br>— மு. பரமசிவம் | . | ரூ. 10 00 |
| மழலை இலக்கியத்தின் மறுமலர்ச்சிக் கவிஞர்:<br>பி.வி. கிரி | . . | ரூ 28.00 |
| எழுத்துச் செல்வர் வல்லிக்கண்ணன்<br>— மு. பரமசிவம் | . . | ரூ 45 00 |
| கிறிஸ்தவப் புரட்சியாளர் ககாவா<br>— தமிழில் : ஜோதிமுத்து | | ரூ. 18 00 |
| எழுத்தாளர் கு. அழகிரிசாமி<br>வாழ்க்கை வரலாறு | . . | ரூ 75.00 |
| என் நினைவுகளில் பாவேந்தர்<br>— த கோவேந்தன் | .. | ரூ 10 00 |
| பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்<br>— ச செந்தில்நாதன் | . . | ரூ 40 00 |
| கிறிஸ்தவ அருட்கவிஞர்கள்<br>— தி தயானந்தன் பிரான்சிஸ் | .. | ரூ. 45 00 |
| என் சுயசரிதை<br>— அருள்திரு எஸ் பரமானந்தம் | . | ரூ 40 00 |

*140th Year Publication*

**VINDAN KATTURAIGAL**

COMPILED. BY M. PARMASIVAM

**விலை ரூ. 45.00 (இந்தியாவில் மட்டும்)**